Registered as a News Paper
பக்கம் - 24
www.eezhanatham.com

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் - 16 வெள்ளி - 22 22 - 28 - யூலை - 2005



# இருநூறுவருட பழமைவாய்ந்த கோயிற்குஞ்சுக்குளம்



"எங்கட கிராமம் கைலைவன்னியன் காலத்தோடு தொடர்புடைய கிராமம். இப்பவும் எங்கட இந்த காட்டில இடிஞ்ச செங்கல் கட்டடங்கள், சதுரவடிவான கிணறு என்று வரலாற்றுச் சின்னங்கள் நிறைய இருக்கு. அதைவிட இருநூறு வருட பழமையான ஊர்"

இது கோயிற் குஞ்சுக்குள கிராம மக்கள் தங்கள் கிராமம் தொடர்பாக பெருமையாகக் கூறிக் கொள்ளும் விடயங்கள்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் இருக்கின்ற இந்தக் கிராமம் இருநூறு ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதனை நம்பமாட்டீர்கள் என்றால் நீங்களும் கோயிற் குஞ்சுக்குளத்திற்குச் செல்லுங்கள். அங்கு காணப்படுகின்ற பனைகளும் தென்னைகளும் கிராமத்தின் வயதினை கூறுகின்றன.

இதைவிட அவ்வூரிலேயே பிறந்து நூறு வயதினை கடந்து நான்கு தலைமுறைகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சில முதியவர்களும் சாட்சி கூறுவார்கள்.

அழகான, அமைதியான, பசுமையான அந்தக் கிராமத்திற்கு நீங்கள் செல்லப் போகின்றீர்களா, வழி இதுதான்.

இப்போது நீங்கள் கிளிநொச்சியில் இருந்து வருகின்றீர்கள் என்று வைத்துக்கொண்டால் புளியங்குளத்தை அடைந்ததும் "லொறி பாக்" எனும் இடத்தில் வலது புறமாக இராமனூர் ஊடாக ஒரு ஒழுங்கை செல்கிறது. அதனூடாக 25கிலோமீற்றர் அளவில் செல்ல வேண்டும்.

செல்லும்போது நீங்கள் பலவித அச்ச உணர்வுகளுக்கு ஆளாகுவீர்கள். ஏனெனில் இரண்டு பக்கமும் அடர்ந்த காடுகளினால் சூழப்பட்ட வீதி அது. ஆனால், A9 வீதியைப் போன்று அல்லாமல் குலுங்காமல் கொள்ளாமல் ஓர் சீரான பயணமாக் அமையும். காரணம் தற்காலிகமாக கிரவல் இடப்பட்டு செப்பனிடப்பட்ட வீதி. வீதியினை உன்னிப்பாகக் கவனித்தீர்கள் என்றால் அந்த கிரவல்கள் உங்களுக்கோர் செய்தியினை கூறும். அதாவது வரும் மழைகாலம் வரைக்குமே நாம் இங்கிருப்போம். மழைகாலங்களில் வரும் வெள்ளங்களோடு நாம் சென்றுவிடுவோம் என்று.

இதனையும் அவதானித்தபடி உங்கள் பயணம் தொடர்ந்தால் மகிழங்குளம் எனும் ஓர் ஊரினை அடையும் வரை மனித நடமாட்டத்தினையே காணமாட்டீர்கள். சில வேளைகளில் எம்மைப்போன்று சிலர் சென்றுவரலாம்.

இப்போது நீங்கள் மகிழங்குளத்திற்கு வந்து விட்டீர்கள். வீதி அதன் வரையறையை மீறிவிடுகிறது. குன்றும் குழியுமாக நீரும் சேறுமாகத்தான் காணப்படும். அதனையும் கடந்து வாருங்கள் 25 கிலோ மீற்றர் தூரத்தினைப் பூர்த்தி செய்திருப்பீர்கள். அப்படியானால் நீங்கள் நிற்பது இப்போது கோயிற் குஞ்சுக்குளத்தில்.

இப்போது நீங்கள் நிற்கின்ற பாதையிலிருந்து நேராக இன்னும் சில கிலோமீற்றர் தூரம் பயணம் செய்தால் மூன்று முறிப்பு, பனங்காமம், நட்டாங் கண்டல் வழியே மல்லாவியையும் வந்தடையலாம். இனி உங்கள் விருப்பம்.

கோயில் குஞ்சுக்குளம் பற்றிய தகவல்களின்படி 1807 ஆண்டு ஆங்கிலேய அதிகாரி ரேணரின் அறிக்கைப்படி வவுனியா மாவட்டத்தில் 547 குளங்கள் இருந்தன. அவற்றுள் கோயிற் குஞ்சுக்குளமும் ஒன்று.

தற்போது இந்தக் கிராமத்தில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 750 மக்கள் வாழ்கின்றனர். இவற்றுள் 30 குடும்பங்கள் தற்காலிகமானவர்கள். மக்களின் பொருளாதாரம் விவசாயம் மட்டுமே.

அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுகின்ற அந்தக் கிராமத்தில் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்ந்துவருகின்றனர். போக்குவரத்து, மருத்துவம், சுகாதாரம், தொடர்பாடல் போன்ற பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள மக்கள் 40 கிலோ மீற்றருக்கு அப்பால் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுனியா நகருக்கே செல்லவேண்டும். அந்த வகையில் இவ்வூர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந.செல்வராசா அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்.

"எமது கிராமத்தைப் பொறுத்தவரை போக்குவரத்து மிகப்பெரும் பிரச்சினையாக உள்ளது. இதனால் விவசாயக் கிராமமான இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் சந்தைப்படுத்துவது என்பது மிகக் கடினமே.

மேலும் இப்போதுதான் திலீபன் மருத்துவமனை தங்கட சேவையினை வழங்கிவருகின்றது. இதற்கு முன் மல்லாவி அல்லது வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குத்தான் மருந்துத் தேவைகளுக்குச் செல்லவேண்டும்.

மற்றும் ஏனைய அரச செயலக நடவடிக்கைக்கும் இப்படித்தான் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் வவுனியா நகருக்குச் சென்று வரவேண்டியுள்ளது. அத்தோடு கல்வி வசதியினை பொறுத்தவரை தரம் ஒன்பதுக்குப் பிறகு பிள்ளைகளை வெளிப்பாடசாலைகளுக்கு அனுப்பித்தான் படிப்பிக்கவேண்டும். இந்த நிலையில் வசதிகள் இல்லாத பெற்றோர் தங்கள் பிள்ளைகளை தரம் ஒன்பதுடன் பாடசாலையிலிருந்து நிறுத்திவிடுவார்கள். மேலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை பொறுத்தவரை கட்டடம்தான் பெரிசாக இருக்கிறதே தவிர வேறொன்றும் அங்கில்லை" என்றார் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர்.



கோயிற் குஞ்சுக்குளம் அ.த.க. பாடசாலையைப் பொறுத்தவரை அதுவும் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இயங்கிவருகின்றது. தரம் ஒன்பது மட்டும் காணப்படும் இப்பாடசாலையில் 170 மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். பதினொரு ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இதில் மூன்று ஆசிரியர்கள் தொண்டர்களாக உள்ளனர். பாடசாலை தொடர்பாக அதிபர் திருமதி ஜெயந்தி இராமச்சந்திரன் கூறும்போது,



எங்களுடைய பாடசாலையை பொறுத்த வரையில் ஆசிரியர் பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகக் காணப்படுகிறது. இங்கிருக்கின்ற ஆசிரியர்கள் எல்லாம் ஆரம்பக் கல்விக்குரிய ஆசிரியர்கள். நாங்கள்தான் அவர்களை இங்குள்ள உயர் வகுப்புகளுக்கும் படிப்பிக்க விட்டிருக்கிறம்.

அத்தோடு ஆரம்பக் கல்வியை பொறுத்தவரை ஆசிரிய ஆலோசகர்கள் வந்து போகிறார்கள். ஆனால் உயர்வகுப்புகளுக்கு வருவது மிக மிகக் குறைவு. மேலும் வவுனியா மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் இராணுவக்கட்டுப்பாட்டிற்குள் உள்ள பாடசாலைகளோடு ஒப்பிடுகையில், எங்களுடைய பாடசாலைகளின் வசதி வாய்ப்புகள் குறைவு.

அத்தோடு இங்கு மலசலகூட வசதிகள் போதியளவு இல்லை. மற்றும் எல்லா ஆசிரியர்களும் வெகு தூர பிரதேசங்களிலிருந்து வருபவர்கள். எனவே அவர்கள் இங்கு தங்கி நிற்பதற்கு ஒழுங்கான விடுதி வசதிகள் இல்லை. போன்ற பல்வேறு பிரச்சினைகளுடன்தான் எங்களுடைய பாடசாலை இயங்கிக்கொண்டிருக்கின்றது என்கிறார் பாடசாலை முதல்வர்.

மேற்போன்ற பல்வேறு இடர்களுக்கு மத்தியில் இருக்கின்ற இவ்விவசாயக் கிராமத்தில் விவசாயத் திணைக்களத்தின் செயற்பாடுகள், மேலும் பாடசாலையைத்தவிர அரச திணைக்களங்கள் என்று சொல்லுமளவுக்கு ஒன்றுமில்லை. அத்தோடு இம் மக்கள் போக்குவரத்திற்கு மிகவும் நெருக்கடியை எதிர்நோக்குகிறார்கள். மல்லாவியிலிருந்து நட்டாங்கண்டல், பனங்காமம், மூன்றுமுறிப்பு, கோயிற்குஞ்சுக்குளம் ஊடாக புளியங்குளம் வரை பேருந்துச் சேவையினை நடத்தலாம். ஆனால் சில சில இடங்களில் வீதிகள் திருத்த வேண்டியுள்ளது.

எனவே திருத்தவேண்டிய இடங்களில் வீதிகளை புனரமைப்புச் செய்து ஒரு பேருந்துப்போக்குவரத்தையாவது ஒழுங்கு செய்தால் இப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கும் சரி விவசாயத்திற்கும் சரி பெரும் உதவியாக இருக்கும். மேலும் நிவர்த்தி செய்யக்கூடிய பிரச்சினைகள் பலவுண்டு. அவற்றையும் தீர்த்து வைத்தல் என்பது காலத்தின் அவசியமாக உள்ளது.

எனவே உரியவர்கள் இக் கிராமத்தினை கவனத்தில் எடுத்து இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கவேண்டும் என்பதே அம் மக்கள் அனைவரதும் வேண்டுகோளாக உள்ளது.

-சுழியன்-



# ஒரு யுத்தத்தைத் தடுக்க யாரால் முடியும்?

நிலாந்தன்





புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாகிய புதிதில் லண்டனிலிருந்து ஒரு மூத்த தமிழர் வந்திருந்தார். லண்டனில் சில தசாப்தங்களுக்கு மேலாக வாழ்ந்துவரும் அவர் ஈழப்போராட்டத்துடன் அதிகம் ஈடுபாடுடையவர். முன்பு கிழக்குத் தீமூரில் விடுதலைக்காகப் போராடிய சில போராட்டத் தலைவர்கள் லண்டனில் புகலிடம் தேடி வந்தபோது அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக்கிறது. இப்பொழுது அந்தப் போராளித் தலைவர்களில் ஒருவர் கிழக்குத் தீமூர் அமைச்சரவையில் ஒரு பிரதானியாக இருக்கிறாராம். இலங்கைத்தீவில் புரிந்துணர்வு உடன்படிக்கை உருவாகிய பின் அவர் ஒருநாள் இவருடன் தொலை பேசியில் தொடர்புகொண்டாராம். “எங்களைக் கேட்டால் சொல்லுவோம் இந்த மேற்குநாடுகள் செய்யும் சமாதானம் எப்படிப்பட்டது என்று” என்று அவர் இந்த உரையாடலின் போது கசப்போடு சொல்லியிருக்கிறார்.

இலங்கைத்தீவில் அமெரிக்கா தலைமையிலான மேற்குநாடுகள் அனுசரணை செய்துவரும் சமாதான முயற்சிகளில் ஏற்கனவே கோறையாகிக் கொண்டு வந்த யுத்தநிறுத்தம் இப்பொழுது நொறுங்கிச் சிதறும் ஒரு கட்டத்திற்குக் கிட்டவாக வந்துகொண்டிருக்கிறது.

சூடானில் இந்த மேற்கு நாடுகளின் அனுசரணையோடு ஒப்பீட்டளவில் மிக உயர்வான ஒரு சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட அதே காலப்பகுதியில் இலங்கைத்தீவில் இப்படியொரு நிலை தோன்றி யிருக்கிறது.

எப்பொழுது யுத்தநிறுத்தம் தன்னுள் ஒரு மென்தீவிர யுத்தத்தை வைத்துக்கொண்டிருக்கும் நிலை தோன்றியதோ அப்பொழுதே யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒரு யுத்தக் கண்காணிப்புக்குழுவாக மாறிவிட்டிருந்தது. இப்பொழுது கிழக்கில் நடப்பவைகளை வைத்துப் பார்த்தால் இனி ஒரு யுத்தத்தைத் தான் யுத்தநிறுத்தம் என்று அழைக்க வேண்டியிருக்குமோ என்று யோசிக்க வேண்டியுள்ளது.

அண்மையில் புலிகளின் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கூறியிருப்பதன் அர்த்தத்தில் சிறிலங்கா அரசாங்கம் புலிகளாக ஒரு யுத்தத்தைத் தொடங்குமாறு அவர்களைத் தூண்டிவருகிறது. அதாவது சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஒரு யுத்தம் தேவைப்படுகிறது. ஆனால் அவர்கள் அதைத் தாங்களாகத் தொடங்கத் தயாரில்லை.அந்த யுத்தத்தை புலிகளாகத் தொடங்கும் விதத்தில் புலிகளைச் சீண்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்போல் உள்ளது. இந்நிலையில் புலிகளும் தாங்களாக ஒரு யுத்தத்தைத் தொடங்கத் தயாரில்லை என்றால் நிலைமை எப்படியிருக்கும்?

இப்போதிருப்பதைப்போலவே ஒரு மென்தீவிர யுத்தத்தை யுத்தநிறுத்தம் என்று அழைக்கவேண்டியிருக்கும். யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் ஒரு யுத்தக்கண்காணிப்புக்குழுவாக தொடர்ந்தும் இருக்கும்.

இது மிகவும் அபத்தமான ஆனால் ஆபத்தான ஓர் அரசியல்.

**புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் கூறியிருப்பதன் அர்த்தத்தில் சிறிலங்கா அரசாங்கம் புலிகளாக ஒரு யுத்தத்தைத் தொடங்குமாறு அவர்களைத் தூண்டிவருகிறது. அதாவது சிறிலங்கா அரசாங்கத்துக்கு ஒரு யுத்தம் தேவைப்படுகிறது. ஆனால் அவர்கள் அதைத் தாங்களாகத் தொடங்கத் தயாரில்லை. அந்த யுத்தத்தை புலிகளாகத் தொடங்கும் விதத்தில் புலிகளைச் சீண்டுவதே அரசாங்கத்தின் நோக்கம்போல் உள்ளது.**

அரசாங்கம் தானாக நிறுத்தினால் தவிர இந்த மென்தீவிர யுத்தம் தணியப்போவதில்லை. கண்ணுக்குக் கண்; பல்லுக்குப்பல் என்று வளர்ந்து சென்று ஒரு கட்டத்தில் செல்லுக்குச் செல் என்று இது பெருக்கும்போது அது முழு அளவு வன்தீவிர யுத்தமாக மாறும். அரசாங்கம் அதைத்தான் விரும்புகிறது. அப்படியொரு வளர்ச்சியை நோக்கியே நாடும் போய்க் கொண்டிருக்கிறது. இந்நிலையில் யார் நினைத்தால் இந்த யுத்தத்தை தடுத்துநிறுத்தலாம்?

புலிகளாக நினைத்து அது முடியாது. ஏனென்றால் தொடர்ந்து தாக்கப்படும்போது வாளாயிருப்பது புலிகளுடைய இயல்பல்ல. அரசாங்கம் தானாக நினைத்து இதை நிறுத்தா்து. ஏனெனில் அவர்களுக்கு இப்பொழுது ஒரு யுத்தம் தேவை.

ஒரு யுத்தம்தான் சந்திரிகாவுக்கு புதிய வாய்ப்புக்களைத் திறந்துவிடும் என்று அவர் நம்புகிறார். ஆயின் யார் நினைத்தால் இந்த யுத்தத்தை தடுத்துநிறுத்தலாம்?

யார் இந்த சமாதான முயற்சிகளை பின்னிருந்து ஊக்குவிக்கிறார்களோ யார் இந்த யுத்தநிறுத்தத்தை உருவாக்க முன்னின்றார்களோ அவர்களால்தான். அதாவது மேற்குநாடுகளால்தான் இதுமுடியும்.

ஒரு பொதுக்கட்டமைப்பை நோக்கி சந்திரிகாவை அவர்களால் அ[illegible]க்கமுடியும் என்றால் பொதுக் கட்டமைப்பு விசயத்தில் இந்தியாவை எதிர்ப்புக்காட்டாது இருக்கச்செய்ய முடியும் என்றால் இப்பொழுது ஒரு யுத்தம் மூள்வதைத்தடுக்கவும் அவர்களால் தான் முடியும். கிழக்கைரோப்பாவிலும், ஆபிரிக்காவிலும் கிழக்குத் தீமூரிலும் அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள். எனவே அவர்கள் நினைத்தால் சந்திரிகாவை வற்புறுத்துவது ஒரு பெரிய காரணம் அல்ல. ஆனால் இதுவிசயத்தில் அவர்கள் போதிய பொறுப்புணர்ச்சியுடன் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போதுள்ள நிலைமைகளுக்கு சந்திரிகாவைத் திட்டிக்கொண்டிருப்பதில் பலனில்லை. ஏனெனில் சந்திரிகாவும் அவரைப்போன்ற எல்லா சிங்களத் தலைவர்களும் அப்படித்தான் இருப்பார்கள். சந்திரிகா சமாதானத்துக்கு விசுவாசமாக இருப்பார் என்று நம்பி தமிழர்கள் சமாதானம் செய்ய முன்வரவில்லை. அல்லது ரணில் கூட விசுவாசமானவர் என்று நூறு வீத நம்பிக்கை தமிழர்களிடம் இருந்ததில்லை. இது விசயத்தில் மேற்குநாடுகளின் அனுசரணைதான் தமிழர்களால் ஒப்பீட்டளவில் நம்பக்கூடிய ஓர் அம்சமாக இருந்தது. அதிலும் கூட கவனமாய் இருக்க வேண்டும் என்று கிழக்குத்தீமூர்க்காரர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த யுத்தநிறுத்தம் இப்படி அசாதாரணமாக மூன்றரை ஆண்டுகள் இழுத்திழுத்து வந்ததே ஒருவிதத்தில் அந்த ‘நம்பிக்கை’யின் பெயராலும் அதனால் புலிகளுக்குக் கிடைத்துவரும் அங்கீகாரத்தின் பெயராலும்தான். எனவே சந்திரிகா சமாதானத்திற்கு விசுவாசமில்லை என்றே சொல்லிக்கொண்டிருப்பதைவிடவும் மேற்கு நாடுகள் தமது பொறுப்பை சரிவர நிறைவேற்றத் தவறியதன் விளைவே இன்றுள்ள நிலை என்றே சொல்லவேண்டும்.

சந்திரிகாவின் கனவில் போதிசத்துருவர் தோன்றி உபதேசம் செய்ததன் விளைவாகவே சந்திரிகா பொதுக் கட்டமைப்புக்கு வரச் சம்மதித்தார் என்று நம்புவதற்கு இது ஒன்றும் ஜாதகக்கதையல்ல. தமிழர்கள் வீரம், காயம், பயம், துரோகம் என்பவற்றின் கலப்பாய் உருவான ஒரு கதை இது. சந்திரிகாவை மேற்குநாடுகள் நிர்ப்பந்தித்தது போதாது என்பதே இப்போதுள்ள குற்றச்சாட்டாய் இருக்க முடியும்.

ஒரு பொதுக்கட்டமைப்பை நோக்கி அவரை உந்தித்தள்ளிய அதே மேற்குநாடுகள் பின்பு ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியினை சாந்தப்படுத்தும் நோக்கில் நிதி உதவிகள் விசயத்தில் தமிழர்களை கைவிட்டுவிட்டார்கள். இதை இன்னும் காட்டமான வார்த்தைகளில் சொன்னால் பொதுக்கட்டமைப்பை அவர்களே காட்டிக்கொடுத்துவிட்டார்கள். தாங்கள் வலிந்துபெற்ற பிள்ளையை தாங்களே தூக்கி வரலாற்றின் குப்பைத்தொட்டிக்குள் போடுவது போல அமெரிக்காவும், ஜப்பானும் அண்மை வாரங்களில் நடந்துகொண்டன.

அவர்கள் உருவாக்கிய ஒருவித எதிர்மறையான அரசியல் சூழ்நிலைக்குள்தான் பொதுக்கட்டமைப்பைக்குறித்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வந்திருக்கிறது.

இத்தீர்ப்பு தமிழர்களுக்கு ஒன்றும் புதியதல்ல. சிறிலங்காவின் நீதித்துறையிடமிருந்து இப்படியொரு தீர்ப்புத்தான் வரமுடியும். சிறிலங்காவின் நீதி முறைமைகளில் நம்பிக்கை இழந்தபடியால்தானே தமிழர்கள் ஆயுதம் ஏந்தவேண்டி வந்தது? பிறகெப்படி அந்த நீதித்துறையிடம்போய் நீதி கேட்பது? சிறிலங்காவின் நாடாளுமன்றம், படைத்துறை, புலனாய்வுத்துறை, காவல்துறை போன்றவற்றிலிருந்து அதன் நீதித்துறையை பிரித்துப் பார்க்கமுடியாது.

தவிர, பொதுக்கட்டமைப்பு ஒரு சட்டப்பிரச்சினையும் அல்ல. அது முதலாவதாக ஒரு மனிதாபிமானப் பிரச்சினையும், அரசியல் பிரச்சினையுமாகும்.கொழும்பில் ஏதாவது ஒரு அரசியல் விவகாரம் சட்டப்பிரச்சினையாக்கப்படுகிறது என்றால் அது தீர்க்கப்படாது இழுபடப்போகிறது என்றே அர்த்தம்.

இப்படி எல்லாமும் எதிர்மறை வளர்ச்சிகளாய் காணப்படும் ஒரு சூழலில் அனுசரணையாளர்களின் தலையில்தான் அனைத்துச்சுமைகளும் வைக்கப்பட்டிருக்கின்றன.

கருணாவை வைத்துக்கொண்டு ஒரு யுத்தத்தை நடாத்திப் பார்க்க சந்திரிகா ஆசைப்படுவது போலத் தெரிகின்றது.

கருணாவை வைத்திருப்பதால் புலிகளை முறியடிக்கலாம் என்று அவர் நம்பும்வரை இத்தகைய யுத்தத்திற்கான ஏதுநிலைகளும் அப்படியே தணியாதிருக்கும். ஒரு யுத்தத்தில் மட்டும்தான் இதை சோதித்துப்பார்க்க முடியும்.

இப்படிப்பார்த்தால் இப்பொழுது சமாதானத்தின் வழியில் தோன்றியுள்ள தடைகளை அகற்ற ஒரு யுத்தத்தால்தான் முடியும்போலத் தோன்றுகிறது.

மேற்குநாடுகளும் அப்படி நம்புகின்றனவா? அதனால் தான் நிலைமை கையை மீறிப்போகும் அளவிற்கு பார்த்துக்கொண்டிருக்கின்றனவா?

இது விசயத்தில் சந்திரிகாவை நிர்ப்பந்திப்பது ஒரு பெரிய வேலையல்ல. கடந்த மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகளுக்கூடாக கிடைத்திருக்கும் சித்திரத்தின் அடிப்படையில் அவர்கள் முடிவுகளை எடுப்பார்களாக இருந்தால் ஒரு யுத்தம் மூள்வதை அவர்களால் தடுக்கமுடியும்.

தென்சூடானிலும், கிழக்குத் தீமூரிலும் மேற்குநாடுகள் போராட்ட அமைப்புக்களுடன் அனுசரித்துப் போனதைவிடவும் ஒப்பீட்டளவில் குறைந்தளவே இலங்கைத்தீவில் புலிகளுடன் அனுசரித்துப் போகிறார்கள்.

இப்பத்தியில் முன்பு பலதடவைகள் சுட்டிக் காட்டப் பட்டதைப்போல புலிகளைக் குறித்த ஒருவித இரட்டை அணுகுமுறையே மேற்கின் சமாதானத்திற்கான உபாயமாக இருந்து வருகிறது.

அமெரிக்கா ஒரு கண்டிப்பான மூத்த அண்ணனைப்போல புலிகளுடன் ஒப்பீட்டளவில் குறைந்தளவு நெகிழ்வுத்தன்மையுடன் நடந்துகொள்ள, பிரிட்டன் தவிர ஏனைய ஐரோப்பிய நாடுகள் கண்டிப்பில்லாத இளைய அண்ணனைப்போல புலிகளுடன் ஒப்பீட்டளவில் கூடுதலான நெகிழ்வுத் தன்மையுடன் நடந்துகொள்ளும் ஒரு போக்கினூடாகவே இதுவரையிலுமான மூன்றரை ஆண்டுகால சமாதான முயற்சிகள் நகர்த்தப்பட்டுவந்துள்ளன.

இந்த இரட்டை அணுகுமுறையின் காரணமாகவே சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதும் சமாதானத்துடன் விளையாடுவதற்கான துணிச்சலையும் கால அவகாசத்தையும் பெற்றுவந்துள்ளது. இந்தத் துணிச்சல் இப்பொழுது யுத்தத்துடன் விளையாடும் ஒரு வளர்ச்சிக்கு வந்துவிட்டது. எனவே இத்தருணத்தில் மேற்குநாடுகளின் முடிவில்தான் எல்லாமும் தங்கியிருக்கிறது.

அவர்கள் எடுக்கப்போகும் முடிவுகளே இலங்கைத்தீவில் அடுத்தகட்டம் எது என்பது தீர்மானிக்கப் போகின்றனர்.

இப்போதுள்ள பிரச்சினைகள் பலவற்றிற்கும் ஒரு யுத்தம்தான் தீர்வு என்ற ரீதியில் சிந்தித்தால் நான்காம் கட்ட ஈழப்போர் ஒன்று வந்து அதில் இப்போதுள்ள வலுச்சமநிலை மாற்றப்பட்டு உருவாகப்போகும் ஒரு புதிய வலுச்சமநிலைமீது மற்றொரு புதிய சமாதானத்தைக் கட்டியெழுப்பலாம் என்று மேற்குநாடுகள் நம்புகின்றனவா? அல்லது இந்த அரைமென்தீவிரயுத்தம் ஒரு முழு வன்தீவிர யுத்தமாக பெருப்பதற்கிடையில் எதையாவது செய்யமுடியும் என்று அவர்கள் நம்புகிறார்களா?


எதுவோ, யுத்தமோ சமாதானமோ எதுவும் இப்பொழுது அதிகபட்சம் அவர்களுடைய தெரிவாகத்தான் காணப்படுகிறது.

# பொதுக்கட்டமைப்பின் மரணம்

"தாக்கப்பட்டால் திருப்பித் தாக்குவதற்கான உத்தரவை அல்லது அதிகாரத்தை தனது துருப்புக்களுக்கு சிறிலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட வழங்கியுள்ளார்'' என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் "புலிகளின் தளபதிகள், போராளிகள், பொறுப்பாளர்களை எந்த இடத்திலும் சுடலாம்'' என்ற அனுமதி சிங்களப்புடைகளின் அனைத்து அலகுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனுடைய உண்மையான அர்த்தம் புலிகளை வலிந்து தாக்குதல்களுக்கு தூண்டுவது என்பதாகும். இதன் தர்க்கபூர்வ வளர்ச்சி யுத்தமாகமாறி,




தற்போது சோதனையிடப்படுகின்றனர்.

தெருச்சுற்றிக் காவல் தீவிரமாகியுள்ளது. திடீர் வீதித் தடைச் சோதனைகள் பரவலாகியுள்ளன. ஓமந்தையிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள அரசன்குளத்தில் சில நாட்களுக்கு முன்னர் பயணிகள் சோதனையிடப்பட்டுள்ளனர். முற்று முழுதான படைவலயத்துக்குள் இந்த மீள் சோதனையின் தேவை பற்றி மக்கள் கேள்வியெழுப்பி விசனம் தெரிவிக்கின்றனர்.

கைதுகளும் தாக்குதல்களும் அரங்கேறத் தொடங்கிவிட்டன. மர்மக் கொலைகள் நடக்கின்றன. படையினரின் துவக்குச்சுடுகளுக்கு பலியானவர்கள் "ஆயுதங்களுடன் வந்திறங்கியவர்கள்'' என்ற பெயர் பெறுகின்றனர். சில பாதைகள் பொது மக்களின் போக்குவரத்துக்குத் தடுக்கப்படுகின்றன. மட்டக்களப்பு கிரான் பாலத்தூடான போக்குவரத்து இரவில் முடக்கப்படுகின்றது. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோள் கூட இவ்விடயத்தில் நிராகரிக்கப்படுகிறது.

ஆக யுத்தம் தன் சகல கல்யாணக் குணங்களுடனும் ஆரோகணிக்கிறது என்பதையே இவை வெளிப்படுத்துகின்றன அல்லவா? வன்னிக்கான தொலைபேசிச் சேவையும் "நின்று நின்று" வருகிறது. பல பொருட்கள் புலிகளின்



உயர்பாதுகாப்பு வலயச் சட்டத்துக்குட்பட்டே நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை அனைத்துமே ஒன்று சேர்ந்து கட்டியங்கூறுவது நாலாம் கட்ட ஈழப்போரின் வரவையன்றி வேறெதையுமாக இருக்கமுடியாது.

இதற்கான மற்றுமொரு சான்று முகமாலை சோதனைச்சாவடியில் கடமையில் இருக்கும் சிறிலங்கா இராணுவ படையப் புலனாய்வு அதிகாரியின் வாயிலிருந்து ஒருவித மிரட்டலாக வெளிவந்துள்ளது.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு தற்போது செத்துப்போய்க் கிடக்கிறது. குறைந்தபட்சம் செப்ரெம்பர் 13 ஆம் திகதி வரையாவது அது உயிர் பெறமுடியாது.

ஆனால் அதன்பின்பும் அதற்கு உயிர் கிடைக்குமென்பதற்கு சிங்கள சிறிலங்காவின் அரசியலமைப்பும் அதற்கு பொருள் கொள்ளப்படும் விதமும் எதுவித உத்தரவாதத்தையோ நம்பிக்கையையோ வழங்கவில்லை.

மாறாக சிங்களத்தில் அதன் அரசியலமைப்புச் சட்டம் பிரயோக அர்த்தத்தில் பொதுக்கட்டமைப்புக்கு பாதகமாகவே பிரயோகிக்கப்படுமென்பதற்கே அதிக சான்றுகளைக்

" புலிகள் யுத்தத்தை ஆரம்பித்து சமாதானத்தை முறித்துக்கொண்டு வெளியேறிவிட்டனர்'' என்ற குற்றச்சாட்டாக முன்வைக்கப்படுவதில் போய் முடியுமென்பது வெளிப்படையானது.

சிறிலங்காப் படையினர் யுத்தத்துக்கான முன்னாயத்தங்களை மிக வெளிப்படையாகவே இப்போது மேற்கொள்கின்றனர். சிறிலங்கா அரசாங்கமும் அதற்கான ஏற்பாடுகளை துரிதமாக மேற்கொண்டுவருகிறது.

புலிகளின் பகுதிகளுக்குச் செல்லும், அங்கிருந்துவரும் பொது மக்கள் சிறிலங்காவின் பல்வேறு புலனாய்வுச் சேவைகளையும் சேர்ந்தவர்களால் துருவி விசாரிக்கப்படுகின்றனர். முகமாலைச் சோதனைச்சாவடியில் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு வரும் மோட்டார் சைக்கிள் பயணிகளும்

பகுதிக்குத் தூரமானவையாக மாற்றப்படுகின்றன. முழு அளவிலான பொருளாதார, போக்கு வரத்துத் தடையும் இப்பத்தியில் முன்பு ஒரு முறை குறிப்பிட்டதுபோல "துப்பாக்கிகளுக்குத் தும்மல் நோய் ஏற்படுவதும்" தான் இன்றும் பாக்கியாகவுள்ளன.

கடமையின்போது காயமடையும் படைவீரர்களுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு இருமடங்காக்கப்பட்டுள்ளதுடன் இந்த உத்தரவு இவ்வருடம் சனவரி முதற்திகதியிலிருந்து அமுலுக்கு வருவதாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பில் சனாதிபதி மாவத்தை உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு அனைத்து அசைவியக்கங்களும்

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பருதியின் உதவியாளர்களில் ஒருவரான கனியன் என்ற போராளியைத் துருவிய அந்த அதிகாரி "இளம்பருதி மீது நடத்தப்படவுள்ள கிளைமோர்த் தாக்குதலில் அகப்பட்டு உயிரிழக்கவேண்டாம்" என எச்சரித்துள்ளார். இது பிளான்டன் பொயின்ற் முகாமில் வைத்து போராளி கருவண்ணனுக்கு விடுக்கப்பட்ட, "டிக்கான் மற்றும் மூன்று போராளிகளை ஒரு மாதத்துக்குள் போடுவோம்" என்ற எச்சரிக்கை அல்லது மிரட்டலை அச்சொட்டாக ஒத்திருக்கிறதல்லவா?

மிருசுவில் பகுதியில் கிளைமோர் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டதையும் இதனுடன் பொருத்திப் பார்த்தால் தெரிவது என்ன? யுத்தம் வாசலில் வந்து நிற்கிறது என்பதுதான்.

கொண்டிருக்கிறது.

பொதுக்கட்டமைப்பென்பது தேங்கிப்போயுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவும் இருபகுதிக்குமிடையே நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் உதவுமென அமெரிக்காவும் மேற்குலகும் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வந்திருக்கின்றன.

இது உண்மையாயின் பொதுக் கட்டமைப்பின் மரணமென்பது அல்லது முடக்கமென்பது சமாதானத்துக்கு மாறானதொரு தெரிவையே தரவல்லதென்பது மறுக்கமுடியாததாகும். தர்க்கரீதியாக எம்முள் இன்றுள்ள யதார்த்தமும் அதுவே.

**பு.சத்தியமூர்த்தி**





தமிழ்த் திரைப் படத்துறையில் "அந் நியன்" பிரமாண்டத் தின் உச்ச வெளிப் பாடாய் வெளிவந்திருக்கிறது. சங்கரின் திரைப் படங் களுக்கு இருக்கும் எதிர் பார்ப்புக்கு சற்றும் குறை வைக்காது "அந் நியன்" வெளிவந்தி ருக்கிறது.

"அந்நியன்'' படத்தில் பேசப்படும் கதையின் கருப்பொருள் தமிழ்த்திரைப்படங்களில் பேசப்பட்டகதையாயினும் இந்த கதையில் பெரிய பெரிய விடயங்களைப் பற்றி பேசிக் கொண்டு இயந்திரகதியில் போகும் சமுதாயம் தவறிவிடுகின்ற அத்திவாரத்தில் அடுக்கப்படும் சின்னஞ்சிறு கற்களைப் போன்ற நாட்டின் விதிகளையும், சட்டத்தையும், மனிதநேயத்தையும், பற்றி பேசுகிறது.

"அந்நியன்'' திரைப்படக்கதையைப் பொறுத்தவரை சமுதாய ஒழுக்கம் பற்றி அழகாக பேசியிருக்கிறது. வக்கில் ரூல்ஸ் ராமனுஜமாக வரும் விக்ரம் செல்லமாக படத்தில் அம்பி என்று அழைக்கப்படுகிறார். சட்டென வரும் கோபம் ஆயினும் யாரையும் அடிக்கமுடியாது எல்லாமே ரூல்ஸ்படிதான் நடக்கவேண்டும் என விரும்புபவர்.

வீதியில் போக்கு வரத்து விதி முறைகளை மீறக் கூடாது, கலப்படப் பொருட்களை விற்கக் கூடாது, ஊழல் செய்யக்கூடாது என தொடர்ந்து மக்களிடம் மற்றவருக்கு உதவும் மனப்பான்மை இல்லாததைக் கண்டு கொதித்து எழும் ரூல்ஸ்ராமானுஜத்திற்குள் "அந்நியன்" என்கிற பெயரில் ஒரு உருவம் தோன்றி தவறு செய்யும் சமூக விரோதிகளை கருட




புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொடூரமான தண்டனைகளை வழங்கி சாகடிப்பதாக தொடர்கிறது "அந்நியன்" திரைக்கதை. எல்லாமே சட்டப்படியும் எல்லோரும் பொறுப்பாகவும் நடந்துகொள்ளவேண்டும் என விரும்பும் ரூல்ஸ்ராமனுஜமாகவும் (அம்பி), அப்பாவியாகவும் நவநாகரிக ஆங்கில நடையில் மேற்கத்தய நடனம் என்று வசிகரிக்கும் இளைஞனாக வரும் ரெமோவும், ஏமாற்றும் சமூகவிரோதிகளைக் கண்டு எரிமலையாக பொசுக்கும் அந்நியனாகவும் மூன்று வித்தியாசமான பாத்திரத்தில் விக்ரம் தோன்றி படத்திற்கு உயிர் கொடுத்துள்ளார்.

ஒரே மனிதனுக்குள் மூன்று வெவ்வேறு பாத்திரங்களை நெருடலின்றி கையாண்டு கதையை நகர்த்தியுள்ளதை ரசிக்கக் கூடியதாகவுள்ளது.

வழமையாக பாடல்களில் காணப்படும் பிரமாண்டத்தைப்பற்றிய பேச்சு அந்நியன் திரைப்படத்தில் கராத்தே பாடசாலையில் நடைபெறுவது போன்று அமைக்கப்பட்டுள்ள சண்டைக்காட்சி ரசிகர்களை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.


இந்த சண்டைக்காட்சியைப் பொறுத்தவரை பீட்டர் ஹெய்ன் நிச்சயம் பேசப்படுவார்.

அந்நியன் திரைப்படத்தைப் பொறுத்தவரை நாயகி சதா, நகைச்சுவைக்கு விவேக், பிரகாஸ்ராஜ் என எல்லோருடைய நடிப்புக்களும் பாராட்டும்படியாக இருக்கும் அதேவேளை நெடுமுடி வேணு, சண்முகவேல்ராஜன், வி.எம்சி.ஹனிபா சார்லி ஆகியோரின் நடிப்போடு ஹரிஸ்ஜெயராஜ் ரவிவர்மன் என ஒரு பெருங்கூட்டணி நவீன தொழில் நுட்பத்திற்குள் ஆங்கிலப்படத்திற்கு அண்மையாக ஒஸ்கார்பிலிம்ஸ் ரவிச்சந்திரன் தயாரிப்பில் அந்நியன் வெளிவந்திருக்கிறது.

# செம்மணியை மறக்கலாமா..?

ஜெனரல் றாற்கோ மிலாடிக் தலைமையிலான சேர்பியப் படைகள் ஜூலை 11,1995 ஆம் நாள் 8000 வரையிலான சிறேபிறெனிச்சா வாழ் முஸ்லிம் ஆண்களையும் இளைஞர்களையும் படுகொலை செய்தனர். இந்த வன்முறையின் பத்தாம் வருட துக்க நினைவுகள் முஸ்லிம் உலகில் இவ்வருடம் (2005) அனுஷ்டிக்கப்பட்டன. பொஸ்னியப் போரின் மிகக் கொடிய சம்பவங்கள் சிறேபிறெனிச்சா நகரில் நடைபெற்றன.

சர்வதேசத் தலையீட்டால் பொஸ்னியப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. வெளிநாட்டு உதவிகளால் இந்த நகரம் மீளக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஆனால் உயிர் தப்பியோடிய இந்த நகரவாசிகளான முஸ்லிம்கள் மீண்டும் குடியேற பின்னடிக்கின்றனர்.



தமக்குச் சொந்தமான வீடுகளையும் நிலங்களையும் பார்த்தபின் அவர்கள் தங்குமிடங்களுக்குத் திரும்பிச் செல்கின்றனர். பழைய நினைவுகள் அவர்களை விரட்டியடிக்கின்றன. "உயிரற்ற பிசாசு குடிகொண்ட நகரம்" என்று சிறேபிறெனிச்சா நகரில் முன்பு வாழ்ந்த மக்களால் ஒதுக்கப்படுகின்றது.

இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட மசூதியை மலேசிய அரசு கட்டிக்கொடுத்துள்ளது. ஆனால் தொழுகை மிக அரிதாக அங்கு நடைபெறுகிறது. நாசிப் படைகளின் யூதப் படுகொலைகளுக்கு அடுத்த நிலையில் இருப்பதாக சிறேபிறெனிச்சா வன்முறைகள் வர்ணிக்கப்படுகின்றன. அதாவது ஐரோப்பாவின் படுகொலைகளை மதிப்பீடு செய்வதாகவிருந்தால் மாத்திரமே இது பொருத்தமாக இருக்கும்.

சென்ற நூற்றாண்டிற்கு வழங்கப்பட்ட பட்டங்கள், காரணப்பெயர்களில் "படுகொலை நூற்றாண்டு" என்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இனப்படுகொலையைக் குறிக்கும் 'ஜெனோசைற்' (GENOCEIDE) என்ற ஆங்கிலச் சொல் யூதப் படுகொலைகளுக்குப் பின் 1945இல் உருவாக்கப்பட்டது. ஆதி கிரேக்க மொழியில் "ஜெனோ" என்றால் மக்கள் என்று பொருள், 'சைடரே' என்றால் இலத்தீன் மொழியில் படுகொலை என்று அர்த்தம். இரு கூறும் இணைந்து ஜெனோசைற் ஆகியது. இக்கலைச்சொல்லை உருவாக்கியவர் றப்பேயல் லெம்கின் (RAPHAEl LEMKIN) என்ற சட்ட வல்லுநர். இன அழிப்புடன் மிக நெருக்கமாக குறிப்பிடப்படும் "காணாமற் போதல்கள்" (DISAPPEARENCES) என்ற சொல்லும் இருபதாம் நூற்றாண்டில் தோன்றியதாகும்.

பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டபின் காணாமற்போவதையும், அது பற்றிய விசாரணைகள் நடக்கும்போது நாம் அப்படியொருவரைக் கைது செய்யவில்லை. அது பற்றி எங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று அதே படையினர் சொல்வதையும் கூட்டாகக் காணாமற்போதல்கள் என்று சட்டவல்லுநர்கள் வரையறை செய்துள்ளனர்.

சிங்களப் படைகளால் யாழ். தீபகற்பம் கைப்பற்றப்பட்டபின் வெளியேறிய மக்கள் படிப்படியாக தமது வாழ்விடங்களுக்குத் திரும்பினர். 1995 ஆம் ஆண்டளவில் இது பெரும் எண்ணிக்கையில் நடைபெற்றது. அதே கால கட்டத்தில் காணாமற்போதல்கள், படையினரின் பாலியல் வன்முறைகள், மக்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடாவடித்தனங்களும் மிக உயர்ந்தளவில் நடைபெற்றன. " யாழ் தீபகற்பத்தில் பெரும் எண்ணிக்கையில் காணாமற்போதல்கள் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன" என்று அந்த வருட இறுதிப்பகுதி அனைத்துலக அபயஸ்தாபன அறிக்கை கூறுகின்றது.

இவ்வகை அழுத்தம் காரணமாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு தனது அதிகாரிகள் கொண்ட விசாரணைக் குழுவை நியமிக்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டது. தமிழ் பொதுமக்களிடமிருந்து கிடைத்த 760 வரையிலான காணாமற் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு உயர் பதவி வகித்த (தொடர்ந்து பதவியில் இருக்கும்) சிங்கள இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

குற்றவாளிகளே நீதியாளர்களாக நடிக்கும் காட்சியை அப்போது உலகம் கண்டது. ஏப்ரலில் 97 இல் வெளிவந்த அனைத்துலக அபயஸ்தாபன அறிக்கை இதைப் பலமாகக் கண்டித்துள்ளது. கிடப்பில் போட வேண்டியது இருப்பின் அதை ஆணையத்திடம் கொடு என்பது சிறிலங்கா அரசியல் நடைமுறை.

நவம்பர் 1997 இல் வெளிவந்த அபயஸ்தாபன அறிக்கை சிறிலங்கா இராணுவத்தின் தமிழர்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறது. 1996 நடுப்பகுதியில் யாழ் தீபகற்பத்தில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 540 பேர் காணாமல்போயினர் என்று அது தெரிவிக்கிறது.

அதே வருட ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் காணாமற்போதல்கள் உச்சமடைந்தன. மக்கள் அபய ஸ்தாபனத்திற்குச் செய்த வாக்குமூலத்தின்படி இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டோரின் சடலங்கள் பாவிக்கப்படாத தண்ணீர்க் கிணறுகளுக்குள்ளும், கழிப்புக்குழிகளுக்குள்ளும் வீசப்படுகின்றன.

இவை இராணுவ முகாமுக்கு அண்மித்ததாகக் காணப்படுகின்றன. " சில இடங்களில் சடலங்களின் துர்நாற்றம் வீசுவதாகவும்" அதே மக்கள் புகார் செய்துள்ளனர் என்று அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. சனாதிபதி சந்திரிகாவுக்கு இதுபற்றியெல்லாம் நன்கு தெரியும் என்றும் அறிக்கை கூறுகின்றது.

காணாமற்போதல் கலாசாரத்திற்குச் சிகரம் வைத்தாற்போல் செம்மணிப் புதைகுழி

**- அன்பரசு -**

கள் இடம்பெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டின் இன்னுமோர் கலைச்சொல்லான " கூட்டுப் புதைகுழிகள்" (MASS GRAVES) என்பதற்கோர் உதாரணமாக செம்மணிப் புதைகுழிகள் இடம்பெறுகின்றன.

நிலத்தில் பாரிய குழிகளைத் தோண்டி அதில் ஒன்றின் மேல் ஒன்றாகச் சடலங்களைப் போட்டு நிரப்பி மண்ணால் இறுக்கமாக மூடிவிடுவதை கூட்டுப்புதைகுழிகள் என்பார்கள். இவை அடையாளம் இடப்படாத புதைகுழிகள் (UNMARKED GRAVES) என்றும் அழைக்கப்படுகின்றன. மறைவாய்ப் புதைப்பதே நோக்கமானபடியால் புதைக்கப்பட்டவர்கள் பற்றிய அடையாளங்கள் பதிக்கப்படுவதில்லை.

யாழ் நகரிலிருந்து தென்திசையில் மூன்று மைல் தொலைவில் செம்மணி வெளி காணப்படுகின்றது. பல சதுர மைல் சதுப்பு நிலப்பரப்பைக் கொண்ட செம்மணி குடாக்கடலைத் தனது எல்லையாகக் கொண்டுள்ளது. மக்கள் குடியிருப்பு அற்ற இப்பரந்த வெளியில் ஒரு கைவிடப்பட்ட உப்பு வயலும் இருக்கின்றது. சாவகச்சேரியையும் யாழ் நகரையும் தொடுக்கும் நெடுஞ்சாலை ஓரமாகத் தொடங்கும் செம்மணிவெளி பல மைல் தூரம் நீண்டு பரந்து கிடக்கின்றது.

கூட்டுப்புதைகுழிகள் தோண்டி அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான இடம் என்பதை சிங்கள இராணுவத்தினர் அனுபவரீதியாக நன்கு அறிவர். தெருவோரமாக அமைக்கப்பட்ட செம்மணி இராணுவ முகாம் தமிழ் மக்களைக் கிலி கொள்ளச் செய்யும் பயங்கரம் வாய்ந்தது. இங்கு தான் கிருசாந்தி குமாரசாமி என்ற பள்ளிச் சிறுமியின் பாலியல் வன்முறையும் படுகொலையும் நடைபெற்றது. அவருடைய தாயாரும் சகோதரரும் அதே இடத்தில கொல்லப்பட்டனர்.

செம்மணி பற்றிய தகவல் வெளிவந்ததை ஒரு விபத்தாகக் கருதவேண்டும். கிருசாந்தி குமாரசாமி வழக்கில் முதலாம் எதிரியாகக் குற்றம் சாட்டப்பட்ட லான்ஸ்கோப்பரல் சோமரட்ண ராஜபக்ஷ இதற்குக் காரணமாவான்.

தனக்கு எதிராக வழக்குத் திரும்புவதைக் கண்ணுற்ற ராஜபக்ஷ செம்மணி பற்றிய இரகசியங்களை வெளியிடத் தலைப்பட்டான். தனது மேலதிகாரிகளின் கட்டளைப்படி 400 வரையிலான சடலங்களை செம்மணியில் புதைப்பதற்கு தான் உதவியதாக அவன் தெரிவித்தான். புதைக்கப்பட்ட இடங்களைக் காட்டுவதற்குத் தான் தயாராகவுள்ளதாகவும் அவன் நீதிமன்றத்திற்குத் தெரிவித்தான்.

வரவிருக்கும் ஆபத்தையும் சர்வதேச மட்டத்திலான அபகீர்த்தியையும் சந்திரிகா அரசும் சிங்கள இராணுவமும் மிகவும் நுட்பமாகக் கையாண்டு வெற்றிகண்டன. பின்னடைவைச் சாதகமாக அமைப்பதுதான் இராசதந்திரத்தின் சிறப்பு. இதை எப்படிச் செய்தார்கள் என்று பார்ப்போமா? செம்மணி சம்பந்தமாக அனைத்துலக அபயஸ்தாபனம் பின்வரும் கோரிக்கைகளை விடுத்தது.



வெளிநாட்டு சடுதி மரணத் தடயவியல் நிபுணர்களின் உதவிகளை நாடுமாறு அது சிறிலங்கா அரசைக் கேட்டது. குழிகளுக்குள் புதைக்கப்பட்ட மனித சடலங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடிய விதத்தில் வெளிக் கொணர்வது இத்துறைசார் நிபுணர்களின் பணி என்று அது பிரகடனப்படுத்தியது.

அத்தோடு சிறிலங்காவின் சட்டமா அதிபரை பின்வருமாறு கேட்டுக்கொண்டது. ''செம்மணிப் புதைகுழிப் பிரதேசத்தை பாதுகாப்பதற்கு வேண்டிய இரவு பகல் பாதுகாப்பு ஒழுங்கை உடனடியாகச் செய்யுங்கள்" இது சிங்கள இராணுவத்திற்கு மிகவும் சாதகமான கோரிக்கையாக அமைந்தது. உடனடியாக அவர்கள் செம்மணி ஊடாகச் செல்லும் நெடுஞ்சாலையை (நல்லூர்-கைதடி தொடுப்பு வீதி) பொது மக்கள் பாவனைக்குத் தடை செய்தனர். இது தமிழர் மத்தியில் பலத்த சந்தேகங்களை எழுப்பியது.

1995 ஆம் ஆண்டின் சிறேபிறெனிச்சா படுகொலைகளில் 8000 முஸ்லிம்கள் மாண்டனர். சமாதானம் ஏற்பட்டபின் போர் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்காக விசேட சர்வதேச மன்ற நீதிமன்றம் நெதர்லாந்தின் ஹேக் நகரில் நிறுவப்பட்டது. அதன்பின் புதைகுழிகளைத் தோண்டும் பணி சிறேபிறெனிச்சாவில் ஆரம்பிக்கப்பட்டது. 1400 சடலங்கள் மாத்திரம் மீட்கப்பட்டன. மிகுதி 6,600 சட்டங்கள் எங்கே என்று கேட்கப்படுகின்றது.

சேர்பியப் படைகள் சடலங்களைத் தோண்டி எடுத்திருக்கிறார்கள். பின்பு எலும்புக் கூடுகளை கல்லுடைக்கும் பாரிய எந்திரங்கள் மூலம் நொருக்கித் தூளாக்கி இருந்தார்கள். பொதி செய்யப்பட்ட தூள் தூர இடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்டு வெவ்வேறு சிறிய குழிகளில் புதைக்கப்பட்டுள்ளன.

இப்போது அடையாளம் காண்பது இயலாத காரியமாகிவிட்டது.சேர்பிய இராணுவத்தினர் முஸ்லிம்களை சுட்டுக்கொல்லும்போது வீடியோப்படம் பிடித்திருக்கிறார்கள். இந்த வீடியோப் படச் சுருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை தொலைக்காட்சியில் காட்டப்படுகின்றன.துயர வாழ்வு வாழும் அந்த அப்பாவி மக்கள் தமது உறவுகள் கொல்லப்படுவதை தொலைக்காட்சியில் பார்க்கின்றனர். ஆனால் கொல்லப்பட்டோரின் சடலங்களைக் கண்டுபிடிக்க மாத்திரம் முடியவில்லை.

1996 இல் நடந்த செம்மணிப் படுகொலைகளில் காணாமற்போனோரின் பெருமளவு சடலங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கொலைக்குக் காரணமான சிங்கள இராணுவத்தை செம்மணியின் இரவு பகல் காவலுக்கு நிறுத்தியதுதான் சடலங்களின் மறைவுக்குக் காரணம். இரவு பாரிய மின்பிறப்பாக்கி வெளிச்சத்தில் சடலங்கள் தோண்டி வெளியே எடுக்கப்பட்டுள்ளன. பின்பு குவியல் குவியலாக எரிபொருள் ஊற்றிக் கொளுத்தப்பட்டுள்ளன.

நல்லூர், கோப்பாய், கைதடி போன்ற கிராமங்களில் வாழ்ந்தோர் வான் நோக்கி எழுந்த புகை மண்டலத்தைக் கண்டிருக்கிறார்கள். பயத்தில் வாய் பேசாமல் இருந்தார்கள். அக்காலப்பகுதியில் இலண்டன் மாநகர் வந்த முன்னாள் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட் தந்தை பேர்னாட் அடிகளார் இவையாவற்றையும் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

ஆனால் சர்வதேச சமூகத்திற்கு வேறு முக்கிய அலுவல்கள் இருந்தபடியால் செம்மணி சீண்டுவார் அற்றுக் கிடந்தது. சில சடலங்கள் தேடிப் பார்த்தபோது ஆய்வாளர்களுக்குக் கிடைத்தன. உண்மைதான். இப்போது டி.என்.ஏ. பரிசோதனை என்றும் ஆய்வு கூட ஆராய்ச்சி என்றும் சொல்லப்பட்டு அவை கொழும்பில் கிடக்கின்றன. எல்லாம் என்றோ முடிந்த காரியமாகிவிட்டது.

தமிழீழத்தின் வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் பல மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்றன. இருந்தாலும் சிறிய காலத்திற்கேனும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்த சிறப்பு செம்மணிக்கு மாத்திரம் உண்டு. எதிரியின் கொடூரத்தை உணர்த்துவதற்கும் உயிரிழந்த எமது இனத்தவரின் நினைவை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமான நினைவாலயத்தை செம்மணியில் எழுப்பவே வேண்டும்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 22. 07 . 2005
மின் அஞ்சல :- weekly @ eezhanatham.com

# சரியான நிலைப்பாடு..!

புலிகள் இயக்கம் மீதும், தமிழ்மக்கள் மீதும் ஒரு நிழல் யுத்தத்தை நடாத்திவருகின்ற அரசோடு நேரடி சந்திப்புக்களை ஒழுங்கமைக்கவோ அல்லது பேசுவதோ சாத்தியப்பாடானதொன்று அல்ல என்ற நிலையில் அவற்றைத் தவிர்க்க எடுத்த முடிவை புலிகள் இயக்க தலைமைப்பீடம் சமாதான அனுசரணையாளர்களான நோர்வே மற்றும் கண்காணிப்புக்குழு போன்றவற்றிற்கு தெளிவாகத் தெரிவித்துள்ளது.

நிழல்யுத்தம் காரணமாக யுத்த நிறுத்தச் சூழல் வெகுவாக சீர்குலைந்து வருகின்ற சூழலில் அரசதரப்போடு புலிகளை நேரடியாகச் சந்திக்க வைப்பதற்கு அனுசரணையாளர்கள் மேற்கொண்ட முயற்சி தொடர்பாகவே புலிகள் இயக்கம் தமது இந்த இறுக்கமான நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

மூன்று வருடகாலத்துக்கு மேலாக பல்வேறு விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டு, பல சுற்றுச் சமாதானப் பேச்சுக்களும், பலமுறை படைத்தரப்பினரோடு சந்திப்புக்களையும் மேற்கொண்ட புலிகள் இயக்கத்தை இப்போது சில உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அளவுக்கு அரசின் செயற்பாடுகள் தூண்டியிருக்கின்றன.

புலிகள் இயக்கத்திற்கும் அரச தரப்பிற்குமிடையில் நடைபெற்ற நேரடிப் பேச்சுக்களிலிருந்து இரு தரப்புக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை முதலாக படைத்தரப்புக்களுடனான சந்திப்புக்கள் வரை இணங்கிக்கொள்ளப்பட்ட சரத்துக்களையோ, வழங்கிய வாக்குறுதிகளையோ நடைமுறைப்படுத்தவோ அல்லது செயற்படுத்தவோ முனையாமல் அவற்றைத் திட்டமிட்டு அரச தரப்பும் படைத்தரப்பும் குழப்பிவருகின்றன.

இந்தநிலையில் இன்றைய நெருக்கடிக்குக் காரணமானவர்களோடும், இந்த நெருக்கடிக்குரிய காரியங்களை மேற்கொண்டு வருபவர்களோடும் சந்திப்புக்களை நடாத்தித்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வினைக்காணவேண்டும் என்றில்லை.

இணங்கிக்கொள்ளப்பட்ட விடயங்களை உரியமுறையில் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் இந்த நெருக்கடிநிலையை தீர்க்கமுடியும்.

ஆனால் அரசு அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாத நிலையில் மேற்கொள்ளப்படும் சந்திப்புக்களும் பேச்சுக்களும் என்பது வெறும் சந்தித்தோம்-பேசினோம்-பிரிந்தோம் என்ற ஒரு சம்பிரதாய பூர்வமானநடவடிக்கையாக மட்டுமே அமையும்.

இன்றையநிலையில் தேவையானது சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளல்ல, ஆக்கபூர்வமான செயற்பாடுகளே அவசியமாகவுள்ளது.

புலிகள் இயக்கம் அரச தரப்பிடமிருந்தோ அல்லது அனுசரணையாளர்கள் என்றவகையில் நோர்வேயிடமிருந்தோ அல்லது இணைத்தலைமை நாடுகள் என்று சொல்லப்படுகின்ற சர்வதேச சமூகத்திடமிருந்தோ எதிர்பார்ப்பது அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கான செயற்பாட்டையே. செயற்பாடு இல்லாத எந்த வாக்குறுதியும், அதாவது வெறும் உயிரற்ற ஜடமாகவே புலிகள் இயக்கத்தால் இன்று பார்க்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

இந்தநிலையில் நீண்ட வரலாற்று அனுபவத்தின் தொடர்ச்சியாய், இந்தச் சமாதான முயற்சி ஆரம்பிக்கப்பட்ட மூன்றாண்டு காலத்தில் படைத்தரப்போடு மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு சம்பந்தமான உபகுழுவாக இருந்தாலும் சரி, படைத்தரப்போடு மேற்கொள்ளப்பட்ட சந்திப்புக்களாயினும்சரி அவற்றை இறுதியில் நிராகரிக்கவேண்டிய நிலையே புலிகள் இயக்கம் மீது சுமத்தப்பட்டுள்ளது.

இதற்குக்காரணம் அரச தரப்பாயினும் சரி, பாதுகாப்புத்தரப்பாயினும்சரி அவர்களுக்கு வேண்டியது சமாதானம் அல்ல, அவர்களுக்குத் தேவையானது போர் ஒன்றுமட்டுமே.

ஆகவேதான் நிழல் யுத்தத்தை மேற்கொண்டு வரும் அரசதரப்போடு நேரடி சந்திப்புக்களை நடத்துவது சாத்தியமில்லை என்ற நிலைக்கு புலிகளைத் தள்ளியுள்ளது.

# எங்களுடைய கோபங்கள் அரசை தாக்கிவிட்டனவா...?

மக்கள் போராட்டங்கள் சக்திமிக்கவை. அதற்கிருக்கும் வலிமை அலாதியானது. மக்கள் சக்தியின் முன் வீழ்ந்துபோன அரசுகளும், வீழ்ந்துபோன அரசர்களும் வரலாற்றில் இன்றும் தொடர்ந்தபடியே இருக்கின்றன.

அரசுகள் மக்களை ஏமாற்றும்போது அரசுகளின் ஏமாற்று வேலைகள் என்பது மக்களின் அடிப்படை வாழ்வாதாரங்களை மற்றும் அவர்களின் அடிப்படை உரிமைகளை குறிவைக்கப்பட்டதாகவே வரலாற்றில் இன்றும் தொடர்கின்றன.

பொறுத்தது போதும் என்கிற நிலைமட்டும் பொறுத்துக்கொள்கிற மக்களால் பொறுக்கமுடியாத நிலையில் அவர்களின் கோபங்கள் காட்டுத்தீயென அரசுகள் மீது திரும்பி அவற்றை ஆட்டங்காணச் செய்யும் நிகழ்வுகள் போராடும் மக்களுக்கு வழிகாட்டியாகும்.




தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஏமாற்றப்பட்டோம். ஏமாற்றப்படுகிறோம். எங்களுடைய கோபங்கள் பகைவனைக் களத்தில் வீழ்த்தும் திறத்தில் உன்னதமான உச்சநிலையை அடைந்தபோதும் வெகுசன ஆதரவுத்தளம் என்கிற வகையில் தமிழ் மக்களுடைய மக்கள் போராட்டங்கள் எங்களுக்கான செய்தியை போதியளவு வெளிப்படுத்திவிட்டனவா என்கிற கேள்விக்கு இன்றும் விடை எமக்குள் நாமே தேடவேண்டியுள்ளது.

போருக்குள் கோபப்பட்டோம், சமாதானத்திற்குள் ஆத்திரப்பட்டோம். ஆனால், எங்களுடைய கோபங்கள் அரசைத் தாக்கிவிட்டனவா? சர்வதேச சமூகத்தை எங்கள் திசையில் உற்றுநோக்கச் செய்துவிட்டோமா?

எங்களுடைய படைபலத்தால் எங்களுடைய ஆளுமைப்பலத்தால் எதிரியால் எங்கள் முற்றங்களுக்குள் கொண்டுவரப்பட்ட எல்லைகளை எங்கள் பிள்ளைகளின் உயிர்களைக்கொடுத்து எங்களுடைய தாயகத்துக்கான எல்லைகள் வரை நகர்த்திவிட்டோம்.

ஆனால், தமிழ் மக்களாகிய நாங்கள் உரத்துச் சொல்லவேண்டிய எங்கள் குரல்களை ஏன் இன்னமும் மௌனப்படுத்தியிருக்கிறோம்.

தாயகம் எங்கும் பரந்துவாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அரசின் அடாவடித்தனங்களாலும், அரசின் ஏமாற்றுவேலைகளாலும் கொதிப்படைந்து கோபங்களாக அவை இன்னும் விசாலித்திருக்கின்றன.

மக்களின் இந்தக் கோபங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார் என எங்கும் நீர்க்குமிழிகளைப் போன்று தோன்றுவதும், மறைவதுமாக வெளிப்படுகின்றபோதிலும் அதனை ஒருமுகப்படுத்தி எங்கவின் பொது எதிரி என்ற வகையில் அரசின் மீது திருப்புவதில் எமது வெகுஜன அமைப்புகள் வெற்றி கண்டுவிட்டனவா?

போருமின்றி, சமாதானமுமின்றி அரசியல் வெறுமைக்குள் வாழும் இந்தக்காலப்பகுதியை நாம் ஏன் மக்கள் போராட்டங்களுக்கான காலமாக மாற்றக்கூடாது?

இந்த விடயத்தில் உள்ளூர்த் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள் என்ற வகையில் தமிழ் மக்களின் விடுதலைக்கான மக்கள் போராட்டக் களத்தில் தீவிரமாகப் போராட வேண்டிய காலமாக இந்தக் காலத்தை பயன்படுத்தவேண்டியது அவசியமாகும்.

இனவாதத்தை மட்டும் நம்பி இனவாதக் கருத்துக்களை மட்டும் சுமந்து தென்னிலங்கையில் பத்தாயிரம் மேடைகள் என்றும், மக்கள் கருத்துக்கள் என்றும் நாடகமாட ஜே.வி.பி போன்ற கட்சிகளால் முடியும் என்றால், விடுதலைக்காகப்போராடும் தமிழ் மக்களாகிய நாங்கள் ஒன்றுபட்ட வகையில் மாபெரும் சக்தியாக எமது உரத்தகுரலை உலகுக்குச் சொல்லவேண்டியது அவசியமாகவுள்ளது.

இந்த வகையில் தாயகம் தழுவி நடைபெறும் மக்கள் போராட்டங்கள் யாவும் இன்றைய காலகட்டத்தில் மறுக்கப்படும் தமிழ் மக்களுக்கான உரிமைகளையும், இந்த அரசுகள் எதனையும்எமக்கு செய்யப் போவதில்லை என்பதையும் காத்திரமான வகையில் வெளிப்படுத்தவேண்டியது அவசியமாகும்.


இதுவரை தாயகம் தழுவி நடைபெற்ற போராட்டங்கள் யாவும் உலகிற்கு உணர்த்தத்தவறிய செய்திகளை இனியாவது உணர்த்தும் வகையில் செயற்பட அனைவரும் முன்வரவேண்டியது காலத்தின் தேவையாகும்.

விடுதலைக்காகப் போராடும் தமிழ் மக்களாகிய நாம் எமது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டப்பாதையை அதன் நியாயத்தன்மையை உலகிற்கு உணர்த்தவேண்டியதன் அவசியம் அதிகமாகவே உள்ளது.

ஏனெனில், மூன்று வருடகாலத்திற்கு மேலான இந்தச்

**சிறி. இந்திரகுமார்**

சமாதான காலத்தில் பேசிப் பெறமுனைந்த தமிழ் மக்களுக்கு எதனையும் வழங்க மறுக்கும் அரசு இனியும் எதனையும் வழங்கப்போவதில்லை என்பதை உலகுக்கு உரத்துச்சொல்வதன் மூலம் எமது போராட்டத்தின் பாதையில் இடர்படும் தடைகளை அகற்ற உழைக்கமுடியும் அல்லவா.



# பதவி வெறியினால்...

சனாதிபதி மாளிகையின் சுற்றுப் பகுதி இறுக்கமான பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. அப்பகுதியில் ஊர்வலங்கள், பேரணிகள், ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றை நடத்தினால் கடும் தண்டனை விதிக்கப்படும் எனப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாது அப்பிரதேசத்திலிருக்கும் அரசாங்கக்கட்டடங்கள், உல்லாச விடுதிகள், வர்த்தக நிறுவனங்கள் உட்பட அனைத்தும் இறுக்கமான கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. அதாவது 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் போர் நிறுத்த ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படுவதற்கு முன்பிருந்த நிலைக்கு வந்திருக்கிறது.



அதேவேளை கிழக்குப் பகுதியில் படையினர் குவிக்கப்பட்டு படைநிலைகள் பலப் படுத்தப்பட்டு வருவதுடன் வீதிரோந்துகள், சுற்றி வளைப்புத் தேடுதல்கள் என்பனவெல்லாம் ஆரம்பமாகிவிட்டன. மன்னார்- வவுனியா வீதியில் காவலரண்கள் அதிகரிக்கப்பட்டு வீதிச் சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாது தமிழர் தாயகப் பகுதிகளிலுள்ள காவலரண்கள், படைமுகாம்கள் எல்லாம் திருத்தியமைக்கப்பட்டும் நகர்த்தப்பட்டும் பலப்படுத்தப்பட்டும் வருவதாக தகவல்கள் கூறுகின்றன.

இவையெல்லாம் நடைமுறையிலுள்ள போர்நிறுத்தத்தை வலுப்படுத்தி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கம் முன்வரப்போவதில்லை என்பதையே வெளிப்படுத்துகின்றன.

அதாவது போர் நிறுத்த ஒப்பந்தத்திலுள்ள விதிமுறைகளுக்கமைய தமது அரசியல் பணிப் போராளிகளின் பாதுகாப்பான போக்குவரத்துக்கு நடவடிக்கை எடுக்குமாறு விடுதலைப் புலிகள் வலியுறுத்தி வருவதற்குப் பதிலாகவே இவையெல்லாம் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுவும் கடந்த மூன்றரை வருடங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த போக்குவரத்து நடைமுறைகளுக்கு தடங்கல் ஏற்பட்டதையடுத்து அதனைச் சீராக்கும் கடமையை ஒப்பந்த விதிகளின் படி சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருக்கும் நிலையில் அதனைச் செய்யாது ஒரு போர்ச் சூழலை உருவாக்கி மக்களின் வாழ்க்கை முறையை கெடுக்கும் நோக்குடனேயே இவ்வாறு செயற்படுகின்றது.

இச் செயற்பாடானது தனியாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களை மட்டும் பாதிக்கவில்லை. இலங்கையிலுள்ள அனைவரையும் தான் பாதிக்கப்போகிறது.

ஆயினும் அவற்றையெல்லாம் கவனத்திற் கொள்ளாது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இவ்வாறான பிரகடனங்களையும் பாதுகாப்புக் கெடுபிடிகளையும் ஏற்படுத்தி யுத்தச் சூழலை ஏற்படுத்துவதற்கு அவர் கொண்டுள்ள அதிகார வெறியே காரணமாக இருக்கிறது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு யுத்தத்திற்குச் செல்லவேண்டும் என்ற பௌத்த சிங்கள இனவாதிகளின் கூச்சல் அவரது ஆட்சிக்கு பெரும் இடைஞ்சலாக இருக்கிறது. அது மட்டுமல்ல இந்தப் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதை ஆரம்பகாலம் முதல் எதிர்த்து அதற்கு முட்டுக்கட்டை போட்டு வந்தவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. அத்துடன் இப் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் அமுலாக்கத்திற்கும் படைத்தரப்பினரைப் பயன்படுத்திப் பல முட்டுக்கட்டைகளைப் போட்டுவந்தார். அத்துடன் இதனை முறியடிக்க கடற்படையினரின் உதவியுடன் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தார்.

இப் போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராக இனவாதக் கூச்சலிட்டவர்களுடன் இணைந்துதான் அவர் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றினார். இதன் பின்னரும் விடுதலைப் புலிகளைச் சீண்டி யுத்தத்தை ஆரம்பித்த பழியை அவர்கள் மீது போடும் வகையிலான பல்வேறு செயற்பாடுகளை அவர் செய்து வந்தார்.

இப்போது அவரது அரசாங்கம் மிகவும் பலவீனமான சிறுபான்மை அரசாங்கமாக உள்ளது. அவர் தனது பதவிக்காலம் அடுத்த ஆண்டு இறுதிவரை உள்ளது என்று கூறிக் கொண்டாலும் அவரது அரசியல் வாழ்வுக் காலமும் கூட மிகக் குறுகியதாகவே உள்ளது. அதனை மாற்றியமைக்க அவர் எடுத்த முயற்சிகள் இதுவரை எந்த வெற்றியையும் தரவில்லை. அது மட்டுமல்லாது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவமே பண்டார நாயக்க குடும்பத்தின் கையிலிருந்து நழுவிப்போகும் நிலை காணப்படுகிறது.

இவற்றையெல்லாம் நேர்மையான சனநாயக வழியில் காப்பாற்றிக் கொள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே குறுக்கு வழியில் இதற்கு ஏதாவது செய்யும் மன நிலையிலேயே அவர் உள்ளார். அதற்கு அவர் யுத்தத்தையே தெரிவாகக் கொண்டுள்ளார் போல தெரிகிறது.

அதாவது நாடு சீரான நிலையில் இருந்தால் இவரது சீர்கெட்ட நிர்வாகத்தால் மக்கள் சந்திக்கின்ற இன்னல்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து போராடுவார்கள். அதனால் தமது அதிகாரத்துக்கு ஆபத்து என உணர்ந்துள்ள சந்திரிகா அமைதி நிலையைக் குழப்புவதன் மூலம் தனது ஆட்சி அதிகாரத்தை நீடித்துக்கொள்ள விரும்புகிறார்.

இதேவேளை சனாதிபதி மாளிகையைச் சுற்றி வகுக்கப்பட்டுள்ள இறுக்கமான நடைமுறைகளுடனான தடை வலயமானது தனியே யுத்தமொன்றை மட்டும் எதிர்நோக்கிப் பிரகடனப்படுத்தப்பட்ட ஒன்றாக இல்லை.

அவரது பதவிக்கால நீடிப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியும், அவரைப் பதவியிலிருக்கவிடுவதில்லை என்ற ஜே.வி.பி, சிகல உறுமய போன்றவையும் நடத்தவுள்ள போராட்டங்களை முறியடிக்கும் நோக்கத்துடனும் ஏற்படுத்தப்பட்டவையாகவே உள்ளன.

ஏனெனில் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளை அவர்களே நடத்தியதுடன் இன்னமும் நடத்த அவை திட்டமிட்டுவருகின்றன. ஆனால் அவற்றைக் காரணமாகக் கூறாமல் யுத்தத்தை எதிர்கொள்ளத்தயாராவது போன்ற நடவடிக்கையில் சனாதிபதி சந்திரிகா ஈடுபட்டு வருகின்றார்.

ஆனால் யுத்தமொன்றை சனாதிபதி சந்திரிகா மட்டும் விரும்பவில்லை. ஜே.வி.பி, ஜாதிக ஹெலஉறுமய போன்ற இனவாத சக்திகளும் விரும்புவதையே பொதுக்கட்டமைப்பு, இடைக்கால நிர்வாக சபை போன்றன சமாதான முயற்சிகளுக்கு அவர்கள் இட்டுவரும் முட்டுக் கட்டைகளும், புத்தர் சிலை அமைத்தல் போன்ற சீண்டல் நடவடிக்கைகளும் காட்டிவருகின்றன. இவற்றை அவை தாம் அதிகாரத்துக்கு வரும் வழியாகவே மேற்கொள்ளுகின்றன.

ஆனால் யுத்தம் ஒன்று ஏற்படுமானால் இவர்களும் படுமோசமாக ஒடுக்கப்படுவார்கள்; இவர்கள் மீதும் சனாதிபதி சந்திரிகா பழிதீர்த்துக் கொள்ளத் தீர்மானித்துவிட்டார் என்பதையே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடவடிக்கைகள் காட்டுகின்றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திருகோணமலையில் நடைபெறும் சம்பவங்களுக்கு "சில தீயசக்திகள் அடிநிலையிலுள்ள படையினரைப் பயன்படுத்துகின்றனர்" எனக் கூறுவதும் சனாதிபதி மாளிகையைச் சுற்றி மேற்கொள்ளப்பட்டுள்ள இறுக்கமான பாதுகாப்பு நடைமுறைகளும் இதனையே காட்டுகின்றன.



அதாவது ஜே.வி.பியினர் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட சனாதிபதியாகிய தனக்கு விளைவித்த அவமானங்களை யுத்தமொன்று ஏற்படும் பட்சத்தில் துடைதத்துக்கொள்ள சனாதிபதி சந்திரிகா தீர்மானித்துவிட்டமையையே இவை காட்டுகின்றன.

**வேலவன்**

## நேர்நோக்கு

# புறம்தள்ளப்படும் புத்தர்சிலை விவகாரம்

திருகோணமலை நகரின் மத்தியில் திடீரென திணிக்கப்பட்ட புத்தர் சிலை தொடர்பான விவகாரம் மெல்ல மெல்லத் தணிக்கப்பட்டு இப்பொழுது முற்றாகக் கைவிடும் நிலைக்குக் கொண்டுவரப்படுகின்றது.

ஆரம்பத்தில் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு போராட்டங்கள் தொடர்பாக கரிசனையைக் கொண்ட சிறிலங்கா அரசு இப்போது மக்கள் போராட்டங்கள் சற்றுத் தணிந்த நிலையில் அதனை அறவே கைவிடும் நிலையில் உள்ளது.

மக்களால் மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களையும், கதவடைப்பையும் தற்காலிகமாகக் கைவிடும்படியும், இந்தப் பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வு காணப்படும் எனத் தெரிவித்து, கொழும்பில் இருந்து திருகோணமலைக்கு முப்படைத் தளபதிகளையும் அனுப்பி ஒரு உயர்மட்ட மாநாட்டையும் நடத்திய அரசு இந்தப் புத்தர்சிலை தொடர்பாக திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை இப்பொழுது வலுவிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக, சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை தற்போது விளக்கிக்கொண்டுள்ளது. இதே வேளை, இந்த விவகாரத்தோடு சம்பந்தப்பட்ட தமிழர் பேரவை அமைப்பின் தலைவரின் வீடு மீது முன்னர் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டவிரோத புத்தர் சிலை என்று நீதிமன்றத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட புத்தர் சிலையை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், அதுவரை அங்கு குவிக்கப்பட்டுள்ள இராணுவம், பொலிசாரை படிப்படியாகக் குறைத்துக்கொள்ளப்படும் என்றும் அரசினால் உறுதி மொழிகள் வழங்கப்பட்டிருந்தன.

ஆனால், இந்த வாக்குறுதிகளுக்கு மாறாக, தற்போதும் திருகோணமலையில் படையினர் மற்றும் பொலிசார் முன்னைய நிலையைவிட கூடுதலாகவே இங்கு காணப்படுகின்றனர்.

அத்தோடு, திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரை இப்போது வன்முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இவற்றை எல்லாம் நோக்கும்போது, திட்டமிட்டு இந்தப் புத்தர் சிலையை அமைப்பதில தென்னிலங்கை அரசியல் கட்சி ஒன்றிற்கு தொடர்பிருப்பதாகக் கூறப்பட்டதற்கிணங்க அந்தத தொடர்பை அரசே பேணி வருகிறதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

ஆறிய கஞ்சி பழம் கஞ்சி போல இந்த விவகாரத்தைக் கையாளவே அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது என்பதே தெளிவாகின்றது. புத்தர் சிலை விவகாரம் மத வரையறைகளோடு நின்றிருந்தால் தமிழ் மக்களும் இத்தகைய



தொரு எதிர்ப்பை காட்டியிருக்கமாட்டார்கள். ஆனால், மத விவகாரங்களையும் தாண்டி அரசியல் சாயம் பூசப்பட்டு ஒரு ஆக்கிரமிப்பின் குறியீடாகச் சித்தரிக்கப்பட்டதன் காரணமாகவே இத்தகைய எதிர்ப்பு இன்றும் தொடர்கின்றது.

ஒரு நாட்டில் மத சுதந்திரம் என்பது ஒரு மனிதனுக்குரிய அடிப்படை உரிமைகள் ஒன்று என்பதில் தமிழ் மக்களுக்கு என்றும் குழப்பம் இருந்ததில்லை. ஆனால், அந்த மதச் சுதந்திரம் ஏனைய மதங்களுக்கு இடையூறுகளை விளைவிப்பதோ அல்லது ஏனைய மதங்களின் உரிமையைப் பறிப்பதாகவோ அமையக்கூடாது.


அத்தோடு, எல்லா மத அடையாளங்களும் அந்தந்த மதங்களால் வரித்துக்கொள்ளப்பட்ட அமைவுகளுக்கு ஏற்ப உரிய இடங்களில் வைத்துப் பூசிக்கப்படுவதே மனித நாகரிகத்தின் ஒரு அங்கமாகும். இதற்கு அமைவான செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தவேண்டியதும், செய்துகொடுக்க வேண்டியதும் அரசின் கடமையாகும்.

ஆனால், சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் இதிலிருந்து விலகி தமிழ் மக்களை மேலும் ஆத்திரமூட்டும் வகையில் செயற்பட முனைவதோடு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மதித்து நடக்காததோடு மட்டுமன்றி, அதனைப் புறந்தள்ளிவிடவும், அதனை மீறி செயற்படும் வகையில் ஏனைய மதத்தவர்களையும், இனத்தவர்களையும் தனது அரசியல் சுய இலாபங்களுக்காக ஊக்குவித்து வருகின்றது என்பதே இந்தத் திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தமிழ் மக்களுக்கு தரும் பாடமாகும்.

**வேழினி**

> சர்வதேச சமூகம் எப்படி சூடானையும் அதன் வன்முறையையும் முடிவுக்குக் கொண்டுவர முயலுகின்றதை புரிதல் வேண்டும். இதே போன்றே கிழக்குத் தீமோரியரையும் சர்வதேசம் கையாண்டது. இதனால் சர்வதேச சமூகம் தேசிய விடுதலைக்கான போராட்டங்களை புதிய பாணியில் அணுக ஆரம்பித்துள்ளது.

தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கான தீர்வுகள் முற்றாகவே கைவிடப்பட்டுவிட்டதாக ஒருபக்கமான விமர்சனங்கள் வெளிவருகின்றன. சில இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் அழிந்துள்ளன. இன்னும்சில போராட்ட உத்திகளை சரிப்படுத்தாமையால் பயங்கரவாத அணுகுமுறைகளை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்றன. ஆனால் இவை யாவற்றையும் முறியடித்துக்கொண்டு சில விடுதலைப் போராட்டங்கள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன.



# சூடான் சமாதான முயற்சியிலிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்

அந்த வரிசையில் தென்சூடானில் நிகழ்ந்த டார்பூர் பிரதேசத்தின் விடுதலைப்போராட்டம் முன்மாதிரியான நகர்வுகளை அண்மைய வாரங்களில் மேற்கொண்டுவருகின்றது. அதன் அடிப்படையில் இருந்து உலகம் எப்படியான அணுகுமுறைகளை விடுதலைப்போராட்டங்கள் பற்றி கொண்டிருக்கின்றதென்பதை விரிவாக நோக்குவோம்.

முதலில் சூடானின் அரசியல் வரலாற்றை புரிந்துகொள்வது அவசியமானது. மிகச் சுருக்கமாக அதனை அவதானிப்போம்.

1855வரை அரபுலக ஆட்சிமுறைக்குள் இயங்கிய சூடான் பிரதேசம் Gordon என்பவரின் மறைவை அடுத்து பிரித்தானியரின் செல்வாக்குக்குள் உட்படுகின்றது. அப்போது பிரித்தானியர் சூடானை எகிப்த்தோடு இணைத்து (Anglo-Egyptiano- Sudan) ஆட்சி செலுத்தினர். சூடானின் வடக்குப் பகுதியே அப்போதும் ஆதிக்கமுடைய பிரதேசமாக விளங்கியது. 1920களிலேயே வட சூடானியர் சுதந்திரம் கோரி போராட்டம் நடத்துபவர்களாகக் காணப்பட்டனர். வடசூடான் பெருமளவு இஸ்லாமியர்களின் பிராந்தியமாகக் காணப்பட்டது. வடசூடானியர் 1945 களில் தனியான அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென கோரிக்கையையும் முன்வைத்து அரசியலில் செல்வாக்குடைய சக்திகளாகத் தம்மை உருவாக்கிக்கொண்டனர்.

இதே காலப்பகுதியில் நாடோடிக் குழுக்களாக பிரதேசங்களிலிருந்து தென் சூடானில் காலத்துக்குக் காலம் குடியேறிய பிரிவினரும் நிலையாக வாழ்ந்த விவசாயிகளும் தென்சூடானியராகக் காணப்பட்டனர். தென்சூடானியர் அரசியல் பங்களிப்பற்றவர்களாகவும் குறிப்பாக கிறிஸ்தவர்களாகவும் காணப்பட்டனர். சனத்தொகையில் விவசாயத்தை மேற்கொண்ட நிலையான குழுக்களும்,நாடோடிக் குழுக்களுமென மூன்று பிரிவினை காணப்பட்டது. 1948 ஆம் ஆண்டு சூடானின் தன்னாட்சியை பிரித்தானியா ஏற்றுக்கொண்டது. 1951 இல் பாறூக் தன்னை சூடானின் மன்னனாக பிரகடனப்படுத்திக்கொண்டார். அவரது வீழ்ச்சிக்குப் பின்பு எகிப்து சூடானை அங்கீகரித்தது. 1953 ஆம் ஆண்டு சூடான் முழுமையான ஆட்சியை நிறுவிக் கொண்டது. இதனை தென் சூடானியர் எதிர்த்தனர். 1955 இல் முழு சுதந்திர நாடாக சூடான் பிரகடனப்படுத்தப்பட்டது.

முதல் பிரதமராக ஸ்மயில் அல் அஸாரி தெரிவு செய்யப்பட்டார். நாடாளுமன்ற சனநாயக ஆட்சி ஆரம்பிக்கப்பட்டது. 1958 இல் ஜெனரல் இப்ராகிம் அபூட் இராணுவம் புரட்சி ஒன்றை மேற்கொண்டு நாடாளுமன்ற ஆட்சி முறையில் மாற்றம் செய்தார். இப்ராகிமின் ஆட்சி 1969 இல் மீண்டுமொரு இராணுவப் புரட்சியினால் வீழ்த்தப்பட்டது. கேணல் யபார் அல்நமிறி என்பவர் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை.

இவ்வாறு ஒருபக்கம் இராணுவப்புரட்சிகள் நிழந்து கொண்டிருக்க தென்சூடானில் நிலையான விவவாசயக் குழுக்களுக்கும் நாடோடிக் குழுக்களுக்கும் இடையில் இன மோதல் படிப்படியாக ஆயுதமோதலாக மாறின. டார்பரின் பிரதேசத்தில் அதிகமாக வாழ்ந்த விவசாயக்குழுவினர் தமது நிலப்பரப்பையும் பாதுகாப்பையும் முதன்மைப்படுத்தும் நோக்குடன் சூடானிய விடுதலை இராணுவத்தை (SLA) நிறுவினர். வடசூடானிய அரசாங்கம் நாடோடிக்குழுக்களுக்கு ஆதரவும் பயிற்சியும், ஆயுதமும் வழங்கியதுடன் இராணுவரீதியிலும் தென்சூடானியரோடு போர்புரிந்தது. வடசூடானிய ஆட்சியாளர் பாரிய ஒடுக்குமுறைகளைபிரயோகித்து தென் சூடானியரை அடக்கமுயன்றனர்.

இப்போது பிரச்சினைக்கான கரு ஓரளவு தெரிந்திருக்கும். இனிவிடயத்துக்கு வருவோம் சூடான் ஒரு நாளுக்கு ஒரு லட்சம் பரல் மசகெண்ணெயை உற்பத்தி செய்யும் நாடு. இவ்வளத்தையும் மிகப்பிரிந்திய காலத்திலேயே கண்டுபிடித்தனர். (15 வருடத்துக்கு முன்பு) தென்,தென்மேற்குப் பிரதேசத்தில் காணப்படும் எண்ணெய் வளம் வடசூடான் மட்டுமன்றி உலகத்தின் கவனம் திரும்புவதற்கும் காரணமாகியது. தென் சூடான் வயல்களை சீனாவுக்கு வழங்கியிருப்பதும் இப்பிரச்சினையில் மேற்குலகம் கவனம் செலுத்தக்காரணமெனக் கூறப்படுகின்றது.

1983களில் தொடங்கிய தென்- வட சூடான் வன்முறை



1999 இல் சூடானிய சட்டத்தரணி Ghagi suliman என்பவரின் முயற்சியால் சமாதான உரையாடலுக்கு தயாராகியது. பின்னர் பாரிய உயிர் அழிவுகள் மனித உரிமைகள் மீறப்பட்டது என்ற விடயங்களுடன் சர்வதேச சமூகத்தின் பிரசன்னம் ஆரம்பித்தது. அமெரிக்கா, பிரித்தானியா, ஐ.நா சபை என்பன சூடான் விவகாரத்தில் அக்கறை எடுத்ததுடன் மேலும் ஆபிரிக்க யூனியனும் எகிப்து, லிபியா போன்ற நாடுகளின் சமாதானக் குழுக்களும் இணக்கப்பாட்டுக்கான முயற்சியில் ஈடுபட்டன. பெருமளவில் உலக நாடுகள் சூடான் விடயத்தில் கவனம் செலுத்தின. சூடானுடன் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்ட அனைத்து நாடுகளும் தலைவர்களும் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தின. இத்தகை நெருக்கடியும், அழுத்தமும் வலுவுடைய வடசூடான் அரசாங்கம் படிப்படியாக இணங்கியது. இறுதியில் இடைக்கால தன்னாட்சி முறைமைக்குரிய அந்தஸ்தை வழங்கி அரசியலமைப்பு ரீதியிலும் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியிலும் வடசூடான் அரசாங்கம் தென்சூடானிய விடுதலைப் படைகளுடன் இணங்கியது. தற்போது தென்சூடானியர் ஒருவர் உபசனாதிபதியாக நியமிக்கப்பட்ட நிகழ்வுவரையும் இடையிடையே குழப்பம் ஏற்பட்டாலும் வெற்றிகரமாக நகர்கின்றது.

2004இல் யுத்தநிறுத்த உடன்பாடும் இடைக்கால ஆட்சியும் குழம்பமடையும் நிலை ஏற்பட்டபோது அமெரிக்கா , பிரித்தானியா, ஐ.நா என்பன உடனடியாக களத்துக்கு விரைந்து நடவடிக்கை எடுத்து பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க உதவியது. வடசூடான் அரசாங்கத்தை எச்சரித்தல், மிரட்டுதல், அச்சுறுத்தல் பாணியிலேயே டார்பூரின் பிரச்சினையை உலகம் தீர்த்துவருகிறது. இன்னுமே தீர்வு முழுமையடையவில்லை என்றே கூறலாம். தற்போது ஏற்பட்ட முறுகலுக்கு தீர்வுகாண ஆபிரிக்க யூனியனுக்காக சமாதானப்படை அப்பிரதேசத்துக்கு விரைந்துள்ளது. நிலைமையை கட்டுப்படுத்த நடவடிக்கை ஐ.நா மட்டுமன்றி ஆபிரிக்கயூனியனும் கவனம் எடுத்துவருகின்றது.

எனவே சர்வதேச சமூகம் எப்படி சூடானையும் அதன் வன்முறையையும் முடிவுக்குக் கொண்டுவர முயலுகின்றதை புரிதல் வேண்டும். இதே போன்றே கிழக்குத் தீமோரியரையும் சர்வதேசம் கையாண்டது. இதனால் சர்வதேச சமூகம் தேசிய விடுதலைக்கான போராட்டங்களை புதிய பாணியில் அணுக ஆரம்பித்துள்ளது. காரணம் அதற்கு குறிப்பாக சர்வதேச நடிப்புகளை ஆற்றும் அரசுகளுக்கு உலகம் அமைதியாக இருப்பது அவசியமானது. அவை பொருளாதார யுத்தம் ஒன்றை நிகழ்த்தி வருகின்றன. அந்த அரசியல் பொருளாதார யுத்தத்திற்குள் ஆயுதப் போரோ, யுத்தமோ அவசியமற்றது. என்பதனால் தீர்வுகளை திணிக்கவும் சாத்தியப்படுத்தவும் முயல்கின்றன. இதுவே சர்வதேச சமூகம் கவனம் செலுத்தக் காரணமாகும்.

இந்த வரிசையில் இலங்கை தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தையும் அவ்வாறே சர்வதேச சமூகம் கையாள முனைகின்றது. அத்தகைய இணக்கப்பாட்டுக்கான முயற்சி சாத்தியப்படாத போது கிழக்குத் தீமோர் போன்ற நிலை உலகத் துக்கு தவிர்க்க முடியாததாகும். அதற்காக • முயன்று பணியாற்றி தந்திரமாக நகராது விட்டால் அது சாத்தியப்படும் என்பதல்ல. யதார்த்தத்தில் கிழக்கு தீமோர் நிலையை நோக்கி தமிழர்களின் விடுதலைப்போராட்டம் செல்லும் வரலாற்று பொறுப்புக்குள் அகப்பட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு நன்கு மேலும் மேலும் உணர்த்தப்பட வேண்டியது அவசியமானது.

அத்தகைய சந்தர்ப்பம் அதிகம் தென் இலங்கை ஏற்படுத்தி வருகிறது. அதனால் அந்தச் சந்தர்ப்பங்களை அரசியல மட்டத்தில் நிகழ்த்தினால் சமாதானத்திலும் தமிழர் வெற்றிபெறலாம். உலகம் எங்கு நிற்கிறதோ அங்கே நியாயமும் நீதியும் நிற்பதாகக் கருதப்படும். அதுவே தமிழர்களுக்கு அவசியமானது. வட.தென் சூடான் விவகாரத்தில் பங்கெடுக்காத அரசுகளோ அரிதெனக் கூறலாம். சூடானில் எண்ணெய்வளம் இலங்கையில் 'நிலையம்' அல்லது அமைவிடம் என்றவகையில் உள்ளது.

எனவே சூடானின் சமாதான முயற்சியிலிருந்து நாம் அதிகம் கற்கவேண்டும். உலகம் சூடான் கிழக்குத் தீமோர் பாணியில் தமிழீழத்தையும் கையாளமுனைவது தென்படுகின்றது.

**ஐங்கரன்**

# உயர்நீதிமன்றத் தீர்ப்பும் — தமிழ் மக்களின் உணர்வலைகளும்

பொதுக்கட்டமைப்பின் செயற்பாடு, சரத்துக்கள் என்பன குளத்திலிருந்து விநியோக வாய்க்கால் வழியாக நீர் வயலுக்குச் செல்வது போன்றது. இந்நிலையில் விநியோக வாய்க்காலில் எங்கேனும் தடை அல்லது தடங்கல் ஏற்படின் வயலுக்கு நீர் செல்வது என்பதும் தடை அல்லது தடங்கல்களுக்கு உள்ளாகும்.

அந்தவகையில் சிறிலங்காவின் உயர் நீதிமன்று வழங்கிய தீர்ப்பு இவ்வாய்க்காலில் சில சில இடங்களில் தடையினை ஏற்படுத்தி விட்டது. எனவே நீர் பயிருக்குச் செல்வதும் நிறுத்தப் பட்டு விட்டது. இனி பாதிக்கப்பட்டுள்ள பயிருக்குச் செல்லாது. அதே நேரம் வந்த வழியே திரும்பி யும் செல்லமுடியாது. அத்தோடு தடைபோட்டவர்களின் இலக்கின் படி வேறு தேவை களுக்கு திருப்பிவிடப்படப் போகிறது. வேண்டுமென்றால் பலரை திருப்திப்படுத்த தங்களுக்கு தேவையான சில வயல்களுக்கு திருப்பிவிடப்படலாம். அது சிங்கள தேசத்தின் வயல்களாக இருக்கும்.

ஆனால் இங்கு பாதிக்கப்படப் போவது நிச்சயமாக தமிழர்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதன் வெளிப்பாடுதான் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்கள் கூறிய இந்தக் கருத்து.

"எங்கள் மக்களுக்காக அவசர மனிதாபிமானத் தேவைகள் எதனையும் சிறிலங்கா அரசிடம் இணக்கப்பாட்டை ஏற்படுத்திப் பெறலாம் என்ற நம்பிக்கை பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்புடன் முற்றாகத் தகர்ந்து விட்டது"

இனி எமது மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதையும் பாருங்கள்.

## சிறிலங்காவின் நீதித்துறை எப்போதும் நீதியாக செயற்பட்டதில்லை



விஜியசேகரன்,
கிளிநொச்சி அழகியற்கலாமன்ற அதிபர்.

''சிறிலங்காவினுடைய உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்னைப் பொறுத்த வரையில் ஆச்சரியத்தினையோ அல்லது வியப்பினையோ ஏற்படுத்தவில்லை. நான் இதை விட காரசாரமாக அல்லது கடுமையான ஒரு தீர்ப்பினைத்தான் எதிர்பார்த்தேன், சிறிலங்காவின் அரசோ அல்லது அதன் அமைப்புக்களோ அல்லது சட்டங்களோ எச்சந்தர்ப்பத்திலும் தமிழர்களுக்கு நீதியான முறையில் செயற்பட்டதில்லை. இது கடந்த கால வரலாறுகளை தெளிவாக பார்த்தால் விளங்கும்.

சிங்கள அரசுகள் தமிழர்களோடு செய்துகொண்ட ஒப்பந்தம் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை. செயற்படவும் இல்லை. யுத்தநிறுத்த உடன்படிக்கை மாத்திரம் ஏதோ ஒரு நிர்ப்பந்தத்திற்கு மத்தியில் நிலைத்து நிற்கிறது. இல்லையென்றால் அதுவும் எப்போதோ முறிவடைந்திருக்கும். எனவே கிளிநொச்சியில் இயங்க இருந்த பிராந்திய அலுவலகத்தை புலிகள் சார்பாகத்தான் சிங்கள தேசம் பார்த்ததே தவிர ஒரு மனிதாபிமான உதவி வழங்கும் அமைப்பாக பார்க்கவில்லை.

## அரசு எப்போதுமே விசுவாசமாகச் செயற்பட்டதில்லை

உண்மை விளக்கம் புத்தகசாலை உரிமையாளர்.



உதயகுமார்.

" எல்லாத்திற்கும் ஓம் எண்டுதானே ஒப்பம் இட்டவை. பிறகேன் பிக்குமார் கத்துறாங்கள், ஜே.வி.பி கத்துறாங்கள் எண்டு ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி மௌனமாக இருக்கவேணும். அவ நினைச்சா எதையும் செய்யலாம். அப்படி செய்ய முடியாது என்றால் பிறகேன் அவாவுக்கு நிறைவேற்று அதிகாரம். இதால பாதிக்கப்படப் போவது மக்கள்தானே. எப்ப பார்த்தாலும் சிங்கள அரசாங்கம் உறுதியாக, விசுவாசமாக நடந்த தில்லை. ஒருபக்கம் பேச்சுவார்த்தை, சமாதானம் என்று கூறிக் கொண்டு மற்றப்பக்கம் அதற்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்குவினம்"

## தீர்ப்பு வெறும் ஏமாற்றத்தை அளித்துள்ளது

கு. இரத்தினேஸ்வரக் குருக்கள்,
இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சிப்பிரதிநிதி.



"போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்த நிலையிலும் கூட அதில் கூறப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவாக உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டு மக்களின் இயல்பான வாழ்க்கைக்கு வழி சமைக்கப்படவில்லை. அத்தோடு அதில் கூறப்பட்டுள்ள பல்வேறு விடயங்களும் இன்றும் நடைமுறைப்படுத்தப் படவில்லை. இந்நிலையில்தான் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும் அமைப்பாக உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்புக்கு சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் விதித்த தடையானது எமக்கு பெரும் கவலையை அளிக்கின்றது. ஏற்கனவே போரினால் பாதிக் கப்பட்ட எமது மக்கள் சுனாமி அனர்த்தத் தினாலும் எல்லாவற்றையும் இழந்துபோய் காணப்படுகின்றனர். இவர்களுக்கு பொதுக் கட்டமைப்பு மூலம் ஏதாவது உதவிகள் சென்றடையும் என்று இருந்தவர்களுக்கு இந்த தீர்ப்பு பெரும் ஏமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. எனவே ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு இனிமேல் நல்லதொரு முடிவினை எடுத்தால் நாம் அதையிட்டு சந்தோசம் அடைவோம்"

## சிங்கள அரசிடம் மனிதாபிமானத் தன்மையே இல்லை

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி ஒருவர்.



"பொதுக்கட்டமைப்பு கைச்சாத்து இடப்பட்ட போதே அது தொடர்பாக எங்களுக்கு, பெரிசா ஒரு நம்பிக்கையும் இல்லை ஏனென்றால் சமாதானம் ஏற்பட்டு மூன்றாண்டுகள் கடந்தும் ஒழுங்காக நடைமுறைப் படுத்தப்பட்டதாக இல்லை. அதாவது இப்பவும் கூட சோதனைச்சாவடி களினூடாக மோசமான அவசர சிகிச்சையளிக் கக் கூடிய நோயாளிகளை கொண்டு சென்றா லும் கூட கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் குறையாமலே இருக்கின்றன. ஒரு அவசர நோயாளிக்கு வழங்கக்கூடிய முன்னுரிமை மறுக்கப்பட்டே வருகிறது. எனவே இப்படித்தான் பொதுக்கட்டமைப்பின் செயற்பாடும். சனாதிபதி நினைத்தால் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஏதேனும் நல்ல முடிவுகளை எடுக்கலாம். ஆனால் அப்படி எடுப்பாரா என்றால் இல்லை என்றுதான் கூறவேண்டும். பொதுக் கட்டமைப்பு என்பதும் ஒரு அரசியல் தந்திரம். அதில் சிறிலங்கா அரசைப் பொறுத்தவரை எவ்வித மனிதாபிமானத் தன்மையும் இல்லை. இதனால் பாதிக்கப்படப்போறது அப்பாவி மக்கள்தான்"

**மு.தமிழ்ச்செல்வன்**


## அரசு தமிழ் மக்களை கண்டுகொள்வதாகவே இல்லை

அருட் சகோதரி மலர்விழி.

"ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை சுனாமி அனர்த்தம் பெரும் சேதத்தினை அவர்களது வாழ்க்கையில் ஏற்படுத்தியது. இதற்குப் பின் நிவாரணம் பகிர் தல் தொடர்பில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப் பட்டனர். அரசாங்கம் தமிழ் மக்களை கண்டு கொள்வதாகவே தெரியவில்லை. இந்த நிலை யில் பொதுக்கட்டமைப்பு ஊடாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணம் பகிர்தல் நியாய மான முறையில் சென்றடையும் என்று எதிர் பார்த் தோம். ஆனால் அந்த நேரத்தில் உயர் நீதிமன் றத்தின் தீர்ப்பு இப்பிடி வந்துவிட்டது. இது எல்லோருக்கும் பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. இதனால் எங்களின்ர மக்க ளின் வாழ்க்கை நல்லா பின்தள்ளப்படப்போகுது"

## சிங்கள தேசத்திடமிருந்து எதனையும் எதிர்பார்க்கமுடியாது

மு.சிவபாலன்.



" இந்தத் தீர்ப்பின் பின் சுனாமியால பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலைப்பாடு தான் கவலையானவிடயம். சிங்கள நீதிமன்றங்கள் எப்போதுமே தமிழ் மக்களுக்குச் சார்பாக நடந்துகொள்வதில்லை என்பது இந்தத் தீர்ப்பில் மட்டுமல்ல எங்களுக்கு கடந்த கால நடவடிக்கை மூலமே தெரியும். இந்தத் தீர்ப்பு அதன் ஒரு வெளிப்பாடுதான். பொதுக் கட்ட மைப்பு போர் நிறுத்த உடன்படிக்கையை மேலும் வலுப்படுத்தி இருதரப்புக்கிடையிலும் நம்பிக்கைகள் கட்டியெழுப்பப்படும் என்றெல்லாம் நம்பியிருந்தோம். ஆனால் தற்போதைய நிலைமைகள் அவை எல்லா வற்றையும் ஆட்டம் காண வைத்து விட்டது. சிங்கள தேசத்திடம் இனியும் நாங்கள் எதனையும் எதிர்பார்க்கிறதில எவ்வித பிரயோசனமும் இல்லை"

## புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் செயல்

க.சித்திரவேல்




''பொதுக்கட்டமைப்பு மூலம் சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணம் அளிக்கப்பட இருந்தது. நிச்சயமாக அந்த மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் வழங்க வேண்டும். இதில எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. நாங்கள் எல்லோரும் போரினால் பாதிக்கப்பட்டனாங்கள் தான். ஆனால் அந்த மக்கள் கொடிய சுனாமி அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எனவே அப்படிப்பட்ட அந்த மக் களுக்கு உதவி செய்கின்ற ஒரு அமைப்புக்கு சிறிலங்காவின் உச்ச நீதிமன்றத் தடை உத்தரவு போட்டிருப்பது உண்மையில் பாரபட்ச மான செயல்.

அத்தோடு தமிழ் மக்களை பொறுத்த வரை தமிழீழ விடுதலைப்புலிகள் தான் ஏக பிரதிநிதிகள். எனவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயமான முறையில் உதவிகள் சென்றடைய வேண்டுமென்றால் விடுதலைப் புலிகளிடம்தான் ஒப்படைக்கவேண்டும். எங்களைப் பொறுத்தவரை அவர்கள் தான் எங்களது தேவைகளை பூர்த்திசெய்யக் கூடியவர்கள்"

எனவே இந்தத் தீர்ப்பும் இப்போது இடம்பெறுகின்ற செயல்களும் புலிகளை வலிந்து யுத்தத்திற்கு இழுக்கும் செயற் பாடாகவே கருதவேண்டியுள்ளது.



## மருத்துவம்

மருந்துகளைச் சாப்பிடும்பொழுது நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். மருந்துகளைப் பயன்படுத்தும் முறைகளை முழுமையாக அறிந்து கொண்டு பயன்படுத்தும்பொழுது நமக்கு விரைவில் நல்ல குணம் தெரியும்.



# மருந்துகளில் கவனமாயிருங்கள்

மருந்துகளை சாப்பிடும் முன் கவனத்தில் கொள்ளவேண்டியவை:

*.மருத்துவர் உங்களைப் பரிசோதித்து உங்களுக்கான மருந்தை பரிந்துரைக்கும் முன் அவரிடம் உங்களுக்குள்ள மற்ற பிரச்சினைகளையும், சந்தேகங்களையும் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

*. உங்களுக்கு ஏதாவது மருந்துகள், உணவுப் பொருள்கள் ஒவ்வாமை இருப்பின் தெளிவுபடுத்துங்கள்.

*.மருத்துவக் காரணங்களால் அல்லது உடல் எடை குறைக்க வேண்டி உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றி, குறைந்த உப்பு, குறைந்த சீனி உபயோகப்படுத்தினால் மருத்துவரிடம் தெரிவிக்கவும். ஏனெனில் சில மருந்துகள் அதிக வீரியத் தன்மையுடையதாக இருக்கும். சில மருந்துகளில் அல்கஹோல் கலக்கப்பட்டிருக்கும். இவை சில விளைவுகளை ஏற்படுத்தலாம்.

*.கர்ப்பமுற்றிருக்கும் பொழுது கட்டாயம் மருத்துவரிடம் தெளிவுபடுத்தவும். கர்ப்பமுண்டாவதற்கான ஏற்பாடுகளில் இருப் பினும் தெரியப்படுத்தவேண்டும். சில மருந்துகள் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்றவை அல்ல.

*.அதே போல் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்கும் பெண்களும் மருத்துவரிடம் கட்டாயம் தெரிவிக்கவேண்டும். சில மருந்துகள் தாய்ப்பாலுடன் குழந்தைக்குச் சென்றுவிட வாய்ப்புகள் உண்டு.

*. மருத்துவரை சந்திப்பதற்கு முன் எடுத்துக்கொண்ட மருந்துகள் அல்லது வேறு ஏதாவது பிரச்சினைகளுக்காக மருந்துகள் சாப்பிட்டுக்கொண்டிருந்தால் கட்டாயம் அவரிடம் தெரியப்படுத்தவேண்டும்.

*.மருத்துவர் உங்களுக்கான மருந்துகளை எழுதும் தாளில் அவர் எழுதிக்கொடுக்கும் சாப்பிடும் முறைகள் புரியாவிட்டால் உடனுக்குடன் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள். மருத்துவர்களுக்கு நேரம் இல்லாது இருப்பின் அவர் உதவியாளர்களைக் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள்..

**மருந்துகளைப் பாதுகாக்கும் முறை**

*. மருந்துகளை வாங்கி வந்த பின் அவற்றை ஒழுங்காகப் பாதுகாக்க வேண்டும்.

*. குழந்தைகளின் கைக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைக்க வேண்டும்.

*. மருந்துகளை எந்தக் காரணத்தைக் கொண்டும் அதற்குரிய போத்தல்களில் இருந்து மற்ற போத்தல்களுக்கு மாற்றாதீர்கள்.

*. மருந்துகளை நேரடியான சூடு, வெளிச்சத்திலிருந்து பாதுகாப்பாக வைத்திருங்கள்.

*. மாத்திரைகளை ஈரப்பதத்தில் இல்லாமல் பத்திரமாகப் பாதுகாக்கவேண்டும்.

*. மருந்துகளை குளிர்சாதனப் பெட்டி[illegible] வைக்கச்சொல்லியிருந்தால் மட்டுமே வைக்க வேண்டும். இல்லாவிடில் [illegible]க்கக் கூடாது.

*. வ[illegible]திக நாட்களான மருந்துகளை ஒரு கா[illegible]தக கவரில் இட்டு, நன்கு ஒட்டி குப்பையில் சேர்த்து உடனுக்குடன் அப்புறப்படுத்தவும் சரியான முறையில் மருந்துகளைப் பயன்படுத்துங்கள்.

*. உங்கள் மருத்துவர் பரிந்துரைத்த மருந்துகளை, சரியான அளவை சரியான நேரத்தில் அவர் குறிப்பிட்டுள்ள காலம் வரை உபயோகிக்க வேண்டும்.

*. மருந்துப் போத்தல், டப்பாக்களை நன்கு அழுத்தி மூடி வைக்கவும். மருந்துகளுடன் வரும் உபயோகப்படுத்தும் முறைகளுடன் வரும்தாள்களை மருந்து சாப்பிடும் காலம் வரை பத்திரமாக வைத்திருக்கவும். அதில் அந்த மருந்துகளைப் பற்றிய முக்கிய குறிப்புகள் கொடுக்கப்பட்டிருப்பதால் அது மிக முக்கியம்.

**மருந்துகள் உட்கொள்ளும் முறை:**

*. பொதுவாக மருந்துகளை ஒரு தம்ளர் நீருடன் சாப்பிடுவதே சிறந்தது. சில மருந்துக்களைச் சாப்பாட்டிற்கு முன் அல்லது பின் சாப்பிட வேண்டி இருக்கும். அதைக் கவனத்தில் கொண்டு சாப்பிடவேண்டும்.

*. மருந்துகளை பொடி செய்தோ, உடைத்தோ அல்லது கடித்தோ சாப்பிடக் கூடாது. மருந்துகளை நீருடன் விழுங்கிச் சாப்பிடுவதே சரியான முறை.

*. டொனிக., சிரப் வகை மருந்துகளைச் சாப்பிடும் பொழுது மருந்துப் போத்தல்களில் குலுக்கி உபயோகிக்கச்சொல்லியிருக்கிறதா எனப்பார்த்து அதன்படி குலுக்கி அந்த போத்தல்களுடன் கொடுக்கப்பட்டுள்ள அளக்கும் மூடியைக் கொண்டு அளந்து சாப்பிட வேண்டும்.

*.மூடியில் ஊற்றிச் சாப்பிடுவதோ, உத்தேசமாக ஊற்றிச் சாப்பிடுவதோ கூடாது. அளக்கும் மூடியோ, கரண்டியோ இல்லாமல் இருந்தால் மருந்துக் கடைக்காரரிடம் கேட்டு வாங்கி வைத்துக்கொள்ளவும்.

*.மருந்துகளை விழுங்குவதில் சிரமம் இருந்தால் மருத்துவரிடம் தெரிவித்து சிரப் வகையான மருந்துக்களை வாங்கிக்கொள்ளவும்.

**பாதுகாப்பு அவசியம்:**

*.நீங்கள் பயன்படுத்தும் மருந்துகளை மற்றவர்களுக்குப் பரிந்துரைப்பதோ, கொடுப்பதோ மிகவும் தவறான ஒரு செயல்.

*.மருந்துகளைத் தண்ணீருடன் சாப்பிடவும். தேனீர், கோப்பி மற்றும் பலவிதமான பானங்களுடன் சாப்பிடவே கூடாது.

*.ஏதாவது அவசர சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டால் நீங்கள் பயன்படுத்தும் மருந்துகளை மருத்து வரிடம் மறக்காமல் சொல்லவும். பல் மருத்துவம் செய்யும் சமயத்திலும் பல் மருத்துவரிடம் மறக்காமல் சொல்லவும்.

*.தவறு காரணமாக தவறான மருந்துகளை உட்கொண்டாலோ அல்லது அதிகமான அளவு எடுத்துக்கொண்டாலோ உடனடியாக மருத்துவ உதவியை நாடவும்.



## அறிவியல்



# பன்றிகள் தயாரா...? எதற்கு..?

மனித உடலுக்குத் தேவையான உடல் உறுப்புக்களை தயாரிக்க உகந்த பன்றிக்குட்டிகளை மரபணு மாற்ற முறையில் தெற்கு கொரிய அறிவியலாளர்கள் தயாரித்துள்ளார்கள்.

இதன் தலைமை அறிவியலாளரான பார்க் க்வாங்-வூக் அவர்கள் HLA-G என்ற ஜீன் உள்ளதாக இந்த பன்றிக் குட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று அறிவித்திருக்கிறார். இந்த ஜீன் உள்ள பன்றிகள் உருவாக்கும் மனித உடல் உறுப்புகள் மனிதர்களுக்கு அறுவை சிகிச்சை மூலம் பொருத்தப்படும்போது அவை மனித உடலால் ஏற்றுக்கொள்ளப்படும் வாய்ப்பு அதிகம்.

ஒரு பன்றியின் செல்லில் இந்த ஜீனை செலுத்திய பின்னர் இந்த ஜீன் மற்றொரு பன்றியின் கர்ப்பப்பையில் வைக்கப்பட்டு ஐந்து நகல் பன்றிக்குட்டிகள் உருவாக்கப்பட்டன.

பன்றியிடம் உருவாக்கப்பட்ட மனித உடல் உறுப்புகள் மனிதருக்கு மாற்றம் செய்யப்படும்போது அவை மனித உடலில் உருவாகும் எதிர்ப்புச் சக்தியுள்ள செல்களால் நிராகரிக்கப்பட்டுவிடுகின்றன.

HLA-G ஜீன் உள்ள செல்கள் 70 சதவீத விஷத் தன்மையை குறைக்கின்றன என்று பார்க் கூறுகிறார். இதனால் நிராகரிப்பு சதவீதம் குறைகிறது. இந்த ஆராய்ச்சிக்கு அரசாங்க உதவி கொடுக்கப்பட்டுள்ளது.



# நட்சத்திரங்களுக்கு பயணம்...

எல்லா வானியல் அறிவியலாளர்களுக்கும் தொழில் நுட்பவியலாளருக்கும் ஒரு வானூர்தியை நட்சத்திரத்துக்கு அனுப்புவது தீராத கனவு.

கடந்த 30 வருடங்களாக இப்படி ஒரு வானூர்தியை ஒரு நட்சத்திரத்துக்கு அனுப்பவேண்டும் என்று பலரும் கோரி வருகிறார்கள். எப்படி இப்படிப்பட்ட ஒரு வானூர்தியை கட்டுவது என்பதற்கான அறிவு இன்று விஞ்ஞானிகளுக்கு இருப்பது போலவே தோன்றுகிறது. சவாலான ஒரு வேலையாக இருந்தாலும் செய்யக்கூடியது தான். Innovative Interstellar Explorer (IIE) என்ற பெயர் கொண்ட ஒரு வானூர்தி அமைக்க வரைபடமும் தயாரித்தது. அது சுமார் 200 வானியல் அலகுகள் செல்லக் கூடியது. (பூமியின் மத்திக்கும் சூரியனின் மத்திக்கும் இடையேயான தூரம் ஒரு வானியல் அலகு Astronomical Unit அதாவது 150 மில்லியன் கிலோமீற்றர்கள்.)

எப்படிப் பார்த்தாலும் இது மிக நீண்டதூரம்தான்.


"இது நிச்சயம் செய்யக் கூடியதுதான்" என்று ரால்ப் மக்நட் கூறுகின்றார். இவர் Innovative Interstellar Explorer (IIE) இன் தலைமை ஆய்வாளர். புதன் கிரகத்துக்கு மெஸென்ஞ்சர் என்ற வானூர்தியை அனுப்பிய திட்டத்தின் தலைமை ஆய்வாளரும் இவரே.

இந்த Innovative Interstellar Explorer (IIE) வானூர்தியை சுமார் 2014 இல் அனுப்பினால் 200 வானியல் அலகுகளைக் கடக்க இந்த வானூர்திக்கு 2044 ஆகியிருக்கும். இங்கு காத்திருக்கும் அறிவியலாளர்களுக்கு நிறைய பொறுமை இருக்க வேண்டுமென்பதில் சந்தேகமில்லை.

2014 அனுப்பப்பட வாய்ப்புள்ள இந்த வானூர்தி வியாழன் கிரகத்தை இரண்டே வருடங்களில் அடைந்து அதன் புவியீர்ப்பு விசையை ஒரு கவண் போல உபயோகித்துக் கொண்டு வேகம் எடுத்துச் செல்லும்.

இது வெகுகாலத்துக்குப் பின் நடக்கக் கூடிய விஷயம் போல இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இதனை பரந்த நோக்கில் பார்க்க வேண்டும்.

# குளோனிங் முறைக்கு அனுமதி..?




மருத்துவத்திற்காக குளோனிங் (நகல்) சய்வதை அனுமதிக்கத் திட்டம் இருக்கிறது என்று ஸ்பானிய மருத்துவ அமைச்சர் தெரிவித்திருக்கிறார். இந்த முடிவு அரசாளும் சோசலிஸக் கட்சிக்கும், சக்தி வாய்ந்த ரோமன் கத்தோலிக்க தேவாலயத்திற்கும் இடையே புதிய சண்டை வர வாய்ப்பை அதிகரித்துள்ளது.

எல் முண்டோ என்ற பிரபல பத்திரிகைக்கு கொடுத்த பேட்டியில், இந்தச் சட்டம் அடுத்த வருடமே சட்டபூர்வமாகும் என்று இவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

"தேவாலயங்கள் எப்போதுமே அறிவியல் முன்னேற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளன. ஆனால், அதிஷ்ட வசமாக அறிவியல் தொடர்ந்து முன்னேறி வருகிறது. அதனால் நாம் இன்று முன்னை விட நன்றாக வாழ்கிறோம்" என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மருத்துவ குளோனிங் முறையில் கருக்களை உருவாக்கி அவற்றில் இருக்கும் தண்டு செல்களை அறுவடை செய்து நோய்களைத் தீர்க்க பயன்படுத்துவார்கள். இந்த முறை மிகவும் விவாதத்துக்குரியது. ஏனெனில் அந்தக் கருக்கள் பின்னால் தூக்கியெறியப்பட்டு விடுகின்றன.

பிரிட்டன், பெல்ஜியம், சிங்கபூர், சீனா ஆகிய அரசாங்கங்கள் இந்த முறை டையபடிஸ், அல்சைமர், முதுகுத்தண்டு பாதிப்பு போன்ற நோய்களுக்கு மிகச் சிறந்த மருத்துவம் என்று கூறுகின்றன.

# காரசாரம்

## "வீட்டைக் கட்டிப்பார் கலியாணம் பண்ணிப்பார்"

"வீட்டைக் கட்டிப்பார். கலியாணத்தைப் பண்ணிப்பார்" என்பது ஒரு பழமொழி. இரண்டும் தொடங்கி முடிக்கும் வரை ஒன்றன்பின் ஒன்றாகப் பிரச்சினைகள் வந்துகொண்டேயிருக்கும். அதிலும் வன்னியில் இந்த வீடு கட்டும் பிரச்சினை உள்ளதே இதைவிட "தூங்கிச்சாகலாம்". என்பது போலப் பெருந்துன்பமானது. பெரும் பணக்காரர்களாயினும் சரி சிறு சேமிப்புடன் ஓரளவு கடனும் பட்டு வீடு கட்டுவோராயினும் சரி ஆரம்பித்து முடிக்கும்வரை அயர்ந்துதான் போகிறார்கள்.

குறிப்பாகத் தொழிலாளர் பிரச்சினை 'ஓகோ'ன்று வளர்ந்துள்ளது. மேசன், தச்சுவேலை போன்ற துறைகளின் ஆட்பற்றாக்குறை நிரவக் கூடியதாக இருந்தாலும் இந்தத் துறைகளுக்கான கேள்வி இவர்களது ஊதியத்தை அளவுக்கு மீறி உயர்த்தியுள்ளது. ஆகவே தொழில் செய்பவர்களும் இரண்டு நாள் வேலை செய் தால், நாலுநாள் உட்கார்ந்து சாப்பிடுகிறார்கள். உழைப்பாளிகள் முன்னேறாமல் இருப்பதற்கும், தொழிலாளர் பற்றாக் குறைக்கும் இதுவுமொருகாரணம்.

ஒரு சிறிய வீட்டைக்கட்டிக் கொள்ள முயன்ற நான், அதற்கான பணம் ஒரு இலட்சத்தை முதலில் சேகரித்தேன். பிறகு ஒரு கொத்தனாரை அணுகி நான் என்னென்ன பொருட்களை வாங்க வேண்டும் என்று கேட்டேன். அவர் வந்து இடத்தைப்பார்த்தார். வைகாசி மாதம். எனக்கு ஆடி மாதம் 5ஆம் திகதிக்குள் அதை முடித்துத் தரவேண்டும் எனவும் பொருத்திக் கொண்டேன்.

மூன்று லோட் மணல், ஆயிரம் கல், சல்லிக்கல், கண்டக்கல், கம்பி, மரம், சீற், ஆணிவகை, எனப்போடப்பட்ட பட்டியலில் ஒன்றொன்றாக வாங்கி முடிய ஒரு இலட்சம் ரூபாவும் சரியாகிவிட்டது.

அதன்பின் கட்டடத் தொழிலாளர்களை அழைக்க நான்கு தடவை சைக்கிளோடி அவர்கள் வீட்டுக்குச் செல்லவேண்டியதாயிற்று. வந்தார்கள். அத்திவாரம் போட்டார்கள். போனார்கள். பின்னும் நான்கு தடவைகள் வீடு தேடி அழைத்து அவர்களைக் கொண்டு வந்துவிட்டேன். அதென்ன! வராமல் வீட்டில் நின்றால் நிற்பார்கள். வந்தால் அன்றைக்கே கூலி வேண்டுமென்பார்கள்.

அன்று நான்கு வரிசை கல்லடுக்கி முடிக்கவும், மனம் பூரிப்பாக இருந்தது. மாலையில் போனவர்கள் மறுநாள் வரவில்லை. தொடர்ச்சியாக நான்கு நாட்கள் நானும் பேசாமல்விட்டு விட்டேன்.

பிறகும் வராது தேவே தேடிப் போனேன். தலைமைக் கொத்தனாரின் மச்சான் பிரான்சிலிருந்து வந்திருப்பதாகவும் அவரைக் கூட்டிவர அவர் கொழும்பு போயிருப்பதாகவும் தகவல் வந்தது. சரி வேறு யாரையாவது பார்க்கலாம் என்றால் ஒருவர் பொருத்தம்பேசிய கட்டடத்தை மற்றவர் செய்வது வழக்கமில்லை என மறுத்து விட்டனர்.

மச்சான் வந்துபோன பிறகும் 'பாஸுக்கு' வெறிமயக்கம் தீர இரண்டு மூன்று நாளாயிற்று. பின்னும் பலதடவை அலைந்த பின் வந்தார்கள். மூன்றுநாள் வேலை செய்தார்கள். மறுநாள் வரவில்லை. ஒருவருடைய வீட்டில் 'திவசம்' என்றார்கள்- மற்றநாளும் வரவில்லை.! "கூட நிண்ட பெடியனுக்கு கலியாணம்" என்றார்கள். மறுநாள் வந்தார்கள். முற்றாகக் கம்பி தீரும் வரை வாயைப் பொத்திக்கொண்டிருந்து விட்டு, "இன்றைக்கு வேலைசெய்ய கம்பி காணாது" என்றார்கள்.

பகலில் சொன்னதால் நான் அரை மணித்தியாலத்துக்குள் கொண்டு வந்து கொடுத்தேன். மறுநாள் மத்தியான உணவின்போது "கல்லின்னும் வேணுமோ?" என்று கேட்க "ம்... பாப்பம்" என்றார். மாலையில் இருந்த கல்லை முடித்து வீட்டுக் குப் புறப்படும் போதுதான் கல்லும் காணாது இன்னும் மூன்னூறு கல்லெண்டாலும் வேணும் என்றார்கள். நான் விடிவதற்குள் கல்லைத் தருவேன் என்றேன்.

அவர்கள் மறுநாள் வரவில்லை. சிலவேளை கல்லெடுக்கயில்லை யோ! என நினைத்து வரவில்லை என்றார்கள். பிறகு இரண்டு நாள் கழித்துச் சாவகாசமாக வந்தார்கள். சந்தோஷமாக வேலை செய்தார்கள். ஒப்பந்தப்படி இன்னும் நான்கு நாட்களில் வீடு தரவேண்டும் என்றேன்.

'பிரச்சினையில்லைத் தரலாம்' என்றார்கள். பூச்சுவேலையைச் செய்து முடிக்கவில்லை. வீட்டு வேலையும் முடியவில்லை. ஒப்பந்தம் செய்தநாள் கடந்து விட்டது. ஏன் வரவில்லை என்றால். செத்தவீடு, கலியாணவீடு, சமாத்திய வீடு, திவசம் என்று தான் காரணம் வைத்திருந்தார்கள்.



சுகவீனம், அலுப்பு, பஞ்சி போன்ற காரணங்கள் இல்லை. வெளி நாடுகளின் வளர்ச்சியோடு நாம் இணையும் நாள் வெகுதொலைவில் இல்லை என மார்தட்டிக் கொள்கிறோம். இந்தத் தொழிலாளர்களை நான் மேய்க்கத்திரிந்த நாட்கள் போதும் வீடுகட்டிமுடிய, அதாவது கட்டடக்கலை நான் பழகியிருந் தால், அல்லது தேவைக்கு மிஞ்சாத ஊதியமாக இருந்தால் அவர்களாவது தொடர்ந்து வேலை செய்திருப்பார்கள்.

புதன் கிழமை வரும் பிறந்த நாளை சனிக்கிழமைகளில்தான் கொண்டாடும் வெளிநாட்டு உழைப்பாளர்கள் அந்த நாட்டின் வளர்ச்சியில் எவ்வளவு அக்கறை யுடன் உழைக்கிறார்கள். எமது நாட்டில் உழைப்பவர்களுக்கு ஏனிந்த அலட்சியம். ஒரு வீட்டைக்கட்ட எடுக்கும் காலத்தில் நான்கு வீடுகளைக் கட்டலாமே. நீங்களும் நிரம்ப உழைத்து வெளிநாட்டைப் போன்ற வருமானத்தை ஈட்டலாமே.

சாதாரணமான மண் வீடுகள் கூட இப்போது பெறுமதி அதிகரித்து வருகிறது. ஒரு தென்னோலையின் விலை பதின்னான்கு ரூபா. கிடுகாக அதைப் பின்ன ஆறு ரூபா .ஒருமட்டை கிடுகை வரையில் வேய ஏழு ரூபா. மண்ணில் குழைத்துக்கல் அரிய ஒரு கல் மூன்று ரூபா, அதைசுவரில் கட்ட 10X10 சதுர அடிக்கு இரண்டாயிரம் ரூபாய்கள். இன்றைய கூலித்தொழிலாளியின் பெறுமதி மிக உயரம். கிணறு வெட்ட ஏழடி விட்டம் கொண்டுள்ள கிணறு பத்துமுழம் வெட்டி முடிக்க முழத்துக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா. தண்ணீர் வந்துவிட்டால் இறைக்கும் பொறுப்பு உரிமையாளருக்கு. ஒரு மலசலகூடக்குழிக்கும் இதே கூலி தான்.

ஒருவர் சொந்தமாக வீடு வைத்திருக்க எவ்வளவு கஷ்டப்பட வேண்டியுள்ளது. சரி, இந்த வீடமைத்தல் பொறுப்பை ஏற்றுள்ள நிறுவனம் அந்த வீடுகளைக் கட்ட அவ்வப்பிரதேசங்களிலிருந்து ஆட்களை எடுத்து மேசன் தச்சுத் தொழில் போன்வற்றில் பயிற்சியளிக்கிறது. ஆனால இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்தவர்கள் பயிற்சிக்குப் போகவில்லை. அல்லது முழுமையாகப் பயிலவில்லை. என்ற குற்றச்சாட்டு அந்த நிறுவனத்தின் பயனபாட்டை மறுதலிப்பதாக வந்துள்ளது.

மேலும். இந்தப் பயிற்சிகளுக்குப் பெரும்பாலும் உயர்ந்த கல்வித் தகைமை எதிர்பார்க்கப்படுவதில்லை என்பது இளைஞர்களுக்கு ஒரு குறைபாடாகத் தெரிகிறதோ? இதைவிட இன்னுமொரு செய்தி பெரும்பாலும் நம்மவர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பைத்தேடி இலட் சக்கணக்கான பணத்தைச் செலவிட்டுப் பயணிக்கின்றனர். அதே நேரம் தென்னி லங்கையிலிருந்து பெருமளவு வாலிபர்கள் வன்னிக்குள் வந்து வேலை செய்கிறார்கள்.

நாளொன்றுக்கு சராசரியாக அறுநூறு ரூபாவெனில் 18 ஆயிரம் ரூபாய்கள் சம்பளமாக உழைக்கிறார்கள். இதே வேலைகளைப் பகிர்ந்துகொண்டு தந்தையுடன் மகனும், பேரனும் கூடச் செய்வதைக் காண்கின்றோம். தவிரவும் இங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஏராளமான இளைஞர்களும் இதே வேலையைத்தான் செய்கிறார்கள். என்னதான் சொன்னாலும் எமது அன்றாடத் தேவைகளுக்கான வேலைகளுக்கு ஆட்கள் தொகை என்பது பெரும்பாலும் வெற்றிடமாகவே இருக்கிறது.

சம்பளம் என்பது மாதக் கடைசியில் வாங்குவது. கூலி என்பது அன்றாடம் வாங்குவது. என்ற கருத்துப் பொதுவாக நிலவுகிறது. எது எப்படியாயினும் ஒரு நாட்டினதோ, மாவட்டத்தினதோ, கிராமத்தினதோ அபிவிருத்தியை அங்குள்ள உழைப்பவர்களே செய்தாக வேண்டும். உழைப்பவர்களை சோம்பேறிகளாக்கும் அதிகபடியான கூலி. ஒரு கட்டடத்தொழிலாளி கூறினார், "மாசத்தில ஒரு கிழமை வேலை செய்தா எனக்குக் காணும்" என்று.

இதே கதையை கிணறு வெட்டுபவரும். வீடுவேய்பவரும் கூறினர். சாதாரணமாக மக்கள் தமது வேலைகளை முழுவதும் தாமே செய்யமுடியாது ஓரளவு தொழில் தெரிந்தவர்கள் தமது ஆற்றலைச் செலவிடும் அளவுக்கு அதிகமாகக் கூலி கேட்க ஆட்பற்றாக் குறையே காரணம். எங்கேயோ நாங்கள் தவறு விட்டு விட்டோம். இது இப்படியே போனால் எதிர்காலத்தில் நாம் பாரிய இக்கட்டுக்களை எதிர்நோக்கவேண்டி வரலாம்.

இயந்திரங்களை எல்லா வேலைகட்கும் பயன்படுத்தவோ எதிர் பார்க்கவோ முடியாது . கூலித் தொகையை மட்டுப்படுத்தினால் வேலைக்குப் போகும் தேவை வரலாம் என்றாலும் அது நடக்குமா? எல்லோரும் குறிப்பாக பெண்களும் இந்தத் துறைகளில் நுழைந்தாலதான் தட்டுப்பாடு குறையும். பின்னே சமுதாயத்தின் சரிபாதி சும்மா இருந்தால் எப்படிச் சுகம் வரும்.

-மாயா-



## விசுக்விசுக் விசாலாச்சி

"ஆள் மெத்தக் கூடினா மீன் மெத்தப்பிடிக்கலாம். பங்கிட்டுப் பாத்தா அங்கொண்டுமில்லையெண்டு சுனாமிக் கட்டமைப்புக்கும் ஒரு சுனாமியடிச்சுப்போட்டுதடா, ஏற்கெனவே நாங்கள் எதிர்பார்த்த விசயந்தானேடாப்பா, அதென்ன தன்ர பண்டம் அரிசி, தங்கச்சி பண்டம் தவிடு" ங... உவையட நீதிமன்றங்களில தமிழர் நீதவான் மாரா இருந்து என்னத்தச் சாதிக்கப்போகினம். எல்லா நீதி வழங்கலும் இஞ்ச அடிபட்டவனோடையும் தாலியறுப்பாங்களோடையுந்தான். பின்ன எப்பயெண்டாலும் சிங்களவருக்கு எதிரா ஒரு தீர்ப்புச் சொல்லிப்பாக்கட்டன். இல்லை. சொல்லிப் பாக்கட்டன்.

தம்பி... உந்தப்புலுடாக்கதையள்... என்னட்டச் சரிவராது. எட பழமும் திண்டு கொட்டையும் போட்ட ஆக்களடா நாங்கள். முன்ன ஒருக்கா தனிச்சிங்களச் சட்டம் போட்டுட்டடா சிங்களம் படிக்காட்டா உத்தியோகத்தில தொடர்ந்திருக்கேலாதெண்டு சிறிமா போட்ட சட்டத்தால கனபேர்... கனபேரென்ன கனபேர் பதினாறாயிரம் பேருக்கு மேல வேலையால கலைச்ச தமிழர் தொகை.

அப்ப தமிழ் படிக்கயில்லயெண்டு ஒரு சிங்கள வரும் வேலைய இழக்கயில்ல. அந்த நேரமடா கோடீஸ் வரனெண்டொருதர் இந்த மொழி என்ர மொழி. என்ர மொழியில நான் கடமையாற்ற தடை போடுறதெண்டால் அதென்ர உரிமைய மீறிற செயல். எண்டு நீதிமன்றில எது சிறிலங்கா நீதிமன்றில வழக்குப்போட்டார். அதை விசாரிச்ச நீதவான் அது சரி அவற்ற மொழியுரிமைய அரசாங்கம் பறிக்கேலாது எண்டு தீர்த்துப்போட்டுதடா.

பின்ன சிறிமா அரசாங்கம் சடாரெண்டு மேல் கோட்டுக்கு அப்பீலப் போட்டுச்சுது. மேல் கோட்டில அரசாங்கத்தின்ர கதைசரியெண்டு தீர்ப்பு வந்திருச்சுது. விடாதபிடி எண்டு எங்கட கோடீஸ்வரன் அதை கோமறைக் கழகத்துக்கு அப்பீல் போட்டார். ங... கோமறைக்கழக மெண்டாப் பிறிவிக்கவுன்சிலடா. அப்ப பிரித்தானியாவுக்குக் கீழதானே எங்கட அரசாங்கமிருந்தது. அதியுச்ச முடிவைப் பிரித்தானியாவின்ர பிரபுக்கள் சபை எண்டு சொல்லுற கோமறைக்கழகந்தான் எடுக்கும்.

அப்ப ஆளுநரும் மகாராணி போட்ட ஆள்தான் ஒலிவர் குணதிலகா... பின்ன கோமறைக்கழகம் கோடீஸ் வரனுக்கு தன்ர மொழியில வேலை செய்ய உரிமை இருக்கெண்டு போட்டுது தன்ர தீர்ப்பில. எப்பிடி? இதுக்குப் பிறகுதான்ரா சிறிமா அம்மாவுக்கு ஓடி வெளிச்சது நாங்கள் இன்னும் பிரித்தானியாவில இருந்து விடுபடேல்லயெண்டு. உடன ஆள் போட்ட திட்டந்தான் எழுபத்திரெண்டில வந்த குடியரசு யாப்பு. அதுவரையும் இலங்கை டொன மூரின்ர சோல் பரியின்ர திட்ட வரைவுகள்தான். அப்ப பிரித்தானியர் இலங்கையில இருக்கயுக்க ஒரு சட்டம் வச்சிருந்தவை. எது.

"ஐரோப்பியரல்லாதோருக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை ஐரோப்பியருக்கு விதித்தலாகாது"

இப்ப அந்தக் கொப்பி இலங்கை அரசாங்கத்திட்ட வந்திட்டுது. எப்பிடி எண்டா "சிங்களவரல்லாதோருக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சிங்களவருக்கு விதிக்கப் படாது. திருகோணமலையில புத்தர்சிலைய அப்புறப்படுத்தச் சொல்லி ஒரு நீதவான் தீர்ப்பெழுத அதை இடைக்காலத் தடைபோட்டு மேல் நீதிமன்றம் நிப்பாட்டிவச்சிருக்கு.

இப்ப மன்னாரில அகதிகள் புனர்வாழ்வுக்கெண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கொண்டுவந்த காசு ஒரு கோடியும் பறிமுதல் செய்தது மன்னார் பொலிசு. காசு அங்கால இஞ்சால கொண்டு போகக்கூடாதெண்டு ஏதுஞ்சட்டமிருக்கோ. ஆனாப் பறிச்சகாசை அரசாங்கத் திறை சேரியில போட்டவையாம். இப்ப மன்னார் நீதவான் திருப்பிக் குடு காசையெண்டு தீத்தபிறகு அவையட திறைசேரியில காசில்லயாம்.

சந்தேகத்தில பறிச்சு வழக்கு நடக்க நீதிமன்றம் திறைசேரியில போடுறகாசு வழக்கு முடிய கேட்ட உடன குடுக்கத்தான் வேணும். இந்த நடவடிக்கை தமிழருக்கு இல்லை. பொதுக்கட்டமைப்புக்கு எதிரா வழக்குப்போட்ட ஜே.வி.பி...கெக்கெபீக்கேயெண்டு உழறியிருக்கு.

இவையோட இவையட நீதியும் கட்டமைப்பின்ர நிதிச்செயலகம் கிளிநொச்சியில இருக்கக்கூடாது எண்டது ஒரு கோரிக்கை. அதாவது கிளிநொச்சி இலங்கையின்ர ஒருபாகமில்ல அது ஆற்றயோ பிரதேசம். நாங்கள் ஒண்டா இருப்பமெண்டாலும் நீங்கள் விடாயளாம். எங்களத் தனிய பிரிச்சு விடுறதில ஜேவீப்பீ தான் சரியான அக்கறையோட இருக்கு. அடுத்தது அவயட நீதிமன்றங்கள்.




# வயோதிபக் குழந்தை

ஆதிலட்சுமி சிவகுமார்.



கதிரையில் சாய்ந்திருந்த படியே அவர் ஏதோ யோசனையில் ஆழ்ந் திருப்பவர் போலக் காணப்பட்டார். காலையில் தேநீர் பருகிவிட்டு வைத்த கைபிடிக் கோப்பை காலடியில் இருந்தது. அதன் விளிம்புகளிற் சில எறும்புகள் ஊர்ந்துகொண்டிருந்தன.

இரைந்துகொண்டு போன வாகனமொன்று அவர் கவனத்தைத் திசை திருப்பி யது. அந்த வாகன இரைச்சல் சற்றே தேய... அவரின் கண்கள் இராசம்மாவின் படத்தில் நிலைத்தன.

இராசம்மா அவரைப் பார்த்து புன்னகைப்பதுபோல உணர்ந்தார். தானும் புன்னகைத்தார்.

'உனக்கென்ன... போய்ச்சேர்ந்திட்டாய்....'

'ஓ.... இப்ப உங்களுக்கு என்ன குறை?....' வெடுக்கென அவள் கேட்பது போல...

'இவள் மனைவியா மட்டுமோ இருந்தவள்?...'

அவர் கண்கள் பனித்தன. குரல் மெதுவாய் இறுகியது. அவரின் உள்ளே இருந்து அவரை வழிநடாத்தும் சக்தியாகவே அவள் இருந்ததை அவர் நினைத்தார்.

'தம்பிராசா இப்ப முந்தின ஆளில்லை.... பெஞ்சாதி கீறினகோட்டைத் தாண்டமாட்டான்....'

என்று ஊரில் அவர் காதுபடவே பலபேர் கதைத்தபோதும்- அதற்கு அவர் வெட்கமோ துக்கமோ அடைந்ததில்லை. அவளின் அன்பின் ஆக்கிரமிப்புக்குள் வாழ்வது அவருக்கும் சுகமாகவே இருந்ததை அவர் மறுத்ததில்லை.

'வீட்டிலை பெஞ்சாதி சொல்லை தட்டாதவன்... என்னெண்டு பள்ளிக்கூடத் திலை உவ்வளவு பிள்ளையளையும் கட்டி அவிழ்க்கிறானோ...'

ஆனால் அவர் திறமையும் நேர்மையும் மிக்க நிர்வாகி. மேலதிகாரிகள் முன்னால் ஒருபோதும் தலைகுனிந்து நின்றதில்லை. தன்னிடமிருக்கும் திறமையும் ஆளுமையும் அவளுடைய பக்கத்துணையாலேயே அமையப்பெற்றவை என அவர் நம்பினார்.

அவர் அவளைப் பேர் சொல்லி அழைப்பதில்லை. 'அம்மா' என்றுதான் அழைப்பார். அதைக் கூட உறவினரும் நண்பர்களும் கேலி செய்வார்கள்.

சிறுவயதில் தாயின் அரவணைப்பை இழந்த அவருக்கு அவள் தாயின் பரிவையும் அவள் காட்டியபோதுதான்... அவர் அவளை 'அம்மா' என உணர்ந்தார்.

அவரை அவளே தீர்மானிப்பாள். அவர் காலையில் குடிக்கும் தேநீரின் அளவிலிருந்து இரவு தூங்கும் வரை அவளே எல்லா வற்றையும் திட்டமிடுவாள். ஆண் என்கின்றது மூர்க்கத் தனத்தின் மொத்த வடிவமென அவா் நினைத்ததே இல்லை.

அவளுடைய கிராமத்துச் சூழ்நிலை அவருக்கு தெரிந்ததுதான். 'ஆண்களையே நிமிர்ந்து பார்க்காத அந்தக் குடும்பச் சூழ்நிலையில் இருந்து இவள் மட்டும் எப்படி துடுக்குத் தனமானாள்....' என்று பல முறை தன்னிடம் கேட்டுப் பார்த்திருக்கிறார்.

இராசம்மா இப்போது அவரையே பார்த்துக் கொண்டிருப்பது மாதிரி அவர் உணர்ந்தார்.

வெளியேநின்று பார்த்தவர்களுக்கு அவள் அவருடன் சண்டை பிடித்ததாக அல்லது ஏட்டிக்குப் போட்டியாக கதைத்த தாக அல்லது அவரை அடக்கி வைத்திருந் ததாகத் தோன்றும்.

ஆனால் அவளுடைய வார்த்தைகளுக்குள்ளும் நெஞ்சறைக்குள்ளும் இருந்த அப்பழுக்கற்ற அன்பின் ஆழத்தை அவர் மட்டுமே உணர்ந்துகொண்டிருந்தார்.

'இமைப்பொழுதும் சோராதிருத்தல்' என்பதை அவர் அவளிடமிருந்தே பார்த்து வியந்திருக்கிறார்.

அவர் வியர்த்துக் களைத்து வீடுவரும் வேளைகளில் அவள் தரும் தேநீருக்காக அவர் நாக்கு இப்போதும் சில வேளைகளில் ஏங்கும். சின்னச் சின்ன வார்த்தை நோவுகளைக்கூடத் தாங்கமுடியாது அவர் மனம் துவண்டு கிடக்கும் வேளைகளில்.... மெல்ல அவரருகே அமர்ந்து அவள் அவரின் தலைமுடியைக் கோதிவிடும்போது....

இப்போதும் அவளின் அந்த ஸ்பரிசத்துக்காக அவர் மனம் தவித்தது. 'கணவன் மனைவி உறவென்பது வெறுமனே உடம்பு சார்ந்த விடயமல்ல...' என்று படித்ததை அவர் முழுமையாய் உணர்ந்தார். அவரின் முழுப்பலத்தையும், பலவீனத்தையும் அவளே நன்கறிந்திருந்தவள் என்பதை அவரும் அறிந்திருந்தார்.

அவர் அவளைக் கலியாணம் செய்தபோது அவளுக்கு வயது பதின்நான்குதான் கூட்டிலிருந்து வெளிவந்த அணிற்குஞ்சாய்.... அவரின் கதகதப்பிற்குள் அவள் ஒடுங்கிக் கொண்டபோதே... அக்கணத்தில் அவர் அவளின் பாதுகாவலனாய் தன்னை ஏற்றுக்கொண்டார்.

அந்த முதல் நாளிலே கூட.... அவர் அவளை ஒரு குழந்தையைப் போலத்தான் ஏந்திக்கொண்டார்.

ஏதோ ஒரு சந்தர்ப்ப வசத்தால் தன்னிடம் உறவாகிக்கொண்ட அவளை ஐந்து வருடங்கள் அவர் குழந்தையாக-வே அணுகிக் கொண்டார். அவருடைய அறிவுக்கண்கள் அவரை விழிப்பாகவே வைத்திருந்தன.

'ஒரு பூச்சிபுழுவையும் காணேல்லை.... ஏதும் குறை நிறையோ?...' உறவுகள் அலசியபோதும் அவர் உறுதியோடிருந்தார்.

ஒரு கார்த்திகைத் திருநாளில்- பூரணை நன் நாளில் இராசம்மா மூத்தவனை பெற்றெடுத்தபோது அவர் பரவசப்பட்டு கண்கலங்கினார்.

அப்போதும் அவள் இப்படித்தான் புன்னகையோடு பார்த்தாள். அதன் பிறகு இரண்டு இரண்டு வருட இடைவெளியில் வாசனும் வைதேகியும்.

மூன்று குழந்தைகளோடு அவரையும் ஒரு குழந்தையாகவே அவள் எண்ணிக் கொண்டவளாய் இருந்ததை அவர் உணர்ந்தார்.

பிள்ளைகளை நல்வழிப்படுத்தியதிலும் அவளே கூடுதல் பங்கெடுத்தாள்.

மூத்தவன் கார்த்திகேயன் இலத்திரனியல் பொறியியலாளனாய் இலண்டனில். மற்றவள் வைதேகி- அவர் படிப்பித்து ஓய்வு பெற்ற அதே பாடசாலையில் ஆசிரியையாக.

வாசன் மட்டும்... தேசத்துக்கான போரில் தானும் ஒரு நடுகல்லாய். வாசனின் இழப்பு... இதயத்தைப் பிழிந்தெடுத்தாலும்... அவரது அறிவு அதை அந்தத் துயரத்தை வென்றுதந்தது.

ஆனால் அவள்... கணவனையும் பிள்ளைகளை யும் மட்டுமே உலகமாய் வரித்துக்கொண்டதால்.... உருகி உருகி உருக்குலைந் தாள். வாசனை நடுகல்லாக்கிய இரண்டே இரண்டு வருடங்களில் அவளும் அவரிடமிருந்து விடைபெற்ற துயரம்.

அவள் முதல் முதலில் சாய்ந்து கொண்ட தன் நெஞ்சைத் தொட்டுப் பார்த்து அதன் வெறுமையுணர்ந்து தளர்ந்து போவார்.

இராசமலர் அழகுததும்பச் சுவரில். இது வைதேகியின் திருமணத்தன்று எடுத்தது.

வைதேகியின் குழந்தை பிறந்து ஆறுமாதங்களில் அவளின் மரணம் நிகழ்ந்தது. மறு குழந்தைப் பேற்றை ஆள்வைத்தே பார்க்க வேண்டியிருந்தது. இந்த வீட்டை பெருஞ் சிரமங்களோடு தான் கட்டினார்கள். அதிலும் முன் நின்று இராசமலரேதான் உழைத்தாள்.

வைதேகியின் திருமணப்பதிவு முடிந்தது. திருமணத்துக்கு தூர இருந்து வந்த உறவுகள் இன்னமும் போய் முடியவில்லை.

வீட்டை அவர்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கும் பத்திரத்தில் கையெழுத்திட்டபோது அவரது கை நடுங்கியது. கண்கள் பனிப்பதை உணர்ந்தார்.

திருமணப் பந்தலில்... ஒரு மூலையாக ஒதுங்கி உட்கார்ந்திருந்து அவர் நினைவுகளைக் கிளறிக்கொண்டிருந்தபோது.

'ஏன் ஒரு மாதிரி இருக்கிறியள்....'

அவரைத் தேடிக் கண்டுபிடித்து அவள் கேட்டாள்.

'ஒண்டுமில்லை... நீ போய் வந்தாக்களை கவனி....'

'நீங்கள் ஒண்டுமில்லை எண்டு சொன்னாலும் எனக்கு எல்லாம் விளங்கும்.... வீட்டை வைதேகிக்கு குடுத்திட்டம் எண்டு கவலைப்படா தேங்கோ... எங்கட பிள்ளைக் குத்தானே குடுக்கிறம்...' அவர் அதிர்ந்துபோனார்.

நாடி பிடித்துப் பார்த்த மாதிரி சொல்கிறாளே என்கிற ஆச்சரியத்துடன் அவளை அனுப்பினார்.

அதன் பிறகு ஒரு போதும் வீட்டைப்பற்றி எதுவும் கதைக்கவில்லை. வீட்டில் சின்னச்சின்ன மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. சூரியக்கதிர் சண்டை நடந்து கொண்டிருந்த காலத்தில் வீட்டின் வலது பக்கமாய் நூறுமீற்றர் தூரத்தில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததில் சுவரொன்று சேதமடைந்தது.

அந்தச் சுவரை முழுதாக இடித்து விட்டு நீளமாய் ஒரு விறாந்தை இறக்கியிருந்தார்கள்.

வைதேகியின் கணவன் கட்டடப் பொருட்கூட்டுத்தாபனத்தில் பணிபுரிபவன். கட்டடவேலை செய்பவர்கள் நிறையப்பேர் அவனுக்குப் பழக்கமாயிருந்தார்கள். அது வசதியாகவும் போயிற்று.

சென்ற வருடம் மூத்தவன் கார்த்திகேயன் இலண்டனில் இருந்து குடும்பமாக வந்திருந்தான். அவனுடைய வருகைக்காகவும் ஒருதரம் வீட்டின் நடு அறைச் சுவர் இடிக்கப்பட்டு அதனுடன் இணைத்து குளியலறையும், கழிப்பறையும் கட்டப்பட்டன.

வெளி விறாந்தை யோடு இருக்கும் அறைமட்டுமே அவருடையது. தன்னுடைய அறைச்சுவரிலேயே அவர் ஒரு பிள்ளையார் படத்தையும், இராசம்மாவின் படத்தையும், வாசனின் படத்தையும் மாட்டி வைத்திருந்தார். அறைக்குள் ஒரு கட்டிலும், சிறிய மேசையும், மர அலுமாரியும் இருந்தன. மேலே கூரை யிலிருந்து அறைக்குள்ளே காற்றாடி சுழன்று கொண்டிருந்தது.

கேற்றடியில் சிற்றுழவு இயந்திரம் ஒன்று இரைந்தபடி வந்து நின்றது. அவர் எட்டிப் பார்த்தார்.

சாரத்துடன் அதன் ஓட்டுநர் இறங்கிவந்தான்.

'ஐயா... சீமெந்தும், மணலும் இறக்கப்போறம்...'

அவன் வழமையாக வருபவன்தான் தலையை ஆட்டினார். சீமெந்துப் பைகளை இறக்கிவந்து அவரது அறைமூலைக்குள் அவன் அடுக்கினான்.

மணலை தெரு ஓரத்திலையே பறித்துவிட்டான்.

'ஐயா... குடிக்கிற தண்ணி தாங்கோ....'

ஓடிப்போய் செம்பில் தண்ணீர் எடுத்து வந்து கொடுத்தார்.

தண்ணீரைக் குடித்து விட்டு அவன் போனான்.

அவரின் நினைவுகள் சுழன்றன.

அவருக்கு பழக்கமான இராஜகோபாலன் இப்போ எங்கேயோ வயோதிபர் இல்லத்தில் இருக்கிறாராம். உழைக்கின்ற காலம் முழுவதும் குடித்து விட்டு, இப்போது யாருடைய நிழலிலும் தங்கமுடியாமற் போன அவரை நினைத்து அவர் வேதனைப்பட்டார்.

'உன்னைவிட எனக்குப் பதினாறு வயசு கூட... நான் முதலிலை இறந்து போயிட்டா நீ தனிச்சுப்போயிடக்கூடாது...'

அவர் ஒருநாள் இராசம்மாவிடம் கூறியபோது...

'நீங்கள்தான் முதல் இறந்துபோவீங்கள் எண்டு எப்படிச் சொல்லுறியள்?... நீங்கள்தான் தனிச்சுப் போயிடக்கூடாதெண்டு நான் நினைக்கிறன்...'

அவள் சொன்னதைக் கேட்டு அவர் பதறிப்போனார். ஆனால் அன்று அவள் கூறியதுதான் நிகழ்ந்து போனதை அவர் உணர்ந்தார்.

முற்றத்தில் நிற்கும் பலாமரம் அவர் ஆசையாய் வைத்தது. அத்தனை வேலைகளுக்கும் பரபரப்புகளுக்கும் மத்தியில் அதனைப் பாதுகாத்து வளர்த்தவள் அவள்தான். அவருக்கு அவளைத்தவிர வேறெதையும் நினைக்க முடியாதிருந்தது.

'அப்பா...'

வாசலில் வரும்போதே வைதேகி கூப்பிட்டாள்.

'இந்த வீட்டின்ர முகப்புத்தோற்றம் நல்லாயில்லாமல் இருக்கப்பா.... முன்பக்கத்தை இடிச்சு திருத்தப்போறம்... உங்களுக்கு புதிசா இறக்கின விறாந்தையை அதுமட்டும் தரப்போறம்....'

அவர் இராசம்மாவைப் பார்த்தார்.

'ஏதோ அவள் ஆசைப்படுறாள்... செய்யட்டும்... உங்களுக்கென்ன? எங்கட பிள்ளதானே அவள்...'

அவளின் புன்னகை பேசியது.

'என்னப்பா யோசிக்கிறியள்?...'

ஒண்டுமில்லைப் பிள்ளை... உங்கட விருப்பத்துக்கு செய்யுங்கோ...'

'உந்தப் பலாமரத்தையும் தறிக்க வேண்டித்தான் வரும்...'

நெஞ்சுக்குள் கோடரி பாய்வது போல உணர்ந்தார்.

'அதுக்கென்ன... உங்களுக்கு இடைஞ்ச லெண்டா தறியுங்கோவன்...

உது எவ்வளவு காலமா நிக்குது.... எப்பவாலும் ரெண்டு காய் காய்க்கும்... அதுக்காக உவ்வளவு இடத்தை மினைக் கெடுத்த ஏலாதப்பா... மனதுக்குள் சுருக்கென்றது அந்த வார்த்தை.

'...................'

'நாளைக்கு காலமை உதைத்தறிக்கிறதுக்கு ஒழுங்கு பண்ணியிருக்கு...ரெண்டுபேர் வருவினம்....' அவள் எழுந்து போய்விட்டாள்.

அவர் பலாமரத்தை அண்ணாந்து பார்த்தார். ஒவ்வொரு இலையிலும் இராசம்மாவின் முகம் தெரிவது மாதிரி அவருக்குள்ளாக ஒரு பிரேமை....

'சட்டப்படி இந்த வீடும் வளவும் வைதேகியின்ரதானே... நீங்கள் எப்பிடி மனஸ்தாபப்படலாம்...?

அவர் தலையை ஆட்டி ஆமோதிப்பது போல பாவனை செய்தார்.

இரவு அவரால் தூங்க முடியவில்லை. யாரோ இரண்டு பேர் கோடரியோடு வந்து மிரட்டுவது போல.. அவர் தப்பு வதற்காக ஓடுவது போல...

'இராசம்மா.... உன்னட்டை வரப்போறன்...'

வாய் பொத்திக் குலுங்கினார். அவர் குழந்தையைப் போல.

# இனியும் வேண்டாம்

கலியாணக் கச்சேரிக்கு
முந்தைய நாள் முஸ்தீபுகளும்
தடல்புடல் ஏற்பாடுகளுமாய்
களை கட்டியிருந்த குதூகலம்
எப்படிக் குலைந்தது?
"சாந்தி திருமணம்"
நடக்கவிருந்த வீடும்
அதன் சுற்றமும்
இப்போதென்னவென்றால்
இழவு நடந்த சுற்றமாயல்லவா
காட்சி தருகிறது?
கன்னி கழியப்போகும்
மனநிலையில் இருந்திட்ட
மாந்தர்களின்
மன பதை பதைப்புகளும்
சற்று ஆறத்தொடங்கிவிட்டனவே.
என்னதான் நடந்தது?

கலியாணத் தரகர்களின்
பாடோ பருதிண்டாட்டத்தில்
செருப்புத் தேயத் தேய
நடந்த களைப்புவேறு
தரகுக் கூலியும் முழுவதுமாய்
கைக்கு எட்டாத நிலையும்
சோர்வை ஏற்படுத்திவிட்டனவே

சுப முகூர்த்த நேரமும்
நல்ல நாளும்
கடந்து போய் கன நாளாச்சு

இப்போ புதுக்கதை அளக்கினம்
ஜாதகம் பொருந்தவில்லையாம்
செவ்வாய்க் குற்றமாம்.
பெண்ணின் அழகில்
பேசும் மொழியில் மத்திமமாம்.
மாமிக்கும் இஷ்டம் இல்லைப்போல்
கூட இருக்கும்
கூத்தாடிகளுக்கும் விருப்பமில்லையாம்
இது தான் குழப்பத்துக்குக் காரணமாம்.

அவர்களுக்கென்ன
பல்வேறு தடவைகள்
விவாகரத்துப் பெற்றவர்களல்லவா?
கூடிவாழ்ந்து இல் வாழ்வை சுவைப்பதில்
அவர்களுக்கு விருப்பேயில்லை
எப்போதும் இவர்கள் இப்படியே
குறுக்காலை அறுந்து போவதில்
கை தேர்தவர்களல்லவா?
இப்போதும் அப்படியே!
இங்கேயோ
புண்பட்ட நிலையில்
புதுப் பொலிவூட்டலற்றவர்களாய்
குளிர்ச்சியற்ற நிலையில்
புத்தாடையற்று புதுத் தெம்பற்று
மணமகள் வீட்டார்!
நிம்மதி குலைந்த நிலையில்
இவர்கள்
இனியும் வருவீர்களா தரகர்களே?
வாருங்கள் வந்து தட்டுங்கள்
எங்கள் கதவுகளை.
நாங்கள் உங்களை வரவேற்போம்.
விருந்துண்டு மகிழ்வோம்
ஆனால்
இன்னுமொரு முறை கலியாணப் பேச்சும்
பதிவுத் திருமண ஏற்பாடும்
அது சார்ந்த ஆராய்வுகளும்
எங்களிடையே வேண்டவே வேண்டாம்
ஏமாந்தது போதுமய்யா
தனித்து வாழ்ந்தாலும்,
மனம் நொந்து போனாலும்
கெட்டுப் போகாதவர் எனும்
நாமம் தாங்கிய மனிதர்களாய்
மானம் காக்கும் கற்புடன்
வாழவே ஆசைப்படுகிறோம்
விடுவீர்களா தரகர்களே!
அன்றேல்
எங்கள் வாழ்வோடு
இனியும் விளையாடுவீர்களா?

அ.பி.குணா

# மாசறு செல்வியும் மாசுறு மக்களும்

என்
மரத்துப்போன நாவுக்கு
நீ
ரசமூர்த்தியதாக
யார் யாரோ
பேசுகிறார்கள்.

உன் நல்ல நேரத்திற்காக
கடிகாரமுட்கள் போல்
துடிப்பவன் நானென்றும்,
எனது துடிப்புக்களால்
துவண்டுபோபவள்
நீயென்றும்,
மனிதம் தூங்க
புதையுண்ட
உன் குடும்பத்தினரைத் தவிர
யாரறிவார்?

என் அனுபவத்திற்கும்,
உன் இளமைக்கும்
முடிச்சி போட்டு
பட்டமேற்றுகிறார்
பலர்.
கலாசாரம் வாலாக
தொங்க...

குனிந்தபடி வந்த
என்னை
கொலுசணிந்த பாதத்தால்
சிரந்தொட்டு
நிமிரவைத்தாய்.

நிமிர்ந்து பார்த்தேன்
கலாசாரம் உன்னையும்
தொங்கவிட்டிருந்தது
தூக்கில்.

கறுப்பு நிலா

# காத்திருப்பு

நீண்ட அந்த வெளிப்பரப்பு
நிழல்தரும் தென்னஞ்சோலை - அன்று
நிகழ்ந்த நிஜங்களை நினைத்து
மௌனித்து தனித்திருக்கின்றேன்
அக்கினியை சுமந்து
கனன்று வரும் காற்று என்
கன்னத்தை வருடிற்று.

உன் நினைவுகள் என்னை சுற்றி
நிசப்தமாய் சிரித்தன
அன்று ஒவ்வொரு நாளும்
உன் வரவுதனை எதிர்பார்த்து
என் கண்கள் செய்த
கண்ணீர்ப் பிரார்த்தனைகள்
எத்தனை எத்தனை
விடைபெறும் கணங்களில்
தொடர்ந்திடும் ஏக்கத்திடையே
கண்மூடி மனம் திறந்து
உனக்காக காத்திருந்த
அந்த நாட்கள்
இன்று என்னுள்ளே எரியும்
வன்மை தீயிற்கு வலுச்சேர்க்கின்றன.

தென்றற் காற்றிலே
தலையசைக்கும் மல்லிகையாய்
மனதிலே சிலு சிலுக்கும்
உன் நினைவுகளைச் சுமந்து
நான் வழிமேல் விழிவைத்து
காத்திருந்தபோது
உன் வீரச்சாவு அறிவித்தல்
என்காதிற்கு எட்டியது
விம்மி விம்மி அழவில்லை
வீறுகொண்ட புலியாய்
நான் உன் சுவடு தொடர்ந்திட்டேன்.

இன்று என்னுள்ளே உறவாடும்
உன் நினைவை சுமந்தபடி
மண்காக்கும் வீரர்களின்
உயிர் காக்கும் பணியில்
மருந்துப் பையை தோளில்
தாங்கியபடி
கனல் கக்கும் விழிகளுடன்
எதிரியின் வரவை எதிர்பார்த்து.

குற்றாளன்







பாலூட்டிகளில் சைரனியா எனும் நீர் வாழ் பாலூட்டி வரிசையைச் சேர்ந்தது கடல் பசு. கடற்கரை ஓரங்களில் ஆழமற்ற பகுதிகளிலும் குறிப்பாக வெப்பமண்டலக் கடல் பகுதிகளிலும்ஆறுகளிலும் காணப்படும். முன்பு இதில் மூன்று குடும்பங்கள் இருந்தன. இப்போது ட்யூகாங் (DUGONG) என்று ஒரு குடும்பமும் மனாட்டி என்று ஒரு குடும்பமுமே உள்ளன. ஸ்டெல்லா கடல் பசு என்ற குடும்பம் 1768 ஆம் ஆண்டு திமிங்கில. வேட்டைக்காரர்களினால்

# கடற் பசுக்கள்

முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டது. இது 7.5 மீற்றர் முதல் 9 மீற்றர் நீளமும் 4 டன் எடையும் கொண்டதாக இருந்தது. நீள்தண்டு போன்ற முன் கால்களும் தட்டையான வாலும் கொண்டது இது.

ட்யூகாங் என்ற இனம் ஆப்பிரிக்காவின் கிழக்குப் பகுதியிலிருந்து அவுஸ்திரேலியாவின் வடக்குக் கடற்கரைப் பகுதி வரையான கடல் பகுதியில் வாழ்வது. இது சுமார் 2 மீற்றர் முதல் 3 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. சிறிய தலையும் மொட்டையான முகறையும் பிறைச் சந்திர வடிவில் தட்டையான வாலும் துடுப்புப் போன்ற ஒரு சோடி முன் கால்களும் கொண்டது. முடிகள் இல்லாத உடலின் மேற்பகுதி கருஞ்சாம்பல் நிறத்திலும் அடிப்பகுதி வெள்ளையாகவும் இருக்கும். முறுக்காணி போன்ற பற்களைக் கொண்டது. ஆண் கடற்பசுவின் முகறையிலிருந்து இரு பெரிய கூர்ப்பற்கள் கீழ் நோக்கி வளர்ந்திருக்கும். இதன் உணவு கடற் தழைகளும் கடற் புற்களும்.



எண்ணெய்க்காகவும் இறைச்சிக்காகவும் கண் மூடித்தனமாக வேட்டையாடப்படுவதால் இந்த இனம் குறைந்து வருகிறது. தலையும் மார்பும் நீருக்கு வெளியே தெரியும்படி மல்லாந்து நீந்தும்போது. ஒரு பெண் நீந்துவது போல் தோற்றமளிப்பதால் இதற்கு கடல் கன்னி என்ற பெயரும் வந்தது.

மனாட்டி எனும் இனம் அட்லாண்டிக் மாகடலின் இரு புறங்களிலும் கரிபியன் கடலிலும் காணப்படும் இனம் 1.2 மீற்றர் நீளமும் 180 கிலோ எடையும் கொண்டது. டார்ப்பிடோ போன்ற உடலும் அகலமான முன்கால்களும் அகன்ற தட்டையான துடுப்புப் போன்ற வாலும் உடையது. இதற்குப் பின் கால்கள் கிடையாது. தாவரவுண்ணியான இது சிறு கூட்டமாகச் செல்லும். இலையுதிர் காலத்தில் இனச் சேர்க்கை புரியும். பத்து மாதங்களில் பெண் கடற்பசு ஒரு குட்டி ஈனும். குட்டியை நன்கு பேணிக் காக்கும்.

## பலூன்கள் மிக உயரத்தில் பறந்தால் வெடித்து விடுவது ஏன் தெரியுமா?

காற்று தன்னுடைய எடை காரணமாக எல்லாவற்றின் மீதும் அழுத்தத்தைக் கொடுக்கிறது. மலை உச்சியின் மீது ஏறும்போது காற்றழுத்தம் குறைவாக இருப்பதற்குக் காரணம் மேல் காற்று அடுக்கு குறைவாக இருப்பதே ஆகும்.

சில பலூன்கள் காற்றைவிட இலேசான ஹீலியம் வாயுவால் நிரப்பப்பட்டுள்ளன. நீங்கள் ஹீலியம் நிரப்பப்பட்ட பலூனைப் பறக்கவிட்டால் அது வேகமாக மேலே செல்கிறது உடனே அது வெடிக்கிறது.

பலூன் உயரே செல்லச் செல்ல காற்றழுத்தம குறைவாக உள்ள இடத்தை நோக்கிச் செல்கிறது. பலூனுக்கு வெளியே உள்ள காற்றின் அழுத்தத்தை விட உள்ளே உள்ள காற்றின் அழுத்தம் அதிகமாக இருப்பதால் அது பலூனை வெளிப்பக்கமாகத் தள்ளுகிறது. அதனால் பலூன் உப்பி முடிவாக வெடித்து விடுகிறது.

## சொற்சிலம்பம் - 96

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| டி | ப் | ம | ணை | ன் | தூ | பூ |
| டு | கு | ல் | பா | ந் | மி | லி |
| க | லி | தி | கோ | னி | ணி | கா |
| ந் | னா | பி | லி | னை | சீ | இ |
| ழ | ட் | தா | ஷ் | ர் | லி | கை |
| ற் | ர் | யா | க் | ஸ் | க | வி |
| ரா | வ | யோ | ன் | கி | த் | நீ |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 94 இன் விடைகள்

01. கபடி.

02. வில்லிபுத்தூராழ்வார்.

## சொற்சிலம்பம் - 94 இன் பரிசுக்குரியவர்

கா.டக்சனா,
இல:-140
உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 94 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. ஏ.தருஷிகா,
புலோப்பளை-மேற்கு,
பளை.

02. பா.வினோசிகா,
கற்சிலைமடு அ.த.க.பா,
ஒட்டுசுட்டான்.

03. ஆ.ஶ்ரீசாந்தி,
விசுவமடு,
முல்லைத்தீவு.

04. பா.கல்பனா,
236, பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.

05. க.சுகிதரன்,
கோணாவில்,
கிளிநொச்சி.

06. ச.கௌரி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்,

07. காஷ்மியா,
கிளி/கிளிநொச்சி ம.வி,
கிளிநொச்சி.

08. யோ.றேகாந்தினி,
பாரதி சிறுவர் இல்லம்,
புதுக்குடியிருப்பு.

01. வானொலியை கண்டுபிடித்தவரின் பெயர்?

01) ...................................

02. வீட்டுப்பிராணிகளில் ஒன்று?

01) ...................................

சொற்சிலம்பம்-96
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

பெயர் :- ......................................................

முகவரி :-......................................................

......................................................

......................................................

## நாய் வால்

பகுதி-02



## வீடு

# துன்பம் சூழும்போது முடங்கிப்போகாதீர்



மனிதா! துன்பத்தைக் கண்டு துவண்டு போவாயின் இன்னும் உன் வாழ்வினில் அமாவாசையிரவுதான். எத்தனை சுமைகள் உன்னில் பரிணமிக்கும் போதும் சுகமாய் ஏற்றுக்கொண்டு துணிவுடனே போராடுவாயின் உன் வாழ்வினில் பௌர்ணமிதான் என்றுமே.

"துன்பத்தினை அறியாதவர்கள் வாழ்வின் சுவையறியாதவர்கள்" துன்பக்கடலில் எதிர்நீச்சல் போடுவதன்மூலம்தான் இன்பக்கரையினை அடையமுடியும். இதற்காய் நீ துன்பத்தில் தத்தளிக்கின்றேன் என எண்ணுவாயின் வாழ்வில் சலிப்புத்தான்.

உன்னில் இருக்கும் இயலாமை என்னும் நோக்கினை இடறியெறிந்து இன்னல்களை என்னால் இலகுபடுத்தமுடியும் என முதல் மனவலிமைகொள். இனி உன் வாழ்வில் துன்பங்கூட இன்பமாயிருக்கும்.

இன்பத்தில் நீ வாழ்கின்றாய் என்றிருந்தால் துன்பத்தில் வாழ்பவனைப் பார்த்து நகைக்காதே? அடுத்தபடியாய் உனை துன்பம் ஆட்கொள்ளுமாயின் உன்னால் எதிர்கொள்ள முடியாமல்போகும்.

எனவே இன்பத்திலும் உன் வாழ்க்கையோடு போராடு. இன்னும் இதமாய் மலரும் இன்பமுன் வாழ்வினில். "நானே துன்பத்தில் வாழ்கிறேன்" என உன்னை நீயே உடைத்துக்கொள்ளாதே! நம்பிக்கையினை உன் மனதில் சுடர்விடச் செய்தபடி பயணி உன் வாழ்வில் ஏது துன்பம்.

உன் கடந்த கால வாழ்வினில் பட்ட இன்னல்களை புரட்டிப் பார்த்து என்ன பயன். இன்றைய சூழ்நிலையில் எதனைக் கையாண்டு வெற்றிகொள்ளமுடியுமோ அதுவே சாலச்சிறந்தது. இதன் மூலம் உன்னால் முழுமையும் பெறமுடியும்.

துன்பத்தினைக் கண்டு துவண்டு போவதால் உன்னில் ஏதடா இன்பம். துன்பம் உனைமட்டும் சூழவில்லை மானிடர் அனைவர் வாழ்விலும் ஒவ்வொரு துன்பமுண்டடா. இதனை தூரத்திலிருந்து பார்க்கும்போது கண்ணிற்குப் புலப்படாது.

ஒருவர் துன்பப்படுகின்றார் எனவிருந்தால் நீ விலகிச்செல்லாதே! உன்னால் இயன்றவரை உதவி செய். அது உன் மனதினாலாயினும் சரி, ஒருவர் இன்பத்திற்கு அப்பால் துன்பத்தில் உனை அர்ப்பணி. அதற்காய் பிறர் அர்ப்பணிக்க வேண்டும் என எண்ணித் தவிக்காதே. காலங்கள் உருண்டோடிப்போனாலும் அவர் ஆழ்மனதில் நீ வாழ்வாய். துன்பம் உனை சூழ்ந்த போதும் நீ முடங்கிப் போகாதே! திடமாய் உன் மனதினைக்கொண்டு நடைபோடு இல்லையாயின் நீ இடிபட்ட கட்டடம் போல் இடிந்தே போவாய்!

இருளிலிருந்து வருவது தான் ஒளி. இது போன்றுதானடா துன்பத்திலிருந்துதான் இன்பம் பிறக்கும். இதற்காய் நீயே போராடவேண்டும். உன் வாழ்விற்காய் நீயே போராடு. நிச்சயம் இன்பமயமாகும் உன்வாழ்வு.

**எஸ். மதீஸ்**

## தேன் ஐஸ்கிரீம்




தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| முட்டைவெள்ளைக்கரு | -5 |
| பால் | -500 மில்லி |
| கீரிம் | -250 மில்லி |
| தேன் | -1/2 கப் |
| வெண்ணிலா எஸ்ஸென்ஸ் | -1தேக்கரண்டி |

செய்முறை:-

*முட்டையையும் தேனையும் ஒரு பாத்திரத்தில் போட்டு நன்றாக அடித்துக்கொள்ளவும். பாலை ஒரு பாத்திரத்தில் அது கொதிநிலை வரும் வரை சூடாக்கவும். அதன் பின்னர் மெதுவான சூடாகக் குறைத்து விடவும். இதில் பால், தேன் கலவையைக் கொட்டி கட்டியாகும் வரை கலக்கவும். எடுத்து வடிகட்டி குளிரவைக்கவும். இதில் கிரீமை சேர்த்து கலந்து வெண்ணிலா எஸ்ஸென்ஸ் கலந்து இதனை ஐஸ்கிரீம் கோப்பைகளில் ஊற்றி இரவு முழுவதும் உறையும் குளிர்சாதனப் பெட்டியில் வைக்கவும்.

*அடுத்த நாள் எடுத்து சுவைக்கலாம்.

# இது பெற்றோர்களுக்கு

உலகவாழ்க்கையில் இல்லற வாழ்க்கை என்பது தனித்துவமானது. அதை எல்லோரும் உணர்ந்து அதற்கேற்றவாறு வாழ்கின்றார்களா? என்றால் சிலர்தான் இப்படி வாழ்கிறார்கள். அதில் குடும்பம் என்பது முக்கிய மானது. பெற்றோர்கள், பிள்ளைகள்என அடங்குவர்.

இன்றைய பிள்ளைகள்தான் நாளைய சமுதாயத்திற்கு வேண்டியவர்கள். அதை எல்லோரும் உணர்ந்திருந்தாலும் அதற்கேற்றவாறு செயற்படுவதில்லை. இவ்விடயத்தில் பெற்றோர்கள்தான் கூடுதலான கவனம் எடுக்கவேண்டியவர்களாய் உள்ளனர்.



தற்போதைய உலகம் என்பது நவீனமயப்படுத்தப்பட்ட உலகமாக மாறி வருகின்றது.

பெற்றோர்களில் வேலைக்கு செல்பவர்கள் அதிகமானதால் பிள்ளைகள் மீதான கவனயீர்ப்பு குறைவாகவே உள்ளது. ஏனென்றால் காலையில் எழுந்தால் வீட்டுப்பணி, பின்னர் வேலைத்தளம் அதை முடித்து வந்தால் வேலைக்களை. வீட்டில் உள்ள மிகுதி வேலைகள் இப்படியே போய்க்கொண்டு இருப்பதால் பிள்ளைகளிற்காக செலவிடவேண்டிய நேரம்கூட செலவிட முடியாது. இதனால் அவர்கள் தமக்கேற்ற வழியிலேயே சரியோ, பிழையோ தெரியாமல் செல்ல முற்படுவார்கள்.

ஆதலால் நீங்கள் குறுகிய நேரமாவது பிள்ளைகளுடன் செலவிடவேண்டிய கட்டாயப்பாடு உள்ளதால் குறிப்பிட்ட நேரமாவது செலவிடுங்கள். அப்போது அவர்களுடைய பிரச்சினைகளை உங்களுக்கு மனம் விட்டுச் சொல்வார்கள். நீங்களும் சிலபிரச்சினைகளை அவர்களுக்கும் சொல்லி தெளிவுபடுத்தினால் கேட்பார்கள்.

உங்கள்மீது அவர்கள் வைத்திருக்கும் அன்பும் குறையாது. கசப்புணர்வும் ஏற்படாது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சில நேரங்களிலாவது நண்பர்கள் போல் அவர்களின் தரத்திற்கு இறங்கிப்பழகினால் அவர்கள் தமக்கேற்பட்ட பிரச்சினைகளை சொல்லாமல் இருந்திருந்தால் இந்நேரங்களில் மனம் விட்டுச் சொல்வார்கள்.

நீங்கள் அதற்கேற்றவாறு ஆதரவுடன் ஆலோசனைகளைக் கூறினால் உங்கள் மீதான அன்பு மேலும் அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமைப்பிணைப்பும் அதிகரிக்கும். நம்பிக்கையும் கூடும்.

அவர்களின் மனமும் விசாலமாக இருக்கும். எதிலும் ஈடுபாடு உள்ளவர்களாக செயற்படுவார்கள். இப்படி இல்லாவிடில் தம் பிரச்சினையை சொல்வதற்கு இன்னொரு துணையைத்தேட முற்படுவார்கள். மனதில் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருந்தால் கல்வியிலோ, வேறு செயல்களிலோ அவர்கள் ஆர்வமாகவும், ஆழமாகவும் செயற்படாத நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள். எனவே பெற்றோர்களாகிய நீங்கள் மிகக் கவனம் எடுக்கவேண்டியவர்களாய் உள்ளீர்கள். உங்களின் கவனம் தான் பிள்ளைகளின் வளர்ச்சியையும் நல்ல எதிர்கால சமுதாயத்தையும் வளமுடன் எமது தேசத்தையும் ஈட்டித்தரும்.

**கஸ்தூரி**

குமரகுரு பரிசுத் திட்டத்தின் 51தொடக்கம் 55 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.

**பரிசுத்திட்டம் –51**
மா.மேனகா,
இல,83/5, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

**பரிசுத்திட்டம் –52**
பூபாலசிங்கம் டிலக்சனா,
இல: 348,
அக்கராயன்குளம்.

**பரிசுத்திட்டம் –53**
ஆ.டொறின்கிறிஸ்ரீனா,
பறப்பாங்கண்டல்,
உயிலங்குளம்,
மன்னார்.

**பரிசுத்திட்டம் –54**
இ.ஜெயந்தினி,
கரிப்பட்டமுறிப்பு,
மாங்குளம்.

**பரிசுத்திட்டம் –55**
ம.அஜந்தாராணி,
பாலன் பலசரக்கு மாளிகை,
காவல் பணிமனை வீதி,
புன்னைநீராவி,
தருமபுரம்.

பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.

நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்– 57**

பெயர்:..................................................

முகவரி:................................................

................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# முயற்சி செய்துபாருங்கள்
# முன்னேற்றத்துக்கு வழி கிடைக்கும்

வணக்கம் வணக்கம் பிள்ளையள்! என்ரை கடவுளே உங்களையெல்லாம் திரும்பக் காணுவன் எண்டு ஆர் நினைச்சது! ஒரே நிமிசத்தில ஏரம்பர் ஒரேயடியாய் அம்போவாய் போயிருப்பர். எட ஊர், உலகத்துப் புதினங்களைக் கதைச்சுக்கொண்டிருந்த என்ரை புதினத்தைப் பற்றி ஊர் முழுக்கக் கதைக்கிற நிலைமை வந்திருக்கும்.

இல்லைப்பாருங்கோ நந்திக் கடலுக்கு அண்டைக்குப் போயிருந்தனான். சே! என்ன அழகு... ஒருக்கால் இறங்கிப் பார்ப்போம் எண்டொரு ஆசையில கொஞ்சத்தூரம் போனதுதான் தாமதம் 1 மீற்றர் உயரத்தில ஒரு சின்ன சுனாமி வந்து ஒரு உலுப்பு உலுப்பி உள்ளுக்குள்ளை இழுத்துப்போட்டிது.

சரி! கதை முடிஞ்சிது இண்டையோடை எண்டு நினைச்சுக்கொண்டு ஒருமாதிரி கையில அகப்பட்ட ஒல்லியொண்டைப் பிடிச்சுக்கொண்டு ஒரு மாதிரி உயிர் பிழைச்சிட்டன். கடல் வற்றாத குறையாய் நல்லாய் தண்ணியும் குடிச்சதில அப்பிடியே ஏலாமல் கரையில வந்து படுத்துக் கிடந்து யோசிச்சன்: அதென்ன எல்லாரையும் கரை நோக்கித்தள்ளிற கடல், என்னை மட்டும் உள்ளுக்கை இழுக்கப்பார்க்கிது.

அப்பதான் காத்து வாங்க அதடியில வந்து நிண்ட ஒரு இளவட்டத்தார் எனக்குக் கிட்ட வந்து 'என்ன அப்பு கவிதை எழுதிறியளோ? 'எண்டு கேட்டார். எட விசர்ப்பொடியாய் கிடக்கிது. மூக்கு முட்டத் தண்ணி குடிச்சுப்போட்டு வயிறு முட்டிக்கிடக்கிற எனக்கு இந்த நேரத்தில கவிதையே வரப்போகுது!

நேரம், காலம், நிலைமை தெரியாமல் அவருக்கு நளினம் வேண்டிக்கிடக்கிது. எட அவனவனை ஆள் முடிஞ்சால் பிறகுதான் அஸ்தி கரைக்கிறது. ஆனால் நான் கொஞ்சம் பிசகியிருந்தால் முடிய முதலே கரைஞ்சிருப்பன். அப்பிடியொரு அருந்தப்பு! தம்பியருக்கு என்ரை நிலைமை நளினமாய்க் கிடக்கிது. அப்பதான் பார்த்தன்: என்னை மாதிரியே, ஆனாலும் கொஞ்சம் முன்னாலை பெரிய சுனாமியில அடிபட்ட கொப்பொண்டு எனக்குப் பக்கத்திலை ஒதுங்கிக் கிடந்திச்சிது.

ஓகோ அதைப் பார்த்திட்டுத்தான் இவர் நான் கவிதை எழுதிறன் எண்டு நினைச்சிருக்கிறார். சரி! சரி! கடல்தண்ணி குடிச்ச கதையளைச் சொல்லி ஏன் சின்னப்பொடியனிட்டை அவமானப்படுவான் எண்டிட்டு, என்னைச் சுதாகரிச்சுக்கொண்டு சொன்னன், 'இல்லைத் தம்பி! இந்த அலையளை வைச்சுக்கொண்டு மின்சாரம் எடுக்கிறதைப் பற்றி' ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறன். அதுதான் ஒருசில கணக்குகள் செய்து பார்த்தனான்', எண்டுகொண்டு மீசையில மண் படாதமாதிரி பக்கத்தில கிடந்த கொப்பை எடுத்து மடியில வைச்சிருந்தன்.

'உதென்ன அப்பு! கடல் காலா காலமாய் இருந்து வாற கடல்தானே. அதிலை கறண்ட் எடுக்கிறதெல்லாம் நடக்கிற காரியமே. இப்பை பரவலாய் எல்லா இடமும் மின்சாரம் வழங்கிறதுககான வேலையள் நடந்துகொண்டு தானே இருக்கிது. சரி அந்த வேலையள் முடியிற வரைக்கும் உங்களால பொறுக்கேலாட்டி 'ரொப்லைன்' கணக்குக்கு ஏதாவதொரு ஜெனரேற்றரை வேண்டிறதுதானே! அதை விட்டிட்டு பெரிய விஞ்ஞானி கணக்குக்கு உதிலை வந்திருந்து மினைக்கெடிறியள்'.

ஏதோ சும்மாதான் கதையைக் குடுத்தனானாய் இருந்தாலும் அவரின்ரை கதை எனக்குப் பிடிக்கேல்லை. உவரைச் சும்மா விடக்கூடாதெண்டிட்டு பதிலுக்கு நானும் கதைச்சன்.

'தம்பி! மினைக்கெடாதவன் ஒருநாளும் முன்னேறமாட்டான். எங்களுக்கிருக்கிற தேவையளைப் பூர்த்தி செய்யிறதுக்கான வழிவகையளை ஆராய்ஞ்சு முன்னேர்றதை விட்டிட்டு, அரசாங்கம் தாறதாய் சொல்லிக்கொண்டிருக்கிற மின்சாரத்தை நம்பி நாங்கள் வாளாதிருக்கக்கூடாது. இயலாக்கட்டத்துக்கு ஜெனரேற்றர் உதவியாய் இருந்தாலும், அதே தீர்வாய் ஒருக்காலும் அமைஞ்சிடாது.

அதுக்கு ஊத்திற எண்ணைக்கு அடுத்தவனைத்தான் நம்பியிருக்கோணும். இண்டைக்கு உலகத்திலை நடக்கிற போர்களும், ஏன் சமாதானங்களும் கூட எண்ணையை வைச்சுத்தானே நகர்ந்துகொண்டு போகுது. அப்பிடியிருக்க நீர் உப்பிடிச் சின்னப்பிள்ளையள் மாதிரிக் கதைக்கிறீர்'. 'அப்பு! ஈராக்கில எண்ணெய்க்காகத்தான் போர் நடக்கிதெண்டிறது எனக்கொண்டும் தெரியாத விசயமில்லை. ஆனாலும், எண்ணெய்க்காக சமாதானம் எண்டிற உங்கட கதையை நான் நம்பத் தயாராயில்லை'.

'தம்பி! நான் எடுத்துக்காட்டுக்கு வாறதுக்கு முன்னால உமக்கொரு விசயம் சொல்லிறன். அமெரிக்காவின்ரை (யு.எஸ்.ஏ) எண்ணெய்த் தேவையளை 15 வீதம் வெனிசுவேலா எண்ட தென்னமெரிக்க நாடுதான் பூர்த்திசெய்யிது. கிரிமினல் புத்தியில கில்லாடியான அமெரிக்காவும் தன்ரை தேவையளுக்காக ஒரேயடியாய் மத்திய கிழக்கையே நம்பியிருக்காமல், வெவ்வேறு நாடுகளையும் தன்ரை விநியோகஸ்தர்களாக வைச்சிருக்கிது.

நாளைக்கே ஒரு நாட்டோட ஏதாவது சோலிசுரட்டாகி எண்ணெய் கிடைக்காமல் போனால் போரையே நடத்தேலாமல் போயிடுமெல்லே! குத்தாத கத்தியை வைச்சிருந்து காட்டிற சண்டித்தனம் எங்கை எடுபடப்போகுது!

அதால பக்கத்திலை இருக்கிற வெனிசுவேலாவை தங்கட கைக்கிளை கொண்டுவர கனதரம் முயற்சி செய்து பார்த்திச்சிது. ஆனாலும், மறைஞ்ச பிறகும் தென்னமெரிக்காவில நிலவிற சேகுவேராவின்ரை ஆளுமை காரணமாக இடதுசாரியளின்ரை கைதான் அங்கை ஓங்கியிருக்கிது.

இப்பை வெனிசுவேலாவின்ரை தலைமைப்பதவி வகிக்கிற சாவெஸ் எண்டிறவரின்ரை ஆட்சியைக் கலைக்க கனதரம் படாதபாடு பட்டும் முடியேல்லை. அந்தாளும் அமெரிக்காவிலை வைச்சிருக்கிற கறள் காரணமாய், தன்ரை ஏற்றுமதியை முழுசாய் சீனாவுக்குத் திசைதிருப்பி விடிறதுக்கு ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கிது.

அதுவும் சரிவந்தால் அமெரிக்காவின்ரை எண்ணெய்த்தேவையளுக்காக பின்லாடனுக்கு பகிரங்க மன்னிப்பு வழங்கவேண்டி வந்தாலும் ஆச்சரியப்படிறதுக்கில்லை.

ஏன் சொல்லிறன் எண்டால் சதாம் பிடிபட்ட உடன எவ்வளவு நம்பிக்கையில இருந்தவையளுக்கு, இப்பை தவறாமல் வெடிக்கிறதுகளைப் பார்த்ததோட அலுத்தே போச்சிதாம். ஒழுங்காய் எங்கையாவது எண்ணெய்க்கான பைப்-லைன் போடிறதுக்கு குண்டுவெடிப்புகள் அச்சுறுத்தலாய் இருந்துவருகிது. மன்னராட்சியையும், மதவாதத்தையும் ஆதரிச்சுச் சாதிக்க நினைச்சது சரிப்பட்டு வராததால, இப்பை மக்களாட்சி அது இதெண்டு கதைச்சுப்பார்க்கினம் போல கிடக்கிது'.

'அங்கை மட்டுமில்லை ஆசியாவில சீனாவும் தனக்குப் பக்கத்தில இருக்கிற உஸ்பெக்கிஸ்தானை தன்ரை பொக்கற்றுக்கிள்ளை போடிற அலுவல் பார்த்துக்கொண்டிருக்கிது. இல்லை யோசிச்சுப்பாருங்கோ...

சீனாவின்ரை சனத்தொகைக்கு அங்கையிருக்கிற ஆக்கள் ஒருக்கால் லைற்றரை மூட்டிறதுக்கே எவ்வளவு பெற்றோல் தேவைப்படும் எண்டு! இல்லாட்டி எல்லா விதத்திலும் மேற்குலகத்துக்குச் சவால் விடிற மாதிரி வளர்ந்திட்டு, எண்ணெய்ச் சிக்கலிலை முடக்குப்பட்டு சீனா பலவீனப்பட்டுப் போயிடுமெல்லோ! ஏன் எங்கட இந்தியா பாகிஸ்தான் விசயத் திலை அடக்கி வாசிக்கிறதுக்கு என்ன காரணமெண்டு நினைக்கிறீர்?

எல்லாம் ஈரானிலை இருந்து நீண்டதொரு பைப்-லைனை நிறுவி தன்ரை எரிபொருள் தேவையளைப் பூர்த்தி செய்யிற திட்டம்தான். இதுக்கு பாகிஸ்தான் வழிவிட்டால் தான் உண்டு. அதாலதான் நல்லாய் சிரிச்சு மழுப்பிக் காரியம் சாதிக்க வேண்டிக் கிடக்கு.

அப்பிடித் தம்பி! மத்திய கிழக்கு மட்டுமில்லாமல் எண்ணெய் கிடைக்கிற இந்தோனேசியா போன்ற மற்ற நாடுகளும் கூட மேற்குலகத்தோட முண்டுப்படிற பிரதேசங்களாகத்தான் இருக்கிது.

அதாலதான் எங்கை டைனோசர் கணக்குக்கு தங்களுக்கும் முடிவு காலம் நேர்ந்திடுமோ எண்டு அமெரிக்கா, சீனா போன்ற நாடுகள் கவலைப்பட்டு காரியமாற்றுது'.

'அதென்ன அப்பு! டைனோசர் கணக்குக்கு முடிவுகாலம் நேர்ற கதை?'. 'ஓ. . அதுவோ! உமக்குத் தெரியும் தானே என்னென்ன அளவுகளிலை டைனோசர்கள் முந்தி வாழ்ந்து வந்ததெண்டு.

கடைசியிலை அதுகளின்ரை பாரிய வளர்ச்சியே அதுகளைப் பட்டினி போட்டு அழிச்சிட்டிது. 6 மில்லியன் (60 லட்சம்) வருசங்களுக்கு முன்னால ஆகாயக்கல் ஒண்டு கடுமையாய் தாக்கினதிலை பூமி பெரிய இயற்கை அழிவுகளை எதிர்நோக்கவேண்டி வந்திச்சிது.

இப்பத்தைய சாதாரண யானை ஒண்டுக்கே ஒரு நாளைக்கு 250 கிலோ குழை தேவைப்படிதெண்டால், டைனோசர்களின்ரை தீனித்தேவையளை கற்பனை செய்து பாருமன். அதுகளின்ரை தீனித்தேவையளைப் பூர்த்தி செய்யிறதுக்கு ஏற்ற மாதிரி பூமியின்ரை இயற்கைவளம் இல்லாமலிருந்ததால டைனோசர்கள் சோறு, தண்ணியில்லாமல் வயிறு காய்ஞ்சு செத்திட்டினம். பலமாய் இருந்த பாரிய அளவே அதுகளுக்கு பாதகமாயும் ஆயீட்டிது.

அதுதான் என்ன சொல்லிறன் எண்டால் எந்தப்பெரீய வல்லமையெண்டாலும் அதுக்குத் தேவையான சக்தித்தேவையளிலை கவனமாய் இருக்கோணுமெண்டிறது இயற்கையான விதி!'.

'ஓமோம்! நீங்கள் சொல்லிறதிலையும் நியாயம் இருக்கிதுதான். ஆனாலும், நாங்கள் தமிழர் சின்னதொரு இனம். எண்ணெய் வளம் இருக்கோ, இல்லையோ எண்டிறதைக் கூட உறுதிசெய்யேலாத சூழ்நிலையிலை இருக்கிறம். பொருளாதாரத் தடை ஓரளவுக்கு எடுபட்டதால இப்பதானே ஒரு 3 வருசமாய் கொஞ்சம் சாமானுகள் வரத்தொடங்கியிருக் கிது. அப்பிடியிருக்க பெரிசாய் செய்யிறதுக்கு எங்களிட்டை எங்கை வசதி?'.

'தம்பி! நான் ஒண்டும் பெரீசாய் செய்யிறதைப் பற்றிக் கதைக்கேல்லை. அந்தக் காலத்திலை எங்கட நாளில சும்மா நாங்களெல்லாரும் எடிசன் அதைக் கண்டுபிடிச்சார், கிரகாம்பெல் இதைக் கண்டுபிடிச்சார் எண்டு பாடமாக்கிறதோட சரி. அதுக்கு மேல அதைப் பற்றி ஒண்டும் யோசிக்கிறேல்லை. முந்தியெல்லாம் அப்பிடி ஆராவது ஆர்வப்பட்டாலும் விஞ்ஞானி, கிஞ்ஞானி எண்டு கேலி பண்ணி விசர்ப்பட்டம் கட்டி, எங்கட முன்னேற்றத்தை நாங்களே முடக்கிடுவோம்.

ஆனால் அந்தச் சமூகப்போக்கு இப்பை மாறீட்டிது. கிட்டடியிலையும் பத்திரிகையளிலை பார்த்திருப்பீர். எங்கட தம்பி ஒண்டு நல்ல வல்லமையாய் நீரோட்டத்திலை இருந்து மின்சாரம் பெறுகிறதுக்கான வசதியளை சுயமுயற்சியிலையே உருவாக்கியிருக்கிறார்.

அவற்றை முயற்சிக்கு புனர்வாழ்வுக்கழகமும் ஆதரவு கொடுத்திருக்கிறது மட்டுமில்லாமல் எங்கட தம்பியவை சூசையும், தமிழ்ச்செல்வனும் நேர போய் வேற ஊக்கமளிச்சுமிருக்கினம். அதாலதான் சொல்லிறன். அந்தத் தம்பியின்ரை உழைப்பையும், வல்லமையையும் முன்னுதாரணமாய் கொண்டு மற்றாக்களும் முன்னுக்கு வரோணும். கண்டுபிடிப்பாளர்மார் ஒண்டும் வானத்தில இருந்து குதிக்கிறேல்லை கண்டீரோ?'.


'ஓமோம் விளங்கிது அப்பு! ஆனாலும், அதுக்காக நீங்கள் ஆரம்பத்தில சொன்ன 'அலையளிலை இருந்து மின்சாரம்' எடுக்கலாம் எண்ட கதையை நான் நம்போணுமோ?'.

'தம்பி! நான் ஒண்டும் புதிசாய் சொல்லேல்லை. ஸ்கொட்லாந்து நாட்டில கடல் அலையளின்ரை வலுவால சுழல்-சக்கரங்களை இயக்கி பெரியளவில மின்சாரம் எடுக்கினம். அலையளைப் பொறுத்து சின்னச் சின்ன நீளங்களிலை அலைவாங்கியளைத் தொடர்ச்சியாய் அடுக்கி, 4-ஸ்ரோக் என்ஜின் கணக்குக்கு தொடர்ச்சியாய் இயங்க வைச்சு பெரியளவில மின்சாரம் எடுக்கினம்.

அது மட்டுமில்லாமல் சந்திர ஈர்ப்புச்சக்தியால ஏற்படுகிற கடல் மட்டத்தின்ரை ஏற்றத்தாழ்வுகளை அடிப்படையாய் வைச்சும், மின்சாரம் எடுக்கிற வழமை கன நாடுகளிலை இருந்து வருகிது. இதைப் பின்பற்றி 1960களிலை பிரிட்டனிலை ஆரம்பிக்கப்பட்ட ஒரு திட்டத்தாலேயே 240 மெகாவாற்ஸ் மின்சாரம் எடுக்கினம் (இலங்கைத் தீவின்ரை மொத்த வருட உற்பத்தி 6000 மெ.வாற்ஸ் மட்டுமே). இவை தவிர சூரிய ஒளி, இயற்கை வாயு எண்டு எத்தினை வழிவகையள் இருக்கிது.

சூரியஒளி எண்டு நான் சோலர்-பனெலைச் சொல்லேல்லை. அனல் மின்னிலையத்தில கரியைக் கொட்டி எரிக்கிறதுக்குப் பதிலாய், சூரிய வெப்பத்தைக் குவிச்சு தண்ணியைக் கொதிக்க வைக்கிறது மூலம் சுழல் சக்கரங்களை இயக்கிறது பற்றித்தான் சொல்லிறன்.

இதால ஒவ்வொருத்தற்றை மின்சாரத்துக்கான கட்டணமும் குறையும். ஏதோ தம்பி! என்ரை வயசுக்கு இனிமேலும் சாவி, நட்டெண்டு தூக்கிக்கொண்டு திரிஞ்சு அலுவல் பார்க்கேலாது. நீங்கள் சின்னஞ்சிறுசுகள் முயற்சிசெய்து பார்த்தீங்களெண்டால், பிரயோசனம் உங்களுக்கு மட்டுமில்ல, எங்கட நாட்டுக்கும்தான்! ஏன் நாங்கள் வாழிற இந்தப் பூமியே அதால லாபம் அடையுமெல்லோ. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லீட்டன். மிச்சம் உங்களைப் பொறுத்தது. அப்ப வாறன் பிள்ளையள்!'



உலா 42

## ஏ9-ஏரம்பு

# வரலாற்றில் மறக்கமுடியாத ஜூலை

தமிழர் வாழ்வில் ஒரு கறைபடிந்த மாதமாகவும் அதன் காரணமாக எழுச்சி கொண்ட மாதமாகவும் யூலை மாதம் உள்ளது. அதாவது 1950கள் முதல் தொடங்கி 1970, 1983 என தமிழர்கள் மீதான இனப்படுகொலைகள் சிறிலங்கா இனவாத அரசினால் கட்டவிழ்த்துவிடப்பட்டன. 1983 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் நாள் யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் பதின்மூன்று சிறிலங்காப்படையினர் விடுதலைப்புலிகளின் வரலாற்று



முக்கியத்துவம் பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

இதுதான் எமது இனத்தின் இருப்பை நிலை நிறுத்திக் கொள்வதற்கான அடித்தளமாக அமைந்தது. கடந்த 1970 களில் மூத்த தமிழ் தலைவர்களால் சிறிலங்கா அரசிற்கு எதிராக அகிம்சை ரீதியான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் ஆயுத ரீதியாக 1983 யூலை 23 இல் தான் போராட்டம் தீவிரம் பெற்றது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்த இந்தியா, பர்மா, சீயம், கொரியா, ஆகிய நாடுகள் சுதந்திரம் பெற்றபோது அங்குள்ள இனங்களுக்கு ஏற்ப நாடுகள் பிரித்தே வழங்கப்பட்டன. அப்பொழுது தமிழ் மக்களும் நினைத்திருந்தால் பிரிவினை கோசத்தை முன்வைத்து இலங்கையை பிரித்து தமிழர் தாயகத்தை பெற்றிருக்கலாம். மூத்த தமிழ் தலைவர்கள் அன்று அதனை ஒரு அசமந்தப் போக்காகவே விட்டனால் தான் இன்று சிங்கள [illegible]ளும் இனத்தால் எமது இனம் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றது.

1950 களின் பின்னர் தமிழ் மக்கள் மீதான இனவன்முறைகள் பற்றி எவரும் கவனமெடுக்காத நிலையில் 1970க்கு முன்னரும் ஆயுதப்போராட் டம் முகிழ்த்துக் கொண்டிருந்தாலும் 1983 இற்குப் பின்னர் எழுந்த பரவலான ஆயுதப் போராட்டத்தின் விளைவாக இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு முன்னர் 1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை கொண்டிருந்த இவ் ஒப்பந்தம் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கண்டி யாத்திரையின் போதும் U.N.P கட்சியின் எதிர்ப்பின் காரணமாகவும் கிழித்தெறியப்பட்டது.

1964 இல் டட்லி சேனநாயக்க செல்வா ஒப்பந்தம் மாவட்ட சபை அமைப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற கோட்பாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பௌத்த பிக்குமாரின் கடும் எதிர்ப்பினால் கிழித்தெறியப்பட்டது.

தொடர்ந்து 1981 இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபையும் அதே அரசினால் ஒழிக்கப்பட்டது. தொடர்ந்து 1983 இல் இனக்கலவரத்தின் பின்னர் இந்தியத்தூதுவர் பார்த்தசாரதியினால் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பு ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது.

1984இல் வட்டமேசை மாநாடு பேசி செயலற்றுப் போயிற்று. 1985 இல் பூட்டான் தலைநகரான திம்புவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையும் பயனற்றுப்போன நிலையில்,

1987ஆம் ஆண்டு யூலை மாதம் 27 ஆம் நாள் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்தியப்படையினர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர். 1989 இல் சர்வகட்சி மாநாடு தோல்வியடைந்து அன்றைய சனாதிபதி பிரேமதாஸவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் 1990 ஆம் ஆண்டு யூன் 12 ஆம் திகதி முறிவடைந்தது.

1991 ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவும் பயனற்றுப் போனது. தொடர்ந்து 1995 சனவரி 8 ஆம் நாள் தற் போதைய சிறிலங்கா அரசுத் தலைவர் சந்திரிகாவுடன் செய்துகொண்ட மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் 1995 ஏப்ரல் 19 இல் முறிவடைந்தது. இவ்வாறு தமிழர்களின் உரிமை மறுப்பு இன்று வரை தொடர்ந்து வந்துள்ள நிலையில் தான் இனவாத அரசிற்கு எதிராக இந்த யூலை மாதத்தில் பல எழுச்சிகரத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப காலங்களில் ஒரு கறைபடிந்த மாதமாக யூலைமாதம் காணப்பட்டாலும் அதன் எதிரொலியாக இதே யூலை மாதத்தில் 1983 இல் திருநெல்வேலியிலும் மேற்கொள்ளப்பட்ட முதன் முதல் ஆயுதப் போராட்டம். 1987 இல் நெல்லியடியில் மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதல், 1995 இல் மேற்கொள்ளப்பட்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை, இதே ஆண்டு காங்கேசன் துறைக்கடலில் எடித்தாரா-கட்டளைக்கப்பல் மூழ்கடிப்பு, 1996 இல் முல்லைப் பெருந்தளம் சிறிலங்காப் படையினரிடம் இருந்து மீட்கப்பட்டதும் 2001 ஆம் ஆண்டு யூலை மாதம 24 ஆம் நாள் கட்டுநாயக்கா விமானத்தளம் தாக்கப்பட்டது போன்ற வெற்றித்தாக்குதல்கள் எதிரொலியாக நடைபெற்று தமிழ் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளன.

1950 களில் இருந்து தமிழ் இனத்தை இலங்கைத்



தீவில் இருந்து அழித்துவிட பல்வேறு வழிகளிலும் முனைந்த சிறிலங்கா பேரினவாத அரசிற்கு எதிராக ஆயுத ரீதியாக 1983 இல் ஆரம்பித்த விடுதலைப்போராட்டம் இன்று பெரும் மக்கள் போராட்டமாக சிறிலங்கா அரசிற்கு எதிராக தொடர்கின்றது.

அன்று எமது இனத்தை அழிக்க பொருளாதார ரீதியாகவும் கல்வி, மொழி ரீதியாகவும் இன அழிப்பை மேற்கொண்ட சிறிலங்காப் படைகள் இது போன்ற செயற்பாடுகளை எமது மண்ணில் நிகழ்த்துமானால் அதே படைகளுக்கு பல வழிகளிலும் பேரழிவை ஏற்படுத்த எமது இனம் எப்பொழுதும் தயாராகவே உள்ளது. என்ற செய்தியை தமிழர் தாயகப்பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையிலிருக்கும் அவர்கள் சார்ந்த ஆயுதக் குழுக்களுக்கும் அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள மக்களின் அண்மைக்காலச் செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**சு. பாஸ்கரன்**


## றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேசபுரம், கிளிநொச்சி.

## பதவிகளுக்கான வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. இவர்கள் தற்போது நடைபெறும் பால வேலைகள் (RBNE) CAARP, SATAART, NECORD ஆகியவற்றின் நிதிகள் ஊடாக வழங்கப்பட்ட வீதி வேலைகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | சிரேஷ்ட பொறியியலாளர் | - | வெற்றிடம் | -01 |
| 02. | கனிஷ்ட பொறியியலாளர் | - | வெற்றிடங்கள் | -02 |
| 03. | சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - | வெற்றிடங்கள் | -02 |
| 04. | Quantity Surveyor | - | வெற்றிடம் | -01 |
| 05. | வேலை மேற்பார்வையாளர் (W.S) | - | வெற்றிடங்கள் | -02 |
| 06. | வேலை மேற்பார்வை பயிலுனர் | - | வெற்றிடங்கள் | -03 |
| 07. | கணக்காளர் (கம்பனி கணக்குகள்) | - | வெற்றிடம் | -01 |
| 08. | வாகனசாரதி | - | வெற்றிடங்கள் | -02 |
| 09. | வீதி றோலர் சாரதி | - | வெற்றிடங்கள் | -02 |
| 10. | பைகோ சாரதி | - | வெற்றிடம் | -01 |
| 11. | மெக்கானிக் (வாகனங்கள்) | - | வெற்றிடம் | -01 |

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பங்களை 03.08.2005ஆம் திகதிக்கு முன்னதாக பணிப்பாளர், றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்) லிமிட்டட், கணேசபுரம், கிளிநொச்சி. என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*பணிப்பாளர்,*
*றோட் எஞ்சினியரிங் (பிறைவேற்)*
*லிமிட்டட்,*
*கணேசபுரம்,*
*கிளிநொச்சி.*

(சி-12345)



விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கை களை மேம்படுத்த ஊடு பயிர்ச் செய்கையில் ஈடுபடுவது பொருத்தமான ஒரு செயற் பாடாகும்.

ஒரு குறிப்பிட்ட விவசாய நிலப் பரப்பில் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட பயிர்களை பயிரிடுவதன் மூலம் பல்வேறு வகையான நன்மைகளை பெற முடியும் என அனுபவமும் ஆற்றலும் உள்ள விவசாயப் பெருமக்கள் தெரிவிப்பார்கள்.

# பொருண்மிய வாசல்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

உற்பத்திகள் பெருகுவதன் மூலமாக வருமானம் அதிகரிக்க இந்தச் செயற்பாடு உதவும். இதை விட முக்கியமானது பொருண்மிய நெருக்கடிக்குள் எமது பிரதேசம் தள்ளப்படும் வேளைகளில் எல்லாம் இவ்வாறான பயிர்ச்செய்கை முறை விவசாயிகளை மாத்திரமன்றி விவசாயிகளை நம்பி இருக்கும் நுகர்வோரையும் பாதுகாக்கும்.

எரிபொருட்தடை, விவசாய உள்ளீடுகளின் தடை காரணமாக சில வருடங்களுக்கு முன்னர் எமது விவசாயி கள் இவ்வாறான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். மறுபடியும் அவ்வாறான ஒரு சூழ்நிலை நம்மத்தியில் எழ வாய்ப்புண்டு.



ஒரு பிரதான பயிரின் ஊடுகளில் வேறு பயிரை அல்லது பல்வேறு பயிர்களை பிரதானபயிருக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் நடுகை செய்து விவசாயத்தை மேற் கொள்ளும்போது நிறைந்த பயன்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

உதாரணமாக தென்னையின் ஊடுகளில் முதல் ஐந்து வருடங்களிலும் மரக்கறி, சிறுதானியம், வாழை போன்ற பயிர்களை பயிரிட்டு பயன்பெறமுடியும். இவ் வாறே இருபது முப்பது வருடங்களின் பின்னர் தென் னையின் கீழ் நிலக்கடலை ஏனைய சிறுதானியங்களை பயிரிடலாம். இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொள்ளமுடியும்.

உங்கள் பகுதி விவசாய உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொண்டு உரிய தகவல்களை பெற்றுக்கொண்டு பயனடைய முடியும்.

# கால்நடைகளின் உணவில் இப்பில் இப்பிலின் முக்கியத்துவம்

இப்பில் இப்பிலானது பிலிப்பைன்ஸிலிருந்து இலங்கைக்கு முதன் முதலில் தேசிய கால் நடைச் சபையால் 1977 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இது இலகுமினேசே குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் தாவரவியற் பெயர் Levcaena Leucocephala இத்தாவரமானது உலர்வலயம், இடைவெப்ப வலயம் போன்ற இடங்களில் வளரக்கூடியது. அத்துடன் ஏனைய தாவர இனங்கள் வளரமுடியாத வளம் குறைந்த மண்ணிலும் வரட்சிக் காலங்களிலும் நன்கு வளரக் கூடியது. அசாதாரணமாக நிலத்தை பண்படுத்துவது போல நிலத்தை பயன் படுத்தினால் சரி. இப்பில் இப்பிலின் விதைகள் சாதாரண விதைகள் போலல்லாமல் மிகவும் கடினமான வித்துறையை உடையன. எனவே இவற்றை முளைக்கப் பண்ணுவது மிகவும் கடினம். இதற்காக இவற்றை 12 மணி நேரம் சாதாரண நீரிற்குள் ஊறவிடலாம். அல்லது கொதிநீரிற்குள் 15 செக்கன் படி 3 தடவைகள் ஊறவிடலாம். ஒரு ஹெக்டேயர் நிலத்துக்கு 5kg விதைகள் போதும். இவற்றின் நிரைகளிற்கிடையில் 100Cm இடைவெளியும் மரங்களிற்கிடையில் 30 Cm இடைவெளியும் கொண்டு நட வேண்டும்.

இப்பில் இப்பில் மரமானது 1m உயரத்திற்கு வந்தவுடன் அறுவடையை ஆரம்பிக்கலாம். மரங்களின் மீள்வளர்ச்சியை பொறுத்து 1-3 மாதத்திற்குள் மீளவும் வெட்டலாம். ஒரு ஹெக்டேயர் நிலத்திலிருந்து 10,000kg 15000kg வரையிலான விலங் குணவைப் பெறலாம். இங்கு விலங் குணவான இப்பில் இப்பிலின் இலைகள், தண்டுகள், பூச்சிகள், காய் கள் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

இப்பில் இப்பிலினை கால் நடைகளின் உணவில் சேர்க்கும் போது ஏற்படும் அனுகூலங்களானவை, இலகுவில் சமிபாடடையக் கூடியது. 24% புரதத்தை (Cnide Protein) கொண்டுள்ளது. அதாவது இதிலுள்ள புரதத்தின் அளவானது தேங்காய்ப் புண்ணாக்கிலுள்ள புரதத்தின் அளவிலும் அதிகமாக இருக்கிறது. அத்துடன் இப்பில் இப்பிலின் B-Carotein அதிகமாக இருக்கிறது. இதை கோழிகளின் உணவில் சேர்க்கும்போது முட்டை மஞ்சள் கருவின் நிறத்தை அதிகரிப்பதால் நுகர்வோரின் விருப்புத் தன்மையை அதிகரிக்கின்றது. அத்துடன் கல்சியம் எனும் கனிப் பொருளை அதிகளவில் கொண்டிருப்பதால் முட்டை ஓட்டின் விருத்தியை அதிகரித்து முட்டைகள் இலகுவில் உடைவதையும் தவிர்க் கின்றது.



இப்பில் இப்பில் உணவை கோழிக்குஞ்சுகளின் உணவில் கண்டபடி கலக்க முடியாது. இப்பில் இப்பில் உணவை தூளாக்கிய வடிவத்தில் தேங்காய்ப் புண் ணாக்கிற்குப்பதிலாக பாவிக்கையில், அவற்றின் வளர்ச்சிக்கு என்ன நடைபெறுகின்றது என பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் வாயிலாக அதனது 0,2.5,5,7.5,10 வீதங்களில் இவை தேங்காய்ப் புண்ணாக்குடன் கலக்கப் பட்டு கோழிகளுக்கு உணவாகக் கொடுக்கும்போது 28 நாட்களில் அவற்றின் வளர்ச்சி அவதானிக்கப் பட்டபோது 5 வீதம் கலக்குகையில், வளர்ச்சி துரிதமாகவும் 5% இற்கு மேல் கலக்குகையில், வளர்ச்சி குறைவாகவும் இருந்தது. ஆகவே 5% கலத்தல மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

முயல்களின் உணவில் இப்பில் இப்பில் உணவை 20-40 வரை சேர்க்கலாம். கறவைப் பசுக் களுக்கு கன்று போடுவதற்கு 2 மாதங் களிற்கு முன்பும், கன்று போட்ட பின் 2 மாதம் வரையும் 100 இறாத்தல் புல்லுடன் 40-50 இறாத்தல் இப்பில் இப்பில் உணவைப் பயன்படுத்தும் போது பாலிற்கான உற்பத்திச் செலவை பெருமளவில் குறைக்கக் கூடியதாக இருக்கும்.

அடுத்ததாக இவற்றின் பிரதிகூலங்களை பார்ப்போமானால், இவை ஆழ ஊடுருவும் வேர்த்தொகுதியை கொண்டிருப்பதால் நிலத்தடி நீரிற்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதுடன் ஏனைய பயிர்களுடன் போட்டியிடுவதால் வேறு பயிர்களுக்கு அண்மையில் இவற்றை செய்கை பண்ண முடியாது. இவற்றில் 'Mimosene' எனப்படும் நச்சுத் தன்மையான பொருள் இருப்பதால் கன்றுகளின் இறப்பை துரிதப்படுத் தும். உரோமங்களை உதிரச் செய்யும். மலட்டுத் தன்மையை ஏற்படுத்தும். தைரோயிட் சுரப்பியில் பாதிப்பை ஏற்படுத்தும்.

இத்தகைய பாதிப்பை பின் வருமாறு நிவர்த்தி செய்யலாம். இத்தகைய நச்சுப்பொருளானது உலர் வெப்பநிலையில் இலகுவில் பிரிந்தழிவதால் கொதிநீரில் அவித்த பின்னர் விலங்குணவில் இவற்றைச் சேர்க்கலாம். “அளவிற்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு” என்பது போல இவற்றை குறிப் பிட்ட விகிதத்திலேயே பயன் படுத்தவேண்டும்.

எமது பிரதேசத்தில் கைவிடப்பட்ட இடங்களில் இத்தகைய பயிரை உற்பதி செய்வதால் அவற்றை ஓர் விலங்கு வைத்திய நிபுணரின் ஆலோசனையின் கீழ் பொருத்தமான விகிதத்தில் விலங் குணவில் கலப்பதால் எமது உற்பத் திச் செலவை குறைப்பது மட்டுமன்றி கூடியளவு வருமானத்தையும் இலகுவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். மற்றைய பயிர்களிற்குச் செய்யும் நிலப்பண்படுத்தலைப் போலவே இப் பயிரிற்கும் செய்தல் போதுமானது.



# மறதி

நாம் எவ்வளவு படித்து பட்டம் பெற்றவர்களாய் இருந்தபோதும் இந்த மறதியென்ற வலைக்குள் சில சமயம் விழுந்து மீள முடியாமல் தவிக்கின் றோம்.

இப்பிரச்சினைக்குரிய காரணங் கள் எவை என்பதைக் கண்டறிய நாம் முயற்சிக்காமல் இருப்பதால் பல தரப் பட்ட சொல்லொண்ணா துன்பங்களுக்கு ஆளாகிவிடும் துர்ப்பாக்கிய நிலை எமக்கு வந்து சேருகின்றது.

மறதி என்பதற்குரிய காரணங் கள் பலவகை உண்டு. அவை எல்லோருக்கும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. ஒவ்வொருவருக்கும் நிறையக் காரணங்கள இருக்கலாம். ஒன்று:- அவசரம். இந்த அவசரம் என்பது எல்லோருக்கும் அடிக்கடி ஏற்படுகின்ற காரணி. எந்த ஆண், பெண்களைப் பார்த்தாலும் ஐயோ அவசரத்தில் மறந்திட்டன் என்பார்கள். இது எம்மை ஆட்டிப்படைக்கக் காரணம் என்ன என்று பார்ப்போம்.

நாம் இன்று குறிப்பிட்ட இடத்திற்கு உரிய நேரத்துக்குப் போக வேண்டும் அதற்காக நாம் அவசரப்பட்டு தட்டுத் தடுமாறி சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதி என்ற வகையில் வெளிக்கிட்டு ஆயத்தமாகின்றோம்.

எம்மை அறியாமல் எதையாவது ஒன்றை எமக்கு அவசியமானதை மறந்து விட்டு விட்டுப் போகின் றோம். போய் அந்த இடத்தில் நின்றுதான் ஐயோ மறந்துவிட்டேன் என்று வாயைப் போட்டு அடிப்போம்.

உண்மையில் இதனால் எமக்கு எவ்வளவு பாதிப்பு ஏற்படுகின்றது பார்த்தீர்களா? நாம் எதையும் நேரத்தோடு செய்தால் இப்படி அவசரப்பட்டு மறக்கவேண்டிய நிலை வருமா? இன்று நாம் நேரத்துக்கு எங்கள் வேலையை செய்து முடிக்கவேண்டுமானால் அரை மணித்தியாலங்களுக்கு முன் அந்த வேலையைச் செய்து நாம் போகும் இடத்துக்கு தயாரானால் இந்த மறதி ஏற்பட அவசரம் காரணமாகாது.

அடுத்து மனதில் ஏற்படும் பலதரப் பட்ட குழப்பமான பிரச்சினைகள். எம் மனதில் பிரச்சினைகள் கூடிக்கொண்டு போகும்போது மறதியும் கூடிவிடுகின்றது.

எமக்கு ஏற்படும் பிரச்சினைகளை அந்த இடத்தில் மறந்துவிட்டு மனதை அடுத்த நிலைப் பாட்டிற்கு ஏற்றவாறு மாற்றப் பழகவேண்டும்.

எல்லா விசயங்களையும் தேவையில்லாமல் எம் மனதில் போட்டு வைப்பதால் மறதி எம்மை கூடுதலாக ஆட்கொள்கின்றது.

எம் மனநிலை செய்து முடித்த காரியங்களை எண்ணிக்கொண்டிருக்க நாம் இடம் கொடுக்கக்கூடாது. எனி என்ன செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டில் எம் மனதை பழக்கப்படுத்தி வைக்க வேண்டும். அப்படியானால்தான் நாம் மறதியற்று வாழமுடியும்.

இப்படியான காரணங்கள் மறதிக்கு வித்திடுகின்றன. சிலபேருக்கு வேலைச்சுமை, குடும்ப வறுமை, கவலையான நிகழ்வுகள் யாவும் மறதிக்குக் காரணமாகிவிடுகின்றன. எப்பிரச்சினையாக இருந்தாலும் அதனை சாதாரணமாக எண்ணுபவன் மறதிக்கு அடிமையாகமுடியாது. எமக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு நிகழ்வுகளையும் எம் வாழ்வின் வெற்றிக்கே ஒரு சவாலாக ஏன் நாம் எடுக்கக்கூடாது? அப்படி நாம் எடுப்போமாயின் எம்மை தாக்குகின்ற பிரச்சினைகளே நாம் பிரபல்யமடைய வழி சமைக்கும்.


நாம் வாழ்க்கையில் செய்து முடித்தவை சில. செய்யக்காத்துக்கிடப் பவை பல்லாயிரம். இப்படி எமக்காக எத்தனையோ பணிகள் இருக்கையில், நடந்து முடிந்த சம்பவங்களை எண்ணி மனதைக் குழப்பி மறதியோடு மாண்டு கிடந்தால் எம் வாழ்வு எப்படி சிறப்படையும். எது எப்படி இருந்தபோதும் இந்த மறதியை விரட்டி வாழ நாம் பழக வேண்டும். சிந்தித்து வாழ மறந்தவனின் வாழ்வு பல பேரின் சிரிப்புக்கே ஆளாகும் நிலை உருவாக விடாமல் எனியாவது எம்மை பார்த்து பலபேர் சிந்திக்கத் தூண்டும் அளவுக்கு நாம் நிலையான மறதியற்ற மனிதர்களாவோம்.

சு.சி.தமிழினி.






ஆஷஸ் கிண்ணம்



கலிபோர்னியாவின் கார்ஸன் நகரில் நடந்த கண்காட்சி கால்பந்து போட்டி யில், ரியல் மாட்ரிட் அணி வீரர் டேவிட் பெக்காம் லாஸ் ஏஞ்சல்ஸ் கேலக்ஸி வீரர் நகமு ராவை ஏமாற்றி கோல் அடிக்கிறார். இந்தப் போட்டியில் ரியல் மாட்ரிட் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

## கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி ஒத்திவைப்பு

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுவிழாவின் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட்போட்டி நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## பிரையன் லாறா புரிந்துகொள்ள முடியவில்லை



**மேற்கிந்தியத்தீவுகளின்** நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் பிரையன் லாறாவின் அண்மைய கருத்துக்களைப் பார்க்கின்றபோது அவர் ஒரு விளையாட்டு வீரரா? அன்றி அரசியல்வாதியா? என்ற கேள்வியை ஏற்படுத்தும் விதமாகவே அமைந்துள்ளது.

ஏனெனில், அவர் அண்மையில் "மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக் கெட் சபை அழைத்தால் இலங்கையில் நடைபெறும் போட்டித் தொடர்களில் விளையாடத் தயார்" எனத் தெரிவித்துள்ளார்.

விளம்பர ஒப்பந்த சர்ச்சை காரணமாக இலங்கைக்கான சுற்றுலாவிலிருந்து விலகிக்கொண்ட லாறா இவ்வாறு ஏன் திடீரென இக்கருத்தை முன்வைத்தார் என்ற கேள்வி பலமாகவே கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் எழுந்துள்ளது.

லாறாவைப் பொறுத்து இப்போட்டித் தொடரில் இருந்து விலகிக்கொள்வது புதிய விடயமாகக் கொள்வதற்கு இல்லை. அண்மையில் மேற்கிந்தியத்தீவில் நடைபெற்ற தென்னாபிரிக்கவுடனான போட்டித் தொடரில் இருந்து விலகிக் கொண்ட லாறா பின்னர் மீண்டும் அத்தொடரில் விளையாடினார்.

லாறா இவ்வாறு நடந்துகொள்ளக் காரணம் என்ன? அவரைப் பொறுத்து கிரிக்கெட்டில் இருந்து விலகிக் கொள்ளும் காலம் நெருங்கிய நிலையில் இப்படிப்பட்ட முறையில் இவர் நடந்துகொள்வது சரியா? என்ற கேள்வி எழாமலும் இல்லை.

அவரோடு விளையாடிய வீரர்கள்கூட அவரைப் பற்றி தவறான கருத்துக்களையே வெளியிட்டுள்ளனர். அதாவது, லாறா தான் நினைத்த நேரம் விலகிக்கொள்வதும், நினைத்த நேரம் அணியில் இணைந்து கொள்வதும் அவரின் சுயநல நோக்கத்தையே காட்டுவதாகவும், சக வீரர்களுக்கு அவர் தலைவராக இருந்தபோது ஆலோசனை வழங்குவதில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில், நட்சத்திர அந்தஸ்த்துப் பெற்ற வீரர், தன்னுடைய அணி பலவீனமான நிலையில் இருக்கையில் இவ்வாறு நடந்து கொள்வதென்பது ஆச்சரியமளிக்கும் ஒன்றே.

ஆகவே, அவர் அணிக்காகவோ அன்றி தன்னுடைய சாதனைக்காகவோ விளையாட எண்ணியிருப்பாரேயானால் நிச்சயமாக இலங்கையில் நடைபெறும் தொடர்களில் பங்குபற்றியிருப்பார்.

அத்துடன், இலங்கை அணிக்கெதிராக நல்ல ஓட்ட சரசாரியைக் கொண்டுள்ளதோடு, ஐந்து சதங்களையும் பெற்றுள்ளார். அத்தோடு, சர்வதேச தரப்படுத்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் சிறந்த விளையாட்டை வெளிப்படுத்துவராகவும் உள்ளார்.

எனவே, அரசியலில் உள்ள ஒரு தத்துவம்போல் லாறா நடந்து கொள்கின்றாரா? அதாவது, பேச்சுக்கு முன் பேச எண்ணுபவர்கள் பலமாக இருக்கவேண்டும் என்ற தத்துவத்துக்கு அமைய நடந்துகொள்கின்றார்போல் தெரிகிறது.

இது விளையாட்டு வீரருக்குரிய பண்பாக கொள்ளமுடியாது.

கிரிக்கெட்டில் பலமாக உள்ளேன் என எண்ணியே லாறா இவ்வாறு நடந்துகொள்கின்றார் என்றே கருத வேண்டியுள்ளது.

எனவே, இக்கருத்துக்களை அவர் இல்லாமல் செய்வதுடன், கடந்த காலங்களில் கிரிக்கெட்டுக்காக அவர் செய்த அர்ப்பணிப்புக்களை எண்ணி நடந்துகொள்வதே ஒரு வீரருக்கு பண்பாகக் கருதப்படும்.

இனி வரும் காலங்களில் நல்ல வீரராக லாறா நடந்து கொள்வாரா?

பூ.சுபானந்

## நட்சத்திரங்களைக் காணவில்லை

**இலங்கையில்** நடைபெறவுள்ள முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நட்சத்திர வீரர்கள் இல்லாது களம் இறங்க மூன்று அணிகளும் தயாராகவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கை, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் பங்குகொள்கின்றன.

இதில், இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கர், இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம் முத்தையா முரளிதரன், மேற்கிந்தியத்தீவுகளின் நம்பிக்கை நட்சத்திரம் பிரையன் லாறா ஆகியோர் இத்தொடரில் பங்குபற்றவில்லை என்பது கிரிக்கெட் ரசிகர்களுக்கும் பெரும் ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதில், இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம் சச்சின் டெண்டுல்கருக்கு ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் அணியில் இடம்பெறவில்லை.

இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரம் முத்தையா முரளிதரன் 11 மாதங்களின் பின் மீண்டும் அணியில் இணைந்துள்ள நிலையில், இங்கு மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடவே சம்மதம் தெரிவித்துள்ளார்.

அடுத்து மேற்கிந்தியத்தீவுகளின் நம்பிக்கை நட்சத்திரம் பிரையன் லாறா விளம்பர சர்ச்சை தொடர்பாக எழுந்த பிரச்சினை காரணமாக இலங்கைத் தொடரைப் புறக்கணித்துவிட்டார்.

இந்நிலையில், இம்முக்கோணத் தொடர் பரபரப்பாக அமையுமா? என்ற கேள்வி ரசிகர்கள் மத்தியில் பலமாகவே எழுந்துள்ளதென கிரிக்கெட் விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இலங்கை இந்திய அணிகளைப் பொறுத்து அதன் பயிற்றுவிப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நிலையில் இரு அணிகளுக்குமான எதிர்பார்க்கை வலுவடைந்துள்ளது.

இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் டொம்மோடியைப் பொறுத்து மேற்கிந்தியத்தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியை வெற்றிபெற வைத்துள்ளதுடன் முக்கோணத் தொடரில் அணியை வெற்றிபெற முடியும் என்ற நம்பிக்கை அணியினர் மத்தியிலும், ரசிகர்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளார் என்றே கூறுதல் வேண்டும்.

அடுத்து இந்திய அணியின் பயிற்றுவிப்பாளர் செப்பலைப் பொறுத்து இலங்கையில் நடைபெறும் முக்கோணத் தொடரே அவரின் முதலாவது தொடராக அமையவுள்ள நிலையில், இந்திய அணி வீரர்களின் தெரிவு குறித்தும் திருப்தி தெரிவித்துள்ளார்.


எனவே, செப்பலைப் பொறுத்து இந்திய அணியில் சச்சின் இல்லாதது பெரிய பிரச்சினையாகக் கொள்ளவில்லை என்றே கருதமுடியும்.



எது எப்படியோ, முக்கோணத் தொடரை காணவரும் ரசிகர்களை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இல்லாது பெரும் போட்டி ஒன்றை ஏற்படுத்தக் கூடிய வகையில் போராடுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, நட்சத்திர வீரர்கள் இல்லாமல், பயிற்சியாளர்களின் யுக்தியின் மூலம் இந்தியா, இலங்கை அணிகள் போராட முற்படுவார்களேயானால் அது ரசிகர்களுக்கு விருந்தாக அமையும் என்பதில் சந்தேகம் கொள்வதற்கில்லை.

அதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். □



# இலக்கியப்பகிர்வு

# புலரி

கலை இலக்கிய சமூக ஏடாகிய புலரியின் மூன்றாவது இதழ் (சித்திரை- ஆனி 2005) வெளிவந்துள்ளது. யாழ்ப்பாணத்தை பின்புலமாகக் கொண்டு சில இதழ்கள் சில காலம் வெளிவந்தபின்னர் நின்று போயின. காலியான அந்த இடத்தினை நிரப்புவதற்காக இப்போது வெளிவரும் ஒருசில சஞ்சிகைகளில் புலரியும் ஒன்று ஆகும்.

புலரியில் உள்ள கட்டுரைகளில் ஒன்று "பிற அரங்குகளின் வருகையும் தமிழ் அரங்கின் வறுமையும்" என்னும் தலைப்பிலான அரங்கக் கூத்தனின் கட்டுரையாகும்.

கட்டுரையாளர் பின்வருமாறு தன் கருத்துக்களை முன்மொழிகின்றார்.

"தொண்ணூறுகளில் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்ட பிரதேசமாக, தனிமைப் படுத்தப்பட்டிருந்தது. என்பதை நாம் பல வகைகளிலும் உணரலாம். போரின் கொதிக்கும் கணங்களுக்குள் வாழ்ந்த அந்தக்காலம் தந்த தழும்புகள் இன்னமும் மாறவில்லை. என்பதான விடயம் ஒருபுறமிருக்க அக்கால கலை இலக்கிய முயற்சிகள் தனித்துவம் மிக்கவையாக முகிழ்ந்தெழுந்தன. அவற்றில் அனைத்தையும் விட "நாடகமே" மக்களின் பிரச்சினைகளைப் பேசியது என்றும் அரங்க வளர்ச்சியானது விதந்துரைக்கப்படவேண்டியது என்றும் பேரா.சிவத்தம்பி உட்பட பலரும் தமது கருத்துக்களில் கூறி நின்றதனை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால் நாடகம் பற்றிய இந்தக் கருத்து நிலை சரியானதா என ஐயுறத் தோன்றுகின்றது. போரின் இடருக்குள் வளர்ந்த அரங்கு அழகியல் வன்மையற்ற, கருத்துத் திணிப்பு மிக்க பிரசார அரங்கமாக பெருமளவில் இருந்துள்ளது என்பதை மீள் விசாரணை செய்யும்போது உய்த்துணரக்கூடியதாகவுள்ளது. இந்தச் சிந்தனையை தூண்டி நிற்பது அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப் படும் பிறமொழி நாடக அறிக்கைகளே ஆகும்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின் குறிப்பாக ஏ9 பாதை திறக்கப்பட்டதன் பின் யாழ்ப்பாண வாழ்வியலில் பல மாற்றங்கள் நுகரப்பட்டன. ஏறத்தாழ பத்துவருட கால தொழில் நுட்பத்தின் வளர்ச்சிகளும் நாகரிக மேம்பாடுகளும் திடீரென புகுந்ததும் யாழ்ப்பாணம் வீங்கிப் பெருத்தது என்பது என்னவோ உண்மைதான். பல பாதகமான விளைவுகள் உள்நுழைந்தது உண்மையாக இருப்பினும் பல ஆரோக்கியமான விளைவுகளும் இருத்தமையை எவரும் நிராகரிக்க மாட்டார்கள். இந்த வகையில் 2000திற்குப் பின் பல சிங்கள, ஆங்கில மொழி நாடகங்கள் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டன. இந்த அரங்காற்றுகைகள், அரங்க வளர்ச்சியின் பல்பரிமாணத்தை எமக்கு உணர்த்தி நிற்கின்றன." எனக் கூறுகின்றார் கட்டுரையாளர்.

**இணுவையூர்**
**சிதம்பர திருச்செந்திநாதன்**

அவர் கூறுவது போல தொண்ணூறுகளில் யாழ்ப்பாணம் முற்றுகையிடப்பட்ட பிரதேசமாக தனிமைப்பட்டிருந்தது. போரின் கொதிக்கும் கணங்களுக்குள் வாழ்ந்த அந்தக் காலம் தந்த தழும்புகள் இன்னமும் மாற வில்லை என்பது உண்மைதான். ஏனென்றால் எமது பிரதேசம் இன்னமும் ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து விடுவிக்கப்படவில்லை. விடுதலை பெறவில்லை. எப்போது பூரணமான விடுதலை கிடைக்குமோ அன்று தான் எல்லாமே மாற்றம் அடையும்.

மற்றது கட்டுரையாளர் குறிப்பிடுவது போல கைச்சாத்தாகியது போர் நிறுத்த ஒப்பந்தமேயொழிய சமாதான ஒப்பந்தம் அல்ல.

யாழ்ப்பாண நாடகம் தொடர்பாக பேராசிரியர் சிவத்தம்பி உட்பட பலரும் கூறிய கருத்துக்களின் நிலை சரியானதா என ஐயுறத் தோன்றுகின்றது எனக்கூறும் கட்டுரையாளர் போரின் இடருக்குள் வளர்ந்த அரங்கு அழகியல் வன்மையற்ற கருத்துத் திணிப்புமிக்க பிரசார அரங்காக பெருமளவில் இருந்துள்ளது எனவும் கூறுகின்றார்.

இந்தத் தொனிப் பொருள் படவே பலதும் பத்தும் என்னும் தலைப்பில் 'துணைவியூரான்' பக்கத்துவீட்டுலிருந்து. என்ற உபதலைப்பில் பின்வருமாறு கூறுகின்றார்.




அண்மைக்காலங்களில் யாழ்ப்பாணத்தில் பிறமொழி நாடகங்களை திரைப் படங்களை, ஓவியக்கண்காட்சிகளை, பார்க்க வாய்ப்புக்கள் சில கிடைக்கின்றன. இதனால் குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டும் நிலை தளர்கின்றது எனக் குறிப்பிடுகின்றார்.

மூடப்பட்ட, முற்றுகையிடப்பட்ட போக்கு வரத்துத்தடை, பொருண்மியத் தடை விவசாய உள்ளீடு மருந்துப் பொருட்கள் என்று எல்லாவற்றுக்குமே தடை விதித்துவிட்டு சிங்கள அரசு எங்கள் மக்கள் மீது போர் தொடுத்தபோது குண்டுகளைப் பொழிந்தபோது என்ன நடந்தது? என்ன நடக்கும் என்பதை நாங்கள் மறந்துவிட்டோமா?

விடுதலைக்காக போராடும் இனம் சோம்பித் தலை குனிந்து முடங்கி இருக்காது. எப்படி எரிபொருட் தடைக்கு மாற்றீடு காணப்பட்டதோ, எப்படி நீர் இறைப்புக்கு மாற்று வழி காணப்பட்டதோ, எவ்வாறு போக்கு வரத்து நடவடிக்கைகளுக்கு புதிய வழிகள், பாதைகள் திறந்தனவோ அவ்வாறேதான் இருக்கும் வளங்களை- வசதிகளை வாய்ப்புக்களை வைத்துக்கொண்டு எங்களால் செயற்பட முடியும்; இயங்க முடியும்.

அது விவசாயியாக இருந்தால் என்ன? கைத்தொழிலாளராக இருந்தால் என்ன? கலைஞனாக இருந்தால் என்ன? நாடகக்காரனாக இருந்தால் என்ன?

எமது வசதிகள், வாய்ப்புக்கள் குண்டுச் சட்டியாக மாற்றப்பட்டால் நாம் அதற்குள்தான் குதிரை ஓடமுடியும். கண்மூடித் துயிலாமல் ஒதுங்கி தனிவழிபோகாமல் இருக்கின்ற வசதிகளை பயன்படுத்தி செயற்படுபவர்கள் சிறப்பானவர்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க)

# பெண்கள் உறுதியும் உரமும் உள்ளவர்கள்

## படைப்புக்கள் சார்ந்த நோக்கு

பெண்கள் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் மிகுந்தவர்களாக சமூகத்தை இயக்குபவர்களாக இயங்கிவருகின்றார்கள். பெண்களைப் பலவீனப் படுத்துபவர்களாக, நினைத்துக்கொண்டு பலமிழந்தவர்களும் [illegible]ம் பிடித்தவர்களுமாய் எம் மத்தியிலே குறைபாடுடையவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். சிந்தனையில் ஆழமும்



படைப்பு வீச்சும் ஒருங்கே இணைந்துகொண்ட படைப்பாளிகள் ஆண்கள், பெண்கள் பாகுபாடின்றி பெண்ணியத்திற்கான சமூக மாற்றத்திற்கு ஓங்கிக் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தச் சமூகமானது பெண்களது பிரச்சினைகளை உள்வாங்குவதில்லை. பெண்களின் பிரச்சினைகளுக்கான மூலமே சமூகத்திருந்தே தோற்றுவிக்கப் படுகின்றது. பெண்களுக் கெதிரானவர்கள் ஆணாதிக்கம் எனும் போர்வையில் சந்தர்ப்பவாதிகளாய் ஒளிவு மறைவும் இருட்டடிப்புகளுமாய், ஆளணிகளை அகப்பட்டவரை துணையிழுப்பதுமாய் மரபுகளை எல்லைகளாகப் போட்டுக்கொண்டு, தத்தம் சுயநலத்திற்காக மற்றவர்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

பெண்களின் ஒடுக்குமுறைக்கெதிரான ஒருமித்த எழுச்சிக் குரலாக ஆக்கங்கள் கதைகளாக, கட்டுரைகளாக, கவிதைகளாக வெளிவந்திருக்கின்றன. ஒவ்வொரு படைப்பாளியின் பார்வையின் விரிவும், ஆழமும் அவரவரது சமுதாய உணர்வின் வளர்ச்சியாலும் அனுபவங்களினின்று விருத்தி பெற்ற அறிவாலும் நிர்ணயமாகின்றன.

பெண் படைப்பாளிகள் அனைவரும் ஆணாதிக்கத்தின் கொடுமைகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் கண்டறிந்தமையே அவர்களது படைப்பின் ஒருமைக்குக் காரணமாகின்றது. பெண்களின் பிரச்சினைகள் பற்றியோ, அவர்களது உரிமை பற்றியோ நம்மிடையே பேசுவதையும் சிலர் விரும்புவதில்லை. பெண் விடுதலை என்ற பெயரில் வெளியாகும் முற்போக்கு வாதச் சிந்தனைகளை எதிர்க்கும் போக்கில் பெண்ணுரிமையின் குரலை நிசப்திக்க பாடுபடுபவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

'நாங்களும் மனிதர்கள் தான்', 'ஒரு சத்தியம்' 'ஏனிந்த வித்தியாசங்கள்,' 'பலமான கேள்விகள்' போன்ற கவிதைகள் ஆரம்ப காலத்திலேயே, இளமைப் பருவத்திலே பெண்களுக்கு மறுக்கப்படும் உரிமைகள் பற்றிக் கண்டனக் கேள்வி எழுப்புகின்றன.

பெரும்பாலான கவிதைகள் சீதன முறையை வற்புறுத்திப் பெண்களைத் திருமணம் செய்து வைக்கும் முறைமைகளைச் சாடுகின்றன. ஒரு சில அதற்குமப்பாற் சென்று ஆணாதிக்க மனோபாவத்திற்கே சவால் விடுகின்றன. 'மணமில்லாவிட்டாலென்ன மாய்ந்து விடமாட்டோம் நாம்' எனும் வரிகளும்

'உயிர் தப்ப வேண்டுமானால்
ஊரை விட்டு ஓடுவோம்
ஆனால் விலை கொடுத்து
வாங்கியவனுடன் மட்டும்
ஓட நான் தயாரில்லை'

எனும் பிரகடனமும்,

"சீதனத்திற்கு
வழியில்லாததால்
எம்மைச் சுற்றி
உரஞ்சிப் பார்க்கும்
இளைஞரில்
ஒருவன் கூட
புருஷனாய் வர
தகுதி இழந்தான்"

எனும் ஏளனமும்,

'விலைகளை நிறுத்தி
விருப்புக்களுக்கு
இனியாவது
இடங்கொடு'

எனும் சவாலும்,

'வாருங்கள்
மாப்பிள்ளையே
நம்
வருங்கால வாழ்வு பற்றி
வாதிடுவோம்'

என்று தன்னோடு வாழ வந்தவரை வாதுக்கழைக்கும் குத்தலான வார்த்தைகளும் சொல்ல முனைவது என்ன?

குமர்கள் கரை சேர்வதும், விதைவை வாழ்விழந்தவளாவதும், கணவனால் நிராகரிக்கப் பட்டவள் வாழாவெட்டியாவதும் நமது மொழி வழக்கிலே பொதிந்துள்ள ஆணாதிக்கத்தின் ஆழ்ந்த சுவடுகள். 'சொர்க்கத்தில் நிச்சயிக்கப் பட்டு' சொந்தமும் உறவும் நிர்ப்பந்திக்கும் திருமணத்தின் அவசியத்தையே கேள்விக்குட் படுத்தும் இப் பெண்கவிஞர்களது தைரியம் தரும் கவிதைகள் மனதுக்கு உற்சாக மூட்டுகிறது. திருமணம் அவசியமா? எனும் கேள்வியும் அது அவசியமாயின் அந்த உறவு சமத் துவம், பரஸ்பர மரியாதை, பரஸ்பர விருப்பு, நேர்மை ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமையக் கூடும் எனும் கருத்தும் தொக்கி நிற்கிறது.

ஆண்கள் பெண்களுக்குத்தரும் அடி உதைகள், நிந்தனைகள் போன்றவை திருமணம் எனும் உறவுக்குளேயே நியாயப்படுத்தப் படுவதையும் திருமணத்துக்கு உள்ளும் வெளியிலும் பெண்கள் ஆண்களது போகப் பொருட்களாகவே காணப்படுவதையும் சாடுகிற வரிகள் பல உள்ளன. பெண்கள் மீதான வன்முறைகளை வெளிப்படுத்துகின்றன.

'எங்களைப் பாருங்கள்
எங்கள்
சேலையையும் ரவிக்கையையும் அல்ல
எமது உணர்ச்சிகளை
எங்கள்
முகத்தையும் மார்பையுமல்ல
மனக் குமுறல்களை'

(சாம்பற் பூச்சிகள்)

'காரணமின்றி என்மீது
தொடரப்பட்ட
வன்முறைகள்
அவள் மீதும்
தொடரப்பட நான்
அனுமதிக்கப்போவதில்லை'

(பிரகடனம்)

பெண்கள் மத்தியில் பெண்மை பற்றிய பழமை வாதக் கோட்பாடுகளை கேள்விக்குட் படுத்தும் ஆக்கங்கள் சூழல் மாற்றத்தையே குறிப்பாக சமூக மாற்றத்தையே பெரிதும் விரும்புகின்றன. இன்னமும் பழமையிலே தம்மைச் சிறைப்படுத்தி தம் சுயநலங்களுக்கு பாழாக்குவதை மாற்றுகின்ற மூடிய மனங்களைத் திறக்கக் கோருகின்ற ஆக்கங்களைப் பல கோணங்களிலும் காண்கின்றோம். மனித சமத்துவம் பற்றிய குரலாக.

'அம்மா
மனிதனை மனிதனாகப்
பார்க்க முதலில்
பழகிக் கொள்வோம்.'

(அம்மாவிற்கு)

ஒலிக்கின்றது.

பெண்கள் சகல அடக்கு முறைகட்கும் சுரண்டலுக்குமெதிராகப் போராடுவதில் ஆணுக்குச் சமமாக மட்டுமன்றி, ஆணை விட அதிகளவில் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படுவதால், ஆணை விட அதிகமாகவும் போராட வேண்டிய தேவை பெண்ணுக்கு உண்டு. இதற்கான உரிமையை அவர்கள் எந்த ஆணிடமும் பெற வேண்டிய அவசியமில்லை.

"உங்கள்
வறண்டு போன அதட்டல்களையும்
நொருங்கிப் போன கட்டளைகளையும்
நிறைவேற்றும் மனிதப் பிணமாக
வாழாமல்'

எதிர்ப்புணர்வு கொழுந்து விட்டெரிகின்றது. ஒடுக்கலுக்கெதிரான குரலாக ஓங்கி ஒலிக்கின்றது.

பெண்ணிலை வாதக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாதவர்கள் பல்வேறு சாட்டுக்களைக் கூறி மழுப்பி வந்திருக்கிறார்கள். காலம் காலமாக ஆணாதிக்கம் எனும் போர்வையில் சீதனத்துக்காய் பிறப்பெடுத்த சீமான்கள் பலபேர் விஷப்பல்லைப் பொய்ப்பல்லாகக் கொண்டவர்களும், அநீதியே நட்பின் நன்நடத்தையாக உரைக்கும் கால்மாட்டு ராமர்களும் சுகமாக இருந்து சாப்பிடுவதற்கும், வாழ்வதற்குமென கண்டு பிடித்த பால் அசமத்துவப் போக்கு விடை தேட முடியாமல் கேள்வியாகவே நிற்கின்றது.

எனவே பெண்களின் உறுதியும் உரமும் கொண்ட பல்வேறு படைப்பாக்கங்கள் பெண் உரிமையை நிலை நாட்டி பால் சமத்துவத்தையே போதித்து சமூக மேம்பாட்டிற்கு அன்றிலிருந்து இன்று வரை அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்றன எனலாம்.

**இனியவள்**

# போர்க்களத்தில் வாழ்ந்தவர்களின் எழுத்துக்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன

## இவையே இனி தலைசிறந்த இலக்கியங்களாகும் — செ.யோகநாதன்

ஈழத்தமிழர்களின் உரிமைகள் எவ்வாறு மறுக்கப்பட்டன, மறுக்கப்படுகின்றன, எவ்விதம் கொடூரப்படுத்தப்படுகின்றார்கள், கொடுமைக்குள்ளாகின்றார்கள் என்பதையும், தமிழ் பேசும் மக்கள் எல்லா விதத்திலும் உரிமை பெற்றவர்களாக, உணர்வு பெற்றவர்களாக வாழ்வதற்கு தகுதியுடையவர்கள் என்பதையும் தாயகப் படைப்பாளிகளின் படைப்பிலக்கியங்கள் வெளிக்கொணர வேண்டும். இன்று இவை எந்தளவிற்குள்ளதென்பது எம்மை நாமே கேட்கவேண்டியதாகவுள்ளது. இவ்வாறு தெரிவிக்கின்றார் மூத்த எழுந்தாளர் செ.யோகநாதன்.

ஈழத்தில் பல் துறைசார்ந்த படைப்பாளிகளில் ஒருவரான செல்லையா-யோகநாதன் சிறுகதை, நாவல், குறுநாவல், குழந்தை இலக்கியம், சினிமா,வாழ்க்கை வரலாறு என பல்துறை சார்ந்த படைப்பாளி. இன்றுவரை எண்பது வரையான நூல்களைப் படைத்தளித்த பெருமைக்குரியவர். அரைநூற்றாண்டாக ஈழத்து இலக்கியத் துறையில் தொடர்ந்தியங்கிவரும் அனுபவம் மிக்க மூத்த படைப்பாளி நல்ல படிப்பாளியும் கூட. சமுதாயப்பொறுப்பு மனித நேயத்துடன் தமிழர் பிரச்சினைகளை கலை நயத்துடன் படைப்புக்களாக வெளிக்கொணரும் மக்கள் இலக்கியப் படைப்பாளியான இவர் இன்றுள்ள சிறுகதை, நாவல் எழுத்தாளர்களில் முதன்மையானவர்.

எழுத்தாளரை ஈழத்தமிழ் இலக்கியப் பகிர்விற்காக அவரது இல்லத்தில் சந்தித்தோம். இன்முகத்துடன் வரவேற்று ஈழத்து சிறுகதை இலக்கியம் தொடர்பாக பகிர்ந்துகொண்ட கருத்துக்களை நேர்காணல் வடிவில் வாசகர்கள் முன் வைக்கிறோம்.

தெளிவாக நோக்கும்போது அற்புதங்கள், அதிசயங்களிற்கு அப்பால் மிக உன்னதமான தியாகங்களை அவதானிக்க முடிகிறது. இந்த அற்புதமான கலைச் சூழலில் வாழ்கின்ற நாங்கள் இந்த போர்ச் சூழலை இலக்கியங்களாக பதிவு செய்யவேண்டும். லெனின், மாகோசிங் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம் என பெருமைப்பட்டவர்கள் போல் இன்று தலைவர் பிரபாகரன் காலத்தில் வாழ்கிறோம் எனப் பெருமைப்படவேண்டும.

போராட்ட காலங்களில் ஆயுதத்தையும் பேனாவையும் சம நேரத்தில் தூக்கி சமமாக வழி நடத்தியவர். இதனால் போராளிகள் படைப்பாளிகளாகவும் வளர்ச்சி



இதில் அதிகளவில் ஈடுபட்டு குழந்தை இலக்கியத்தை வளர்க்கவேண்டும். கடந்த கால நிகழ்வுகளை எம் இளம் சமூகத்திற்கு எடுத்துக் காட்டவேண்டும். இவர்கள் இதனை அறியா விட்டால் தத்தாரிகளாகப் போய்விடுவார்கள். உண்மையாக நேர்மையாக விடுதலைக்காக போராடுதல் போன்ற கருத்துக்களை வெளிப்படுத்துகின்ற குழந்தை இலக்கியங்களைப் படைக்கவேண்டும். சீரிய குழந்தை இலக்கியங்களை படைத்து இளம் தலைமுறையினரை சரியான திசையில் செல்ல வழிவகுப்பதற்கான நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம் என குழந்தை இலக்கியத்தின் அவசியத்தை வெளிக்காட்டியவரிடம்.

நாம்:- புலம் பெயர்ந்த எழுத்தாளர் என்ற வகையில் ஈழத்து தமிழ்ச் சூழலையும் தமிழ் நாட்டையும் எவ்வாறு பார்க்கிறீர்கள்...?

செ.யோ:- நாங்கள் புலம்பெயர்ந்தாலும் எங்களது உணர்வுகளும் சிந்தனையும் படைப்புக்களும் தாயகம் தழுவியதாகவே இருந்தது. இருக்க வேண்டும். தமிழ் நாட்டில் நிறைய சஞ்சிகைகளும் பத்திரி

செ.யோ:- கலைச்செல்வி பத்திரிகை நடாத்திய நாவல் போட்டிக்கே நான் முதலில் நாவல் எழுதினேன். "ஞாயிறும் எழுகின்றது"என்ற நாவலிற்கு இரண்டாம் பரிசு கிடைத்தது. இது நூல் உருப்பெறவில்லை. "மலர்ந்தது நெடுநிலா" என்ற குறுநாவல்தான் முதலில் வெளிவந்தது. பல்கலைக்கழக வாழ்க்கையை ஒட்டியதாக "இருபது வருடங்களும் மூன்று ஆசைகளும்" என்ற நாவலை எழுதினேன். இது சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டது.

வெள்ளிப்பாதரசம் ஒரு கூடைக் கொழுந்து ஈழத்துச் சிறுகதைகள் பாகம்-1, பாகம்-2போன்ற சிறுகதைத் தொகுதிகளுடன் "இரவல் தாய்நாடு", "தலைவர்கள்" ,"காணி நிலம் வேண்டும்", "காவியத்தின் மறுபக்கம்", (சிரித்திரன் பரிசு பெற்றது) பழங்குடி இன மக்களை பிரதி பலிக்கும் வகையில் மூன்று பாகங்களாக "கிட்டி" (சாகித்திய பரிசுபெற்றது) "வனமலர்", "முத்தொடர்" என் படைப்புக்களில் குறிப்பிடும்படியானவை. என் அனுபவகங்களும் நான் கடமையாற்றிய பிரதேசங்களும் மக்களின் வாழ்க்கை முறைகளுமே நாவல் எழுதுவதற்கு காரணமென்றும் கூறலாம் என தன் படைப்புக்களை பட்டியலிட்டவரிடம்.

நாம்:- ஆரோக்கியமான படைப்புக்கள், மக்கள் படைப்புக்கள் என எதனையும்....?

செ.யோ:- படைப்புக்கள் இலக்கியங்கள் மக்களிற்குப் பயன்பெறவேண்டும். அதுதான் நிக்கும். எழுதுகிறோம் என்ற போர்வையில் போலி எழுத்துக்களை எழுதுவதைவிட எழுதாமல் இருப்பது நன்று. இப்பிடியானவர்கள் பொழுது போக்கிற்காகவே எழுதுகிறார்கள். மக்களது உணர்வுகளிற்கும் உண்மைகளிற்கும் மதிப்பளித்து அவர்களின் ஊடாகவே அவர்களது

நாம்:- எழுத்துத் துறைப் பிரவேசம் தொடர்பாக...?

செ.யோ:- சிறுவயதில் இருந்து எனது தகப்பனாரின் தூண்டுதலினால் புத்தகங்கள் பத்திரிகைகளைப் படிக்கத் தொடங்கினேன். நாளடைவில் அவற்றில் ஆர்வம் கொண்டு வாசிக்கும் புத்தகங்களின் ஊடான தேடல ஏற்பட்டது. 1950 ஆம் ஆண்டு ஈழகேசரி மாணவா பகுதிக் கவிதை, கட்டுரை எழுதினேன். இவையே நான் எழுதுவதற்கு ஆர்வம் ஊட்டியவை.

கலைச்செல்வி என்ற பத்திரிகையே என்னுடைய முதல் சிறுகதையையும் குறுநாவலையும் வெளியிட்டு எனக்குப்பெருமை தேடித் தந்தது. 1964 ஆம் ஆண்டு "யோகநாதன் கதைகள்" என முதல் சிறுகதைத் தொகுதி வெளியானது. (ஒரு மாணவனால் இலங்கையில் முதன்முறையாக வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதியும் இதுவே)

அன்றில் இருந்து இன்றுவரை பல்வேறு புத்திரிகைகள்,சஞ்சிகைகளில் எழுதி வருகிறேன். வீரகேசரி, ஈழமுரசு, ஈழநாடு, இளமகதிர், மல்லிகை,கலைச் செல்வி, வசந்தம், வெளிச்சம், சிரித்திரன் போன்றவற்றில் கால் பதித்து நடைபயின்ற பெருமைக்குரியவன் என தன் கடந்த கால நினைவ[illegible]ரில் இருந்தவரிடம்.

[illegible]ாம்:- சமகால [illegible]து இ[illegible]ம் தொடர்பா[illegible] தங்களின் ...?

செ.யோ:- கடந்த பத்துவருட காலமென்பது தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கையிலே பொற்காலம் என்று சொல்லலாம். ஒரு போராட்ட காலமாக இருந்தது. இந்த போராட்ட காலத்தில் விடுதலைப் போராட்டத்தினால் தோற்றம் பெற்ற ஆக்கங்கள், இதனால் உருவாகிய கருத்துக்கள் தமிழ் பேசும் மக்களைப் பற்றிய ஓர் உண்மையை வெளிப்படுத்தி நின்றன. எமது தாயகத்தின் எழுச்சியை இலக்கியத்தில் மிக அழகாக வெளிப்படுத்தினார்கள். எம் கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்பாற்றல்கள் சர்வதேச தரத்திற்கு சமமாக உள்ளதனை அவதானிக்க முடிகிறது என பதிலளித்தவரிடம்.

நாம்:- போராட்ட இலக்கியங்களை நீங்கள் எந்த வகையில் நோக்குகிறீர்கள்....?

செ.யோ:- தேசியத் தலைவரின் மதிநுட்பமான விடுதலைப்போராட்டத்தை மிகத்

பெற்றனர்.போராளிகளின் எழுத்துக்கள் போர்க்களத்தில் வாழ்ந்தவர்களின் எழுத்துக்கள் வரத் தொடங்கியுள்ளன. இவைதான் இனி தலைசிறந்த தமிழ் இலக்கியங்களாகத் தோற்றம் பெறும். போர்க்கள இலக்கியத்தையும் வேறு இலக்கியத்தையும் அருகில் வைத்துப் பார்த்தால் உண்மையான இலக்கியம் எதுவென உணரலாமென மிகத் தெளிவாக அனுபவ வெளிப்பாட்டை தெரிவித்தவரிடம்.

நாம்:- தமிழகம்- தமிழீழத்தின் கவிதை பற்றி...?

செ.யோ:- தமிழ்நாட்டில் கவிதை என்றால் சினிமாவிற்கு எழுதுவதுதான் கவிதை என்ற நிலை இருக்கின்றது. ஆனால் எங்களைப் பொறுத்தவரை கவிதைகள் யாவும் அல்லது படைப்புக்கள் யாவும் எங்களது உணர்வுகளை, உணர்வின் இருப்பை, உணர்வின் வெளிப்பாட்டை, உணர்வின் வெப்பச் செறிவை வெளிப்படையாகக் காட்டுவதாக இருக்கின்றது.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கவிதைகளை அங்குள்ளவர்கள் தலைசிறந்த கவிதையாகப் போற்றுகிறார்கள். இவரது கவிதைகளில் போராட்ட உணர்வு உள்ளார்ந்த உண்மை இயல்பாகவே இருக்கின்றது. ஈழத்தவரைத் தவிர இயல்பாக, உண்மையாக நேர்மையாக, நெறிவாய்ந்த கவிதைகளை வேறு எவரும் எழுதவில்லை. கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைகளை எடுத்துப் பார்த்தால் மகாகவி பாரதிக்குப் பிறகு இவரது கவிதையாகவே இன்றைய வாழ்வை மக்களினுடைய உணர்வை போராட்டக் குரலை தெளிவாக உணர்த்தியிருக்கின்றது.

பொய் இல்லை இனிய வார்த்தைகளும் ஆழ்ந்த கருத்துக்களும் இவர்களது படைப்புக்களில் உள்ளன.தமிழகத்தில் சினிமாவும் காதலும் இல்லை என்றால் கவிதை இல்லை என்ற நிலையேயுள்ளதென விபரித்தவரிடம்.

நாம்:- குழந்தை இலக்கியம்பற்றி..?

செ.யோ:- குழந்தை இலக்கியங்கள் அழகான வர்ணப்படங்களுடன் வெளிவரவேண்டும். இளம் தலைமுறையினரிற்கு நேரிய வாழ்வை சொல்வதான கதைகளை நாம் கொடுக்கவேண்டும். கதைகளைக் கொடுப்பதற்கான அச்சு வசதியோ வெளிப்பாட்டு வசதியோ எங்களிற்கு குறைவென்றே நான் கருதுகிறேன்.

கைகளும் வெளியிடப்படுகின்றன. ஈழத்தில் ஒரு சஞ்சிகையின் 500 பிரதிகூட விற்பனை செய்யமுடியாது. வாசகர் வட்டமும் மிகக் குறைவாகவேயுள்ளது. இங்கு நல்ல படைப்பாளிகளைத் தோற்றிவித்துள்ளோம். அவ்வப்போது ஒரு சில படைப்புக்களையும் படைத்திருக்கிறோம் என்றவரிடம்.

நாம்:- தங்களது படைப்புக்களில் போராட்ட விழுமியங்கள் மேலோங்குவதாகக் கூறப்படுகின்றது...?

செ.யோ:- எங்களது மக்களிற்கு மக்களினுடைய அடிமைவாழ்க்கை, போராட்டம் எழுச்சி என்பவற்றை தெரியப்படுத்திஅவர்களை எங்கள் பக்கம் ஈர்க்கவேண்டும் என படைப்புக்களும் இவற்றை நிலை நிறுத்தியே வெளிவந்துள்ளன. நான் எழுதிய கதைகள் அவற்றின் ஆர்க்கோசத்திற்காகவே அரசினால் தடை செய்யப்பட்டது.

18 வயது இளைஞன் பொலிசாரினால்

**— இரா-வின் —**

தேடப்படுகின்றான். அவன்படும் அவலங்களை அம்பலப்படுத்திய "தேடுதல்"என்ற குறுநாவல்.

எமது பிரச்சினைகளை சர்வதேசமயப்படுத்தி அரசியல் குறுநாவல் எப்படி இருக்கவேண்டுமென்பதை மிக நேர்த்திய "இரவல் தாய் நாடு " என்ற குறுநாவல் மூலமாக என் எண்ணங்களை வெளிக்கொணர்ந்தேன். (1981)கணையாழி சஞ்சிகையில் தொடராக வந்த கதையை நாவலாக்கி தேசியத் தலைவர் வே.பிரபாகரனிற்கு சமர்ப்பணம் செய்தேன். இதன் காரணமாக அப்பொழுது இலங்கையில் இந்நாவல் பறிமுதல் செய்யப்பட்டது. ஜேர்மன் மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டதென்பதும் குறிப்பிடவேண்டியது.

ஒரு இளைஞன் எவ்வாறு தமிழ்ப் போராட்டத்தில் பங்கேற்கிறான். எவ்விதம் போராட்டத்தை முன்னெடுக்கின்றான் என்ற கோணத்தில் "ஞாயிறும் எழுகின்றது" என்ற குறுநாவலை எழுதினேன். இப்படி என்படைப்புக்களின் அநேகமானவற்றில் விடுதலை வேண்டியதான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன என சற்று அமைதியானவரிடம்.

நாம்:- சிறுகதைகள் எழுதிய நீங்கள் நாவல் எழுதத் தொடங்கியது...?

பிரச்சினைகளை வெளிக்கொணரும் கோணத்தில் படைப்புக்கள் அமையவேண்டும். மக்களின் தேவையையும் அவசியத்தையும் உடனுக்குடன் வெளிப்படுத்தவேண்டுமென்றவரிடம்.

நாம்:- படைப்பாளிகள் பற்றி, படைப்பாளி- படிப்பாளி என்ற வகையில்....?

செ.யோ:- இவர்கள் மக்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். எமது வாழ்க்கையில் வாழ்வின் காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களைக் கற்றுக்கொண்டு அவற்றை இலக்கியமாக எழுதுவதன் மூலமாக நல்ல எதிர்காலத்தை உருவாக்கமுடியும். இதைவிட படைப்பாளியின் கருத்து தன் தலைமுறைக்கும் எதிர்கால சந்ததிக்கும் ஆழமான வகையில் கட்டுக்கோப்புடன் சொல்லவேண்டியது காலத்தின் தேவை. கடந்த கால சம்பவங்களை ஒரு சிலர் இலக்கியமாகப் படைத்துள்ளனர் என தன் கருத்துக்களை நிறைவு செய்தார் செல்லையா-யோகநாதன்.

இலக்கியக் களத்தில் நின்று நிதானித்து செயல்பட்டு வரும் செ.யோகநாதன் பல விருதுகளிற்கு சொந்தக்காரர். 64 வயதுடைய எழுத்தாளர் பேராதனைப் பல்கலைக் கழகப் பொதுப்பட்டதாரி. முன்னாள் மட்டக் களப்பு வாகரைப் பிரதேச செயலக உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றியவர். இலங்கை சாகித்திய மண்டலப்பரிசு (4தடவை)தமிழக அரசின் எழுத்தாளர் விருது (4தடவை) கணையாழி குறுநாவல் விருது (4தடவை) சாந்தோம்அமைப்பின் இலக்கிய விருது என இன்றும் பல விருதுகளுடன் பல தங்கப்பதக்கங்களையும் தனதாக்கிக்கொண்ட பெருமைக்குரியவர்.

மூத்த கலை இலக்கியப்படைப்பாளியான இவர் இப்பொழுதும் எழுதிக்கொண்டிருக்கின்றார். சற்றுநோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்தபோதிலும் மிகத்தெளிவாக தன் நிலை மாறாது நேர்த்தியான கலை நயத்துடன் எழுதி வருகிறார். மார்க்ஸிச சிந்தனை வெளிப்பாடுகளைத் தன்னகத்தே கொண்ட எழுத்தாளர். தமிழரசுக் கட்சியின் இளம் தமிழர் இயக்கத்தின் பொருளாளராக இருந்து இயக்கம்சார்பான் முன்னெடுப்புக்களில் முன் நின்று உழைத்தவர் இதன் வெளிப்பாடுகளே இவரது படைப்புக்களில் மேலோங்கியுள்ளதை அவதானிக்க முடிகிறது.



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 13**

**பகுதி -56**

அடுத்த வாரம் விளையாட்டறைக்கு வந்த டிப்ஸ் மிகவும் மகிழ்ச்சியாகக் காணப்பட்டான்.

"இண்டைக்கு என்னக் கூட்டிக் கொண்டு போக அம்மா வாறது கொஞ்சம் பிந்தும்" என்றான்.

"ஓம். எனக்கு தெரியும். தான் சில வேளை பிந்தி வரக்கூடும் எண்டு எனக்குச் சொன்னவ" என்று பதில் சொன்னேன்.

"ஏதோ வேலைக்கெண்டு போயிருக்கிறா. அவ திரும்பி வாறவரை நான் இங்க இருக்கலாம் எண்டு சொன்னவ. உங்களோட கதைச்சு அதுக்கு ஒழுங்கு செய்திருக்கிறதாச் சொன்னவ"

"ஓமோம்" என்றேன் நான்.

முகத்தில் புன்னகை மலர்ந்திருக்க அறையைச் சுற்றி வந்தான்.

" நான் பாடலாம் எண்டு நினைக்கிறன்" அறிவிப்பாக வெளிவந்தது அவன் குரல்.

"நீங்கள் பாடவிரும்பினால் பாடுங்கோ" என்றேன். அவன் சிரித்தான்.

" அப்ப... நான் அமைதியா இருக்க விரும்பினா அமைதியா இருக்கலாம்!" என்று உற்சாகம் தோய்ந்த குரலில் சொன்னவன் தொடர்ந்து "நான் யோசிக்க




விரும்பினால் யோசிக்கலாம் விளையாட விரும்பினால் விளையாடலாம்... அப்பிடித்தானே?" என்று கேட்டான்.

"ஓம் அப்பிடித்தான்" என்றேன்.

சித்திரம் வரையும் பீடத்துக்குச் சென்றவன் தீந்தைகளை பார்த்தான். நீலத் தீந்தையுடன் இருந்த சாடியைத் தூக்கிக் கொண்டான். பிறகு பாடத்தொடங்கினான். பாடும்பொழுது, தீந்தைச் சாடியை உயரே தூக்கிப் பிடித்து பாடலின் சந்தத்துக்கு அமைவாக ஒரு பக்கமிருந்து மறுபக்கமாக நகர்த்திக்கொண்டிருந்தான்.

ஓ வர்ணமே நீல வர்ணமே  
உன்னால் என்ன செய்யமுடியும்?  
ஒரு வானத்தை நீ வரையலாம்  
ஒரு நதியையும் நீ வரையலாம்  
ஒரு மலரையும் நீ வரையலாம்  
ஒரு பறவையையும் நீ வரையலாம்  
நீலமான அனைத்தையும் நீ வரையலாம்  
நீலமாய் நீ வரைகையிலே  
அவை மிக நீலமாய் தெரியுமே  
என் அருமையான  
நீல வர்ணமே!

தீந்தைச் சாடியுடன் என்னை நோக்கி வந்தான்.

அது தெறிக்கும் ஆறு வழியும்  
அது ஓடும் கீழேயும் விழலாம்  
என் அருமையான நீல வர்ணம்  
அப்பிடியும் செய்யும்.

அவன் தொடர்ந்து பாடினான். பாடும் போதே வார்த்தைகளைக் கோர்த்துக் கொண்டான்.

அது அசைகின்ற ஒருவர்ணம்  
அசைந்து அசைந்து கொண்டே  
இருக்கும் நீலம்!  
ஓ... நீலம்! ஓ...நீலம்!

தான் பாடும்பொழுதே சாடியை முன்னும் பின்னுமாக அசைத்தான். பின் அதைக் கொண்டுபோய் சித்திரம் வரையும் படத்தில் வைத்து விட்டு பச்சை வர்ணத் தீந்தை இருந்த சாடியைத் தூக்கிக்கொண்டான்.


ஓ பச்சை வர்ணமே!  
நீ எவ்வளவு பச்சை  
அமைதியான அழகான நீ  
வசந்தத்தில் என்னை சூழ்ந்திருப்பாய்  
இளவேனிலிலும் சூழ்ந்திருப்பாய்  
இலைகளிலும் புற்களிலும்  
பற்றைகளிலுமாய் சூழ்ந்திருப்பாய்  
ஓ! பச்சையே ஓ! பச்சையே  
என் அருமையான பச்சையே!

பச்சை வர்ணத்தை வைத்து விட்டு கறுப்பு வர்ணத்தைத் தூக்கிக்கொண்டான்.

ஓ கறுப்பே! ஓ இரவே!  
ஓ கடும் கறுப்பே!  
சூழ இருந்து என்னிடம் வருவாய்  
நிழல்களிலும் கனவுகளிலும்  
புயல்களிலும் இரவுகளிலும்  
என்னிடம் வருவாய்  
என் அருமையான கறுப்பே!  
ஓ கறுப்பே! என் கறுப்பே!

இந்தச் சாடியையும் வைத்துவிட்டுச், சிவப்பைத் தூக்கிக்கொண்டான். அதை எனக்குக் கிட்டவாகக்கொண்டு வந்தான். கைகளால் பொத்திப் பிடித்தபடி மேலே தூக்கிப் பிடித்தான். இப்போது கொஞ்சம் இறுக்கமான குரலில் வார்த்தைகள் வெளிவந்தன.

ஓ சிவப்பு! கோபமான வர்ணமே!  
சீற்றமான வர்ணமே  
குருதி எவ்வளவு சிவப்பு  
வெறுப்பிலே வெறியிலே பயத்திலே  
ஆரவார சண்டைகளிலே  
ஒட்டிக்கொள்ளும் சிவப்பு  
வெறுப்பிலே குருதியிலே கண்ணீரிலே  
இருக்கின்ற சிவப்பு.



தன் கையிலிருந்த சாடியைக் கீழே பதித்தான் அமைதியாக நின்றபடி அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பின் ஆழமான பெருமூச்சொன்று அவனிடமிருந்து கிளம்பியது. சாடியை பீடத்தில் மீளவைத்து விட்டான். இப்போ மஞ்சள் வர்ணத்தைத் தூக்கிக் கொண்டான்.

" ஓ அற்பமான நிறம் கொண்ட வர்ணம்.... ஓ கோப மான... அற்ப வர்ணம்.... மரங்கள் உள்ளே வராமல் தடுக்கும் ஜன்னல்களில் இருப்பாய் பூட்டோடு இருக்கும் கதவில் இருப்பாய். பூட்டு கின்ற சாவியிலும் இருப்பாய். உன்னை வெறுக்கின்றேன் மஞ்சளே....! அற்பமான வர்ணமே சிறைகளின் வர்ணமே... தனிமையாகவும் பயத்தோடும் இருக்கிறதை குறிக்கிற வர்ணமே ஓ! அற்பமான நிறம் கொண்ட மஞ்சளே!" என்று கூறிவிட்டு அந்தச் சாடியை மீண்டும் பீடத்தில் வைத்துவிட்டான்.

ஜன்னலை நோக்கி நடந்து சென்ற அவன், வெளியே பார்த்தான்.

"இது ஒரு அழகான நாள்" என்றான்.

"ஓம் அழகான நாள்தான்" பதிலாக நான் சொன்னேன்.

அவன் அங்கேயே நின்றபடி நீண்ட நேரம் வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். நான் அமர்ந்திருந்தபடியே, தீந்தைகளின் நிறங்களுடன் விடயங்களை தொடர்பு படுத்தும் தன் எண்ணங்களை இப்போது ஏன் வெளிப்படுத்தினான் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். மஞ்சள் நிறத்துடனான தொடர்பை ஏன் இவ்வளவு வெறுப்பான முறையில் வெளிப்படுத்தினான்?

அவன் திரும்பவும் சித்திரம் வரையும் பீடத்துக்குச் சென்றான் " இந்த மங்கல் நீலத் தீந்தை புதிசாக இருக்கிறது" என்றான்.

"ஓம் அது புதுசுதான்" என்றேன் நான்.

அவன் இரண்டு பெரிய வரையும் தாள்களை சட்டத்தில் பொருத்திவிட்டான். பின், அந்த வெளிர் நீலத் தீந்தையை ஒரு தூரிகையைக்கொண்டு கவனமாக கலக்கினான். பின் தூரிகையைக் கொண்டு சென்று நீர்க் குழாயின் கீழ் பிடித்துக்கொண்டு நீரை அதன் மீது ஓட விட்டான்.

"இஞ்ச பாருங்கோ! இது தண்ணிய நீல நிறமாக்குது" என்றான். பின் தனது விரல்களை குழாயின் வாயில் வைத்து அழுத்த தண்ணீர் அறையினுள் விசிறியடித்தது. மகிழ்ச்சியான சிரிப்புடன் அவனது குரல் உரத்து ஒலித்தது. தண்ணி வெளியில பாஞ்சது... வெளியில பாஞ்சது... ஓம் வெளியில பாஞ்சது" என்று கத்திச் சொன்னான்.

"நான்... இந்த டிப்ஸ்ஸால தண்ணிய தாரையாக்க ஏலும் தண்ணியின்ர நிறத்த நீலமாக்கவும் ஏலும்"

"உங்களால ஏலும் எண்டு எனக்கு தெரியுது" என்று நான் சொன்னேன். அவன் தூரிகையை தொட்டிக்குள் போட அது வழுக்கிக் கொண்டு வடிகால் குழாயினுள் போனது. எட்டி அதை பிடிக்க டிப்ஸ் முயன்றாலும் அவனால் அதைப் பிடிக்க முடியவில்லை. அது குழாய்க்குள் முழுமையாகப் போய்விட்டது.

"ஓ! இவர் நல்ல ஆள்தான். என்னால் ஆள வெளியில எடுக்க முடியேல்ல. கண்ணுக்குத் தெரியாம கீழ போயிற்றுது. ஆனா அது குழாக்குள்ளதான் இருக்குது. கீழ்க் குழாய்க்குள்ள·விழுந்திட்டுது"

அலுமாரிக் கதவுகளை திறந்து தொட்டிக்குக் கீழே குனிந்து குழாய்களைப் பார்த்தான். "ஒண்டுமே செய்யேலாது" என்றவன் மனம் விட்டுச் சிரித்தான்.

" ஓம் அந்தத் தூரிகை குழாக்குள் போயிற்றுது" என்று நான் சொன்னேன்.

அவன் குழாய் நீரோடு விளையாடினான். அவன் அதைத் திறந்து விட்ட வேகத்தில் தண்ணீர் அறைக்குள் சிதறியடித்தது. சூப்பிப் போத்தலை எடுத்த அவன் அதை நீரால் நிரப்பிக் கொண்டான். சூப்பியை எடுத்த அவன் போத்தலில் அதைப் போட முயன்றான். ஆனால் போத்தல் ஈரமாகி வழுக்கிக்கொண்டிருந்ததால் அது சாத்தியமற்றதாக இருந்தது. சூப்பியை மட்டும் எடுத்து சூப்பத் தொடங்கினான். போத்தலை தொட்டிக்குள் வைத்த அவன் நீரை அதன் மேல சொரியவிட்டான். பின் தொட்டியிலிருந்து நீர்வெளியேறும் துவாரத்தில் போத்தலை வைத்து விட தொட்டியில் நீர் நிரம்பத் தொடங்கியது. அந்தத் தொட்டியில் குடிப்பதற்கென இருந்த நீர்த்தாரையை திறந்து விட்டு , சூப்பியை சப்பியபடி, முகத்தை நனைத்துக் கொள்ளும் விதத்தில், நீர்த்தாரைக்கு அருகாக முகத்தைப் பிடித்துக்கொண்டான்.

"தண்ணி மேல வருகுது கழுவு... கழுவு... கழுவு"

அழுக்கான இரண்டு வெற்றுத் தீந்தைச் சாடிகளை எடுத்துத் தொட்டியினுள் வைத்தான். பின் றாக்கையில் ஒரு தொகுதி பிளாஸ்ரிக் கோப்பைகள் இருப்பதை கவனித்த அவன், தீந்தைச் சாடிகளை எடுத்து விட்டு, பிளாஸ்ரிக் கோப்பைகளை தொட்டிக்குள் போட்டான். சத்தமாக சிரித்தபடி மேலும் கீழுமாகத் துள்ளிக் குதித்தான்.

(தொடரும்)

---

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், நாடகக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் ஒரு சிலர்தான் அப்போது அக்கால சூழ்நிலையை தீவிரமுடன் எதிர்கொண்டார்கள்.

அக்காலச் சூழலிலும் சரி இப்போதும் சரி நாம் விடுதலையை பெறவில்லை. எமது போராட்டம் இன்னமும் முற்றுப்பெறவில்லை. அப்போதும் அது சரி இப்போதும் சரி எமது படைப்புக்களில் எத்தகைய படைப்புக்களாக இருந்தால் என்ன கருத்துத் திணிப்பும் மறைமுக/நேரடிப் பிரசாரமும் இருக்கத்தான் செய்யும். அது காலத்தின் தேவை.

படைப்புக்களில் அழகியல் அம்சம் நிராகரிக்கக்கூடியதல்ல. ஆனால் எமது சூழலும் தேவையும் முதன்மை பெறும்போது அழகியல் அம்சத்தினை மாத்திரம் தூக்கிப் பிடிக்கமுடியாது.

உயிர் வாழ்வதற்கான போராட்டம் நிகழும்போது கஞ்சி குடிக்கத்தான் வழி இருந்தது. அதற்கு மேல் கனவு கூட காணமுடியாது.

இப்போது எல்லாப்பக்க வெளிப்புகள் ஊடாகவும் எல்லாமே வருகின்றனதான். அவற்றில நல்லவையும் உண்டு, தீயவையும் உண்டு. புதியவைகள் நல்லவைகள் மூலம் நாம் பாடம் படிக்கத்தான் வேண்டும். நவீனத்துவங்களை நாங்கள் கேலி செய்ய முடியாது பொருந்த மானவற்றை எம்முடன் சேர்த்துக்கொள்ளத்தான் வேண்டும். அதற்காக நாம் பட்ட கஷ்டங்களை, வேதனைகளை மறந்து போய்விடக் கூடாது.

எமது போராட்டம் வாழ்வதற்காக இருக்கையில் இப்போது புளிச்சல் ஏவறைக் கதைகளை நாம் கதைக்கலாமா? பல பேருக்கு தெரியாமல் இருக்கலாம். வன்னியின் பரந்த நிலப்பரப்பில் நாடகக் காரர்களும் கூத்தாடிகளும் எவ்வாறு தம் பணியைச் செய்தார்கள் என்று புதுக்குடியிருப்பு, மல்லாவி, பூநகரி, கிளிநொச்சி, அக்கராயன், வன்னேரிக்குளம் என்று வன்னியின் மூலை முடுக்கெல்லாம் இந்த நாடகக் கலைஞர்கள் சைக்கிள் வண்டி மூலம் இரவு பகல் பாராது சைக்கிள் உழக்கி நாடகம் போட்டார்கள். கூத்தாடினார்கள். செலவழித்துச் செயற்பட நிதி இல்லாமல் இருக்கின்ற குறைந்த வசதிகளை வைத்துக்கொண்டு எமது மக்களிடம் உணவு வாங்கிச் சாப்பிட்டு தம் பணி செய்தார்கள்.

ஆண்களும் பெண்களுமாக வயது வேறுபாடு இல்லாது இந்த நாடகப் பணியைச் செய்தார்கள். அவ்வாறாக அந்த நாடகங்களை மூலைக்கு மூலை- சந்திக்குச் சந்தி , தெருவுக்குத் தெரு நின்று மக்களும் பார்த்தார்கள்.

அவ்வாறு கஷ்டப்பட்ட கலைஞர்கள் தான் இப்போது வெளிநாட்டுக்குப் போய் தம் வித்துவத் தன்மையைக் காட்டிவிட்டு தாயகம் திரும்பியுள்ளார்கள்.

எல்லாமே போய்விட்டது. எமக்கு வளங்கள் இல்லை. வாய்ப்புக்கள் இல்லை. என பாலாமாஸ்டர், புதுவை அன்பன் போன்ற நாடகவிற்பன்னர்கள் சோர்ந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்பது பற்றி நாங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நாங்கள் சகல துறைகளிலும் முன்னேறி உலகத்தில் தலை நிமிரவேண்டும். அதற்கான போராட்டம்தான் இப்போது நடக்கின்றது.

அதைவிடுத்து எங்கள் செயற்பாடுகளை கொச்சைப்படுத்தி இனிமை காண யாரும் முனையவேண்டாம்.

ஒரு காலத்தில் தம்மை பெரும் கவிஞர்களாக, புத்திஜீவிகளாக, புலமை சார்ந்த கனவான்களாக பாவனை பண்ணிய பலர் எமது விடுதலைப் போராட்டத்தினை கொச்சைப்படுத்தினார்கள்.

அத்தகையவர்கள் பலர் இப்போது மனம் மாறியோ கொள்கை மாறியோ விடுதலைப் போராட்டத்தை நேசிக்க, பாராட்ட ஆரம்பித்துவிட்டார்கள்.

ஆனால் உண்மையில் சூழலை சூழலின் யதார்த்தத்தை நாங்கள் புரிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் எதுசரி எது பிழை என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இப்போது எந்த நெருக்கடியும் இல்லாமல் சிலரால் சஞ்சிகைகளை வெளியிட முடிகின்றது. கட்டுரைகளை எழுதமுடிகின்றது.

போராட்டச் சூழலை, தேவையை புரிந்து கொள்ள முடியாத பலர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தம்புலமையை காட்ட முனைகின்றார்கள். எதையும் ஆழமாக நுட்பமாகப் பார்க்காமல் இவ்வாறு செயற்படுவோர் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலா!*

*நாகரிகம் என்று சொல்லி ஒரு சில ஆங்கில சொற்களையே திரும்பத் திரும்ப கதைக்கும் தமிழர்களை என்ன செய்யலாம்?*

*ஆ.ஆனந்தி,*
*ஆயப்பகுதி, புளியங்குளம்.*

'பேசா'மல் விட்டு விடலாம்...!

*பாவலா!*

*பொதுக்கட்டமைப்பைக் கூட புலிசார்பாகத்தானே பார்க்கிறார்கள் சிங்களப் பேரினவாதிகள் இவர்களை என்ன செய்யலாம்?*

*றொசானி,*
*அரியாலை.*

மிரண்டவன் கண்களுக்கு இருண்டதெல்லாம் பேயாத்தான் தெரியும். இதற்கு ஒன்றுமே செய்ய முடியாது. இது பிறவிக்குணம் மாறவே மாறாது

*பாவலா!*

*உயர் நீதிமன்றத் தீர்ப்பினபடி இனவாத சிங்கள தேசம் தமிழ் மக்கள் தொடர்பில் எதை செய்ததோ அதைத்தான் இப்பவும் செய்திருக்கிறது?*

*செ.துஜி,*
*ஜெயந்திநகர்.*

சிங்கள நீதிமன்றம் தமிழருக்கு நீதியாக நடக்க சிங்களச் சட்டங்கள் அனுமதிக்கப்போவது கிடையாது என்பது மீண்டும் அழுத்தம் திருத்தமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

*பாவலா!*

*அரச வாழ்வை தூக்கி எறிந்துவிட்டு தர்மத்தின் வழி சென்றவர் பௌத்தன். ஆனால் இன்று சிறிலங்காவில் பௌத்த தர்மத்தை போதிக்கின்றவர்கள் ஆயுதங்களுடனும், அரசியலுடனும் தானே செல்கிறார்கள்?*

*தே.சுமன்,*
*திருநாவற்குளம்.*

இவர்கள் புத்தர்கள் அல்ல... காவியுடையை தூக்கி எறிந்துவிட்டு மீண்டும் ஆயுத அரசியல் நடத்த வந்துள்ள சித்தார்த்தர்கள்...!

*பாவலனே!*

*சிங்கள தேசத்தினை பொறுத்தவரை அடி உதவுவது போல் வேறொன்றும் உதவ மாட்டாது என நான் நினைக்கிறன் நீர்....?*

*ரூபன்,*
*கட்டுடை.*

அடியாத மாடு 'படி'யாது என்பது அரசியலிலும் பொருத்தமான ஒன்றே...!

*பாவலனே!*

*பாவலா- ஒரு நாட்டின் வரலாறு எப்படியிருக்கவேண்டும்?*

*விந்துஜா,*
*நல்லூர்.*

அது உதிரத்தால் எழுதப்படாததாக இருக்கவேண்டும்... மகாவம்சம் போல் பொய்யும் புரட்டும் கொண்டதாய் கற்பனையால் எழுதப் படாததாகவும் இருக்கவேண்டும்.

*பாவலா!*

*காலம் தமிழர்களுக்கும்- சிங்களவர்களுக்கும் என்ன சொல்லப போகிறது.?*

*வி.சுதா,*
*புதுக்குடியிருப்பு.*

உண்மையும் தர்மமும் வெல்லும் என்பதையே கூறப்போகிறது.

*பாவலா!*

*லண்டன் தொடர் குண்டுவெடிப்பின் போது 50 பேர் கொல்லப்பட்டமைக்கு சிறிலங்கா சனாதிபதி கண்டித்திருக்கிறார். ஆனால் கடந்த கால அவரது ஆட்சியின் ஒரு தடவையில் பலநூறு தமிழர்கள் கொல்லப்பட்டதை யாரறிவார்?*

*யோ.யுனோ,*
*குட்சைட்றோட்.*

தமிழர்களைக் கொன்றது அவரது படையினர்... அவரால் எப்படிக் கண்டிக்க முடியும்... எய்தவனே தன்னைக் கண்டிக்க முன்வருவானா?.

*பாவலனே!*

*தனியார் ஊடகங்கள் மீது சனாதிபதி கடுமையாக சீற்றம் கொண்டுள்ளார். ஏன் உண்மையை சொல்கின்றன என்பதற்காகவா?*

*த.நிறோசா,*
*கந்தபுரம்.*

ஆமாம் உண்மை சுடுமல்லவா? அரச ஊடகங்கள் அம்மணிக்குத் துதிபாடும்... தனியார் ஊடகங்கள உண்மையின் பக்கம் தானே நிற்கும்!

*பாவலா!*

*நாங்கள் இன்றைய நிலையில் என்ன செய்ய வேண்டும்?*

*டென்சி,*
*வவுனியா.*

சிறுமைகண்டு பொங்கும் போர்க்குணாம்சத்தைக் கைவிடாதவர்களாக, விழிப்புணர்ச்சியும், சுதந்திர எழுச்சியும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

*பாவலா!*

*பொதுவாக உலகம் வறுமைபற்றியும் மனித உரிமை பற்றியும் பேசுகிறதென்றால் அதன் உண்மையான அர்த்தம் என்னவாக இருக்கும்?*

*சுமி,*
*மானிப்பாய்.*

உலகில் வறுமை வளர்கிறது... மனித உரிமைகள் தேய்கின்றன என்றுதான் அர்த்தம்.



## தெருப்பேச்சு

"என்னமாரி, உங்கட பக்கம் நிவாரணப்பணியள் நடக்குதோ"

"ஏனில்லாம, "நியாப்" பால கூட்டம் வைச்சு குள வேலையள செய்து தருகினம்"

" வலுக்குறைந்தோர் புனர்வாழ்வால கூட்டம் வைச்சு இயலாதவைக்கு உதவிசெய்யப் போகினம்"

" நேற்று" யூஎன்னெச்சியாரால வந்து நுளம்புவலையும் பிளாஸ்டிக் சமானுந்தந்தவை"

"முந்தநாள் "நிக்கொட்டால வந்து மண்வெட்டி, கோடாலி, குப்பை வாரியெண்டு விவசாய உபகரணந்தந்தவை"

''பொம் பிளையள முன்னேறவெண்டு போறூட்டால கூட்டம் வைச்சுச் சொன்னவை"

"எங்க மணியண்ணையக் காணேல்ல"

"ஊரக வளர்ச்சிக் கூட்டம் நாளைக்கு சனத்துக்கு சொல்லப் போனவர்...அ... அந்தா வாறார்.

" என்ன சுணங்கிப் போச்சே, கமக்குழு கூட்டமொண்டு அதுதான் போட்டு வாறன்"

"என்ன பள்ளிக் கூடம் நேரத்துக்கு விட்டிட்டுது"


"பெற்றார் நலன் விரும்பியளுக்குக் கூட்டமாம். நாங்களும் போகவேணும்"

"கமக்காற வங்கியில உள்ளவை நில்லுங்கோ விதை தானியங்கள் தரப்போகினம்"

"வீடமைப்புக்கு பேர் தந்தவைய விதானையார் நிக்கச் சொன்னவர்..."

"ம்...ஒவ்வொரு நாளும் கூட்டங்கூட்டமெண்டு திரிய போட்ட பயித்தங்கொடி காயுது. வயலுக்க மாடு பூந்திட்டுது. வேலைய விடுங்கோ, நாங்களே எல்லாந்தாறமெண்டு வந்தா நாங்களெப்பிடி உழைக்கிற. கண்டறியாத கூட்டங்கூட்டங் கூட்டம்"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –129



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –129**

....................................................................
....................................................................
....................................................................
....................................................................

பெயர் : ....................................................
முகவரி : ....................................................
....................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –128



**விழியரசி,**
**1ஆம் வட்டாரம்,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*இனவாதம் கொடுமை செய்தால்*
*ஈழப்போர் தொடுப்போம்*
*இயற்கையே நீ கொடுமை செய்தாய்*
*இப்படி நாம் தவிக்கிறோம்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*கரையைத் தேடி திடமான மனதுடன்!*
*கழுத்தளவு நீரிலும் பயணிக்கின்றாய்!*
*கலங்கிடாதே! நீ காவிடும் உன் மகன்*
*காத்திடுவான்! உன்னையும் நாளைய தேசத்தையும்!*

கி.உதயா,
வள்ளிபுனம்.

*தந்தையின் மீதே தவண்டு வரும் தங்கமகனே*
*பாரறியா மகனே தண்ணீருக்குள் தஞ்சமா*
*எழுந்திடுவார் வீறுடனே இப்பூமிதனில்*
*விழித்திரு மகனே விடியுமிக்காலம்.*

செ.குமுதினி,
இல.30/1, உதயநகர் மேற்கு.

*அகிலமெல்லாம் அதிரவைத்த ஆழிப்பேரலையே*
*அழகிழந்த ஓவியமாக நெஞ்சில் அணைத்த பிள்ளையை*
*துன்பப்பட்டு சுமை சுமந்துவரும் இன்பத்தை தொலைத்து*
*சாதனை படைக்கவல்ல மனிதத்தை விடியல்*
*உதிக்கப்புறப்படு!*

யே.கிறிஸ்ரபெல்,
வஞ்சியன்குளம், வங்காலை.

*தலை மேல் நிற்கும்*
*தமிழீழ வாரிசே*
*அலை அழித்தாலும்*
*விலை போகமாட்டாய்*

சிவா,
பருத்தித்துறை.


இப்போட்டிக்கான பரிசினை வழங்குவோர்



அருச்சுனா
புகைப்படக்கலையகம்
கிளிநொச்சி புதுக்குடியிருப்பு

# மக்கள் போராட்டங்கள்









"கேட்டுப்பெறமுடியாததை போராடித்தான் பெறவேண்டும்", போரா சமாதானமா? சமாதானம் வேண்டாம் போருக்குஆணையிடுங்கள் என மக்கள் வீதிக்கு இறங்கி கோஷமிட்டுத்தமது அதிருப்திகளை வெளிப்படுத்தி வரும் போராட்டங்கள் தாயகமெங்கும் அதிகரித்துவருகிறது. இத்தனை கால சமாதான முயற்சிகளிலும் பெற்றுக்கொண்ட பாடம் தொடரும் நிழல் யுத்தமும் நீதிமன்றத்தடையும். இனியும் பொறுத்தது போதும் என்கிற நிலைக்கு வந்துவிட்டதமிழ் மக்கள் தமது தாயகம் நோக்கிய பயணத்தை விரைவுபடுத்தும் வகையில் தமது தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்ற நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை வடமராட்சி கிழக்கு மக்கள் நடத்திய வெகுஜன போராட்டங்களின் போது எடுக்கப்பட்ட படங்களையும் அப்போது தேசியத்தலைவர் அவர்களுக்கு போரைத்தொடங்குமாறு வேண்டி மகஜர் கையளிப்பட்ட படத்தையும் காணலாம்.

படங்கள் -வீ.பிரதீபன்







இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.